The "Bharati." Reg. No. 2456.

ஆங்கீரஸ-புரட்டாசி
1932-ஞு செப்டெம்பர்-அக்டோபர்மீ




மாலை 4. மணி 6.

# ஓர் செந்தமிழ்
# மாதப் பத்திரிகை.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

197883

# பாரதி

## ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.


ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.



| மாலை | ஆங்கீரஸ-புரட்டாசி | மணி |
| --- | --- | --- |
| 4 | 1932௵ செப்டம்பர்-அக்டோபர்மீ | 6 |


## தெய்வ வலி.

காற்றடிக்குது கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகனே!
தூற்றல் கதவு சாளரமெல்லாந்
தொளைத் தடிக்குது பள்ளியிலே.

வானஞ் சினந்தது; வையம் நடுங்குது
வாழி பரா சக்தி காத்திடவே
தீனக் குழந்தைகள் துன்பப்படாதிங்கு
தேவியருள் செய்ய வேண்டுகின்றோம்.

நேற்றிருந்தோ மந்த வீட்டினிலே இந்த
நேர மிருந்தால் என் படுவோம்?
காற்றென வந்தது கூற்றமிங்கே நம்மைக்
காத்தது தெய்வ வலிமையன்றோ?

—பாரதியார்.

# எழுந்திரடா தமிழா!

திரு. வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

### பல்லவி.

தருமம் இதுவே! தருணம் இதுவே
தமிழா எழுந்திரடா!

### அநு பல்லவி.

கருணையின் வடிவாம்—கலைகளின் முடிவாம்
காந்தியென் றொருமுனி—போந்துனை யழைக்கிறார். (தரு)

### சரணங்கள்.

1. வள்ளுவர் வாழ்க்கையும் திருக்குறள் வகுத்ததும்
தள்ளருந் தாயுமா னவருடல் தகித்ததும்
வள்ளலி ராமலிங்க சுவாமிகள் வடித்ததும்
கள்ளமில் பட்டினத்தார் கவலையும் இதுவே. (தரு)

2. கம்பன் கவித்திரமும் வில்லியின் சந்தமும்
செம்பொருள் சேக்கிழார் தேடித் தெரித்ததுவும்
பைம் பரஞ்சோதியார் பாடிப் பகர்ந்ததுவும்
நம்பின யாவரும் நவின்றனர் இதுவே. (தரு)

3. நால்வர்தே வாரமும் ஔவைநன் மொழிகளும்
ஆழ்வா ராதியார் அனுபவ உரைகளும்
பால்வருந் திருப்புகழ் ஆதிய பனுவலும்
மேல்வருங் கதிக்கென விளம்பிய திதுவே. (தரு)

4. சைவர்கள் பூண்டதும் சமணர்கள் மாண்டதும்
வைணவர் வருத்தமும் புத்தர்கள் வாட்டமும்
மையறக் கிறிஸ்துதான் சிலுவையில் மரித்ததும்
மஹம்மது நபியவர் மகிழ்ந்ததுவும் இதுவே. (தரு)

5. யாகங்கள் முயன்றதும் யோகங்கள் பயின்றதும்
போகங்களைத் துறந்து முனிவரர் பற்பலர்
சாகங்களைப் புசித்துத் தவங்கிடந் துழன்றதும்
ஆகமம் புகல்வதும் ஆத்ம விடுதலைக்கே. (தரு)

---

# இந்தியாவின் புதிய சகாப்தம்.

"ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே!
வாழிகல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே."

—கவியரசன்.

### பீடிகை.

மேருவும் குமரியும் இடையிருந்த பாரத வர்ஷம், அந்தகாரம் நிறைந்த மேகத் திரையால் மூடப்பட்டு அரசியலில் குழப்பம், ஆத்மத்தில் தேய்வு, வாழ்க்கையில் நலிவுகொண்டு பிரசண்ட வேகமான வஜ்ரதண்டங்களால் அனுதினமும் அலைக்கழிக்கப் பட்டிருந்த போது, பழைய பாழாய்ப் போன யுகம் அந்தர்த்தானமாக மறைந்து, புதிய சகாப்தம், புதிய ஜோதியில் மின்வெட்டுப் போலப் பளிச்சிட்டிருக்கிறது. இந்தப் பரம பவித்திரமான நவ சகாப்தத்தைப் பிரதிஷ்டை செய்து வைக்க ஒரு மஹா சக்தி வேண்டுமே அது எது? ஒரு பூஜிதமான புண்ணிய க்ஷேத்திரம் வேண்டுமே அது எந்த ஸ்தலம்? இந்தியாவின் பொருட்டும், மனுஷ்ய ஜாதியின் நிமித்தமாகவும், அறந் தேய்ந்து, உரிமை சாய்ந்து, மறவலியும், குடில நீதியும் கோலோங்கி அரசியற்றும் அகாலங்களி லெல்லாம், அவதார மஹிமையாலும், ஆத்ம ஜோதியாலும் எண்ணற்ற ரிஷிகள், நபிகள், நாதாக்கள் பிறந்து அறங் காத்து ஆரியா வர்த்தத்தை அபிஷேகித்த பெரு நியதியைப் புதுப்பித்த மகான் காந்திதான் அந்த சக்தி! ஹிந்துஸ்தானத்தின் ஸநாதனமான ஹிந்து ஜாதி, இரத்தக்களரி வாயிலாகவும், நரஹத்தி வாயிலாகவும் வாள் வலியால் மத மாற்றஞ் செய்யப்பட்ட போது, மேற்கே மஹாராஷ்டிரத்திலே எந்த ஒரு க்ஷத்ரபதி தோன்றி அதே வாள் வலியால் ஹிந்து மதத்திற்குக் கௌரவ ஹானி நேராமல் காத்து ரக்ஷித்தாரோ, அந்த க்ஷத்திரபதி சிவாஜியின் மந்திரிகளான பேஷ்வாக்களின் அரண்மனையாக இருந்த எரவாடா சிறைச்சாலைதான் அந்தப் புண்ணிய க்ஷேத்ரம்! ஹிந்து தர்மத்தின் புனிதமான இரத்தத்தில் பர தர்மமாகிற விஷங் கலங்கப்பட்ட பின்னால் ஏற்றந் சுருக்கமாக ஐந்து தலைமுறைகளாக அந்த அரண்மனையிலே எவ்வளவு எவ்வளவு விஷயங்கள்தான் பேசப்பட்டிருக்கும்! கடைசியில்

ஹிந்து சமூகத்தைக் கூறு கூறாக வெட்டி வீழ்த்த, மந்திரி மக்தனால்து தீர்ப்புச் செய்த போதும் அந்த அரண்மனையிலேதான் நியாய வாதம் செய்யப்பட்டது—நிவிர்த்தி காணப்பட்டது. எரவாடாவிலே எம்பெருமான் காந்தியடிகளால் தோற்றுவிக்கப் பெற்ற புதியசகாப்தம்—நவயுகம் வாழ்க! வாழ்க பல்லாண்டு!!

## பிரபஞ்ச நிலைமையும் அவதாரமும்.

உலகம் கடவுளின் ஆலயம்; உயிர்களெல்லாம் ஆண்டவன் திருமேனி. அவற்றின் உள்ளே யிருந்துகொண்டு பராசக்தி மனித இயந்திரத்தை இயக்குகிறாள். இந்த உண்மையைச் சரிவர மனித வர்க்கம் உணர்ந்து விட்டால் ஒருவனில் மற்றவன் உயர்ந்தவன், ஒரு ஜாதிக்கு இன்னொரு ஜாதி தாழ்ந்தது என்கிற பாகுபடு ஏற்பட நியாயமே யில்லை.

அந்தோ! பிரபஞ்ச ஸ்ருஷ்டியில் மக்களின் மன வேறுபாடு வரம்பு மீறிவிட்டதே. நாகரீகம் என்கிற நாஸ்திகத் திருகையில் எவ்வளவு உயிர்களைத்தான் அள்ளி அள்ளிப் போட்டு அறைக்கின்றோம்! செருக்கு மிஞ்சி பயங்கரமான போர்க்களங்கள் எத்தனை எத்தனை சமைக்கின்றோம்! நாட்டுக்கு நாடு பகை! சமூகத்திற்குச் சமூகம் சச்சரவு! ஜாதிக்கு ஜாதி சத்துரு! பண வெறியும், படை வலியும், நிறத் திமிரும், ஏற்றத்தாழ்ச்சியும் எல்லை தாண்டிவிட்டன. வாணிபப் பேயும், நாட்டு மோஹமும் மனிதனுக்கு மனிதனை அடிமையாக்குகின்றன. அஹங்காரம் அதிகரிக்க அதிகரிக்க ஆத்ம பலம் சுருங்கி, மிருக பலம் மிகைத்துப் போய் அநீதியும் அதர்மமும் தலைதூக்கி யிருக்கிறது. நிச்சயமாய் அதர்மம் அழிக்கப்பட வேண்டும் என்றேற்பட்ட அந்தக் கடைசிக் களத்திலேதான் அவதாரத்திற் கிலக்கான கீழ் நாட்டிலே காந்தி பிறந்தான். கிறிஸ்து பிறந்த கீழ் நாடு-நபிகள் நாயகம் (ஸல்) பிறந்த கீழ் நாடு-கிருஷ்ணன் பிறந்த கீழ் நாடு-புத்தன் பிறந்த கீழ் நாடு-சங்கரன், ராமாநுஜன், ராமகிருஷ்ணன், கோவிந்த சிம்ஹன், விவேகானந்தன், தயானந்தன், கொன்புஸ்தன் முதலிய பகவத் சொரூபங்கள் தோன்றிய கீழ் நாட்டிலேதான், காந்தி முனியும் எழுந்தருளினான்.

## இந்தியா.

பரதனும் அசோகனும் பாராண்ட பரத கண்டத்திலே, மனுச் சோழனும் பொற்கைப் பாண்டியனும் நீதி கண்ட நந் நாட்டிலே, காவிரியும் கங்கையும், சிந்துவும் நர்மதையும் நீர் பொழிந்த நீணிலத்திலே, ஏழைகளின் அழு நீரும் தாழ்த்தப்பட்டவர் (?) களின் தொழு நீருந்தான் பாய்கின்றன. வறுமை மிஞ்சிவிட்டது; வாழ்க்கை கசந்து



விட்டது. அரசியலில் அடிமையா யிருக்கின்றோம்; அன்னியர் சுமை தாங்க முடியவில்லை. அந்தணர் அறம் மறந்து அப்படியும் ஒரு ஜாதி இருந்ததா என்ற நிலைமைக்கு வந்துவிட்டனர். க்ஷத்திரிய வீரம் சண்டையிலும் ஜெயத்திலும் இல்லை; ஏழை எளியவரிடத்தும் அடுப்பங்கரையில் பெண்டுபிள்ளைகளிடத்திலுந்தான் சவுரியத்தைக் காட்டுகிறது. இந்தியாவின் வாணிபம் இந்தியரிடத்தில்லை; அயலவர் ஆளுகிறார்கள். இந்தியா, பிரிட்டனின் சந்தையா யிருக்கிறது. வேளாண்மை வயிற்றுக்குங் கட்டாத பிச்சைப் பிழைப்பாகி யிருக்கிறது. இவைகளை யெல்லாம் செப்பனிட்டு ஹிந்துஸ்தானத்தை அதன் முன்னைய நிலைமைக்குக் கொண்டுவர ஒரு வழியான ஆள் வேண்டி யிருந்தது. அதற்காகத்தான் நாமெல்லாம் சேர்ந்து சாந்த மூர்த்தி காந்தியைப் படைத்தோம்.

## ஹிந்து மதம்.

ஹிந்து மதம் மஹா மஹத்துவம் வாய்ந்தது. அதன் புனிதத்துவத்தையும் சனாதன தர்மத்தையும் எவருமே ஆக்ஷேபிக்க முடியாது. ஆனால் நடை முறையில் உள்ள மதத்தில், பல அனாசாரங்களை ஆசாரங்கள் என்று புகுத்திக் குருட்டுத்தனமாய் சுய நலத்தால் அனுஷ்டித்து வருகின்றோம். பழைய மதம் இப்பொழுது இல்லவே இல்லை. அதன் போக்கு முழுதுமே மங்கி மக்கிப்போய்விட்டது. ஆஸ்திகம் குறைந்து, நாஸ்திகத்தின் கை ஓங்கி யிருக்கிறது. வருணாச்சிரம தர்மம் தனது தாதுப் பொருளை யிழந்து, குடில முகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. நாலு ஜாதியிலிருந்து நாலு ஆயிரம், நாலு லட்சங்களாக ஜாதிகள் *சப்பாத்திக் கள்ளியைப் போல் கிளைத்திருக்கின்றன. அவற்றின் கூரிய முட்கள் ஹிந்து சமூகத்தின் மருமத்தே தைத்து வந்த, யாதனையும் வேதனையும் சொல்லிடப்படாது. வைத்தியன் தேவையானான்; இரண சிகிச்சை அவசியம் ஆயிற்று. பீழை பெருத்து பீடை பொறுக்கமுடியவில்லை. எத்தனை தலைமுறைகளாக எத்தனை எத்தனையோ தலைவர்கள் முயன்றும் முடியாத காரியத்தை, காந்தி ஆறே ஆறு நாட்களில் முடித்துவிட்டார்.

---

* சப்பாத்திக் கள்ளி யென்பது சமீப காலத்திலேதான் எங்கிருந்தோ இந்தியாவுக்குள் எப்படியோ, எந்த அலையோ, எந்த மனிதனோ கொண்டு வந்து புகுத்திய—ஒரு தாவரப் பொருள். இது பாவத்தைப் போல் வெகு சீக்கிரம் பரவிவிடும் பான்மை யுடையது. எத்தனை எத்தனையோ மனித சக்திகள் ஆங்காங்கு முயன்றும் இதை அழிக்க முடியவில்லை. இனிமேல் இது இந்தியா வெங்கணும் இடையின்றிப் பரவிவிடும் என்றிருந்தபோது எங்கிருந்தோ ஒரு சிறு பூச்சி பறந்து வந்து அதை அழிப்பதற்கான நாச வேலையை ஆரம்பித்திருக்கிறது.

## வர்ணாசிரம தர்மம்.

ஹிந்து ஜாதி ஒரே ஜாதி. வர்ணமில்லை; ஜாதியில்லை. எல்லாரும் ஒரே வர்ணம்; எல்லாரும் ஒரே ஜாதி; எல்லாரும் ஒரே இனம். சாந்த மயமாகவும் சமத்வ மயமாகவும் இருந்த ஹிந்து ஜாதியின் மீது, மறிக்க முடியாத சூறைக் காற்று வீசலாயிற்று. மத்திய ஆசியாவிலிருந்து ஆரியர்கள் ஹிந்துஸ்தானத்திற்குள் இடந் தேடி வரவும் இந்தியாவின் முதுகுடியாளருக்கும் அவர்களுக்கும் பூசல் பிறந்து இரு தரப்பாரும் இரணகளத்திலே நின்றிருந்தார்கள். ஆலய வழிபாடும் அந்தண சம்பிரதாயமும் நடக்க வேண்டுமே? வாணிபமும் வேளாண்மையும் விரவ வேண்டுமே? சமாதானத்திலும் சண்டையிலுங்கூட பிரார்த்தனை புரியாமல் முடியாது. உள் நாட்டுப் பொருளை விற்று, இல்லாத பொருளை வாங்கி உபயோகிக்காமல் வாழ்க்கை நடவாது. ஒரு மணியை விதைத்துப் பல நூறு தானியமணிகளை அறுவடை செய்யாமல் உயிர் வாழ்வு இல்லவே இல்லை. இவற்றிற்காக ஏகக் குடும்பம்போலிருந்த ஹிந்து ஜாதியை, நாலு பிரிவாகப் பிரித்து அததற்கு யோக்கியமானவர்களை அந்தந்தப் பிரவிர்த்தியில் அமைத்தார்கள். வேதபாராயணஞ் செய்து, ஆண்டவனுக்கு ஆராதனையும், பூஜை நைவேத்திய புனஷ்காரங்களும் புரிவதற்காகப் பிராமண ஜாதி பிறந்தது. சண்டை செய்வதற்கு க்ஷத்திரியர்கள்; வாணிபத்திற்கு வைசியர்; வேளாண்மைக்குச் சூத்திரர். இந்த நாலு ஜாதியும் நாளாவட்டத்தில் நாலாயிரம் ஜாதியாகப் பிரிந்து பறையறைபவன் பறையன், துணி வெளுப்பவன் வண்ணான், வலை வீசுகிறவன் வலையன், மயிர்வினை செய்பவன் அம்பட்டன் என்றவாறு தொழில்வாரியாகவும், அந்தந்தத் தொழிலின் உயர்வு தாழ்வுக்கேற்பவும் ஜாதிகள் வகுக்கப்பட்டன. தொழில், தொழில் என்ற ஒரே காரணத்தினால் மாத்திரங் கணிக்கப்பட்டவரை தப்பெதுவும் நிகழ்ந்ததில்லை. எந்தத் தொழில் கேவலமானது? எந்தத் தொழிலாளி கேவலமானவன்? இதுபற்றி-வர்ணாசிரம தர்மம் பற்றி காந்திஜீ கொண்டுள்ள கருத்து ஈண்டுக் குறிப்பிடப்பட வேண்டியது. "வர்ணாசிரம தர்மம் நான்கிலுமே எனக்கு நம்பிக்கையுண்டு. வித்தை யறிவித்தல், எளியாரை வலியாரினின்றுங் காத்தல், சாகுபடி சாஸ்திரம் செய்தல், உடலாலுழைத்துப் பணியாற்றல் முதலிய பாரம்பரையான தொழிலைச் செய்கிற பிர்ம, க்ஷத்ரிய, வைஸ்ய, சூத்திர வர்ணங்கள் மனித வர்க்கத்திற்குப் பொதுவானவை; குறிப்பிட்ட கூட்டத்தாருக்கு மாத்திரந்தான் உரித்தானதென்பதில்லை. இந்துக்கள் இவற்றை வாழ்க்கையின் நடைமுறையில் அனுஷ்டித்துச் சம்பந்தம் செய்துகொள்ளுவது முதல் சாதாரண அனுஷ்டானம் வரை அங்கீகரித்தே வந்தார்கள். ஆகர்ண சக்தி என்று ஒன்றிருப்பதை மனித ஜாதி அறிந்தாலுஞ்சரி அறியாவிட்டாலுஞ்சரி மாமூலாகிவிட்ட அம் முறை எல்லோரையும் பாதிக்கவே செய்கிறது.



வாழ்க்கை வேலைகளைப் பகிர்ந்து செய்யும் பான்மை, விஞ்ஞான சாஸ்திர உலகத்தை வெகு தூரம் பிரமிக்கச் செய்திருக்கிறது. ஹிந்துக்களின் இவ் வேலை நியதி, பிரபஞ்ச முழுதையும் திடுக்கிடச் செய்தது. காலம் ஆக ஆக ஹிந்துக்கள் சோம்பேறிகளாகி அவரவர் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள். வர்ண தர்மம் அழிந்தது. எண்ணிக்கை யில்லாத ஜாதிகள் தோன்றின. கலப்பு விவாகம், சமபந்தி போஜனம் முதலிய சமத்வ தர்மத்தில் இடி விழுந்தது. வர்ணாசிரம தர்மம் சுக்கு நூறாய்ச் சிதைந்து தீங்கிழைக்கக் கூடிய பல களைகள் முளைத்தன. ஆனால் அக் களைகள் வேறு, வர்ணாச்சிரம தர்மம் வேறு; சம்மந்தமே கிடையாது. வேறுபட்ட வர்ணங்களைச் சேர்ந்தவர்கள் விவாகஞ் செய்துகொள்ளலாம்; ஒரு பந்தியிலிருந்து உண்ணலாம். பிராமணனும் சூத்திரனும் சம்பந்திகளாக அவன் பெண்ணை இவனும், இவன் பெண்ணை அவனும் வாழ்க்கைத் துணையாக வரித்துக்கொள்ளலாம். தப்பில்லை; எவருமே அபாதிகள் ஆகமாட்டார்கள்."

## தீண்டாமை.

தீண்டாமை யென்பது ஒரு கொடிய நோய்-தொத்து நோய் போல, ஹிந்து ஜாதியைத் தொத்திக்கொண்டிருப்பது. இது சமய சம்மந்தமானதா? ஜாதி சம்மந்தமானதா? சமயத்தில் தீண்டாமை யில்லை; ஜாதியிலேதான் பீடை யெல்லாம். ஏனெனில் ஹிந்து மதம் அநாதியானது. இயேசுவை ஆதாரமாகக்கொண்ட கிறிஸ்து மதத்தைப் போன்றோ, புத்தனால் பிறப்பிக்கப்பட்ட பௌத்த சமயத்தைப் போலவோ ஹிந்து மதம், எந்தவொரு அவதார மனுஷ்யன் மீதும் கட்டப்பட்டதில்லை. சாக்ஷாத்காரமாக ஜெனித்தது. இதன் பூர்வாங்கத்தில் தீண்டாமை யென்பதே கிடையாது. மற்றேனைய கிறிஸ்தவ, பௌத்த, முகம்மதிய மதங்களிலும் தீண்டாமை யென்கிற நாற்றமே யில்லை. ஆகையினால் இந்த அநாசாரமான பீடையைப் புனிதமான மதத்துடன் பிணைக்காமல், ஜாதியின் தலையிலே சுமத்துவதுதான் தர்ம நியாயம்.

சரியாகவோ, தப்பாகவோ ஆதியிலே இந்த விஷம் எங்கிருந்து எப்படிப் பிறந்தது என்பதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணங்கள் எதுவும் இல்லை. அநுமான மாத்திரத்தாலேதான் இதற்கு ஆதி பீஜத்தை அறிய வேண்டி யிருக்கிறது. ஏடுகள் ஏதேனும் சாக்ஷிகளாக அமைகின்றனவா? சுருதிப் பொருளாக மேற்கோள் எதையும் காட்ட முடியுமா? என்பன பிரச்னைகள் பிறக்கலாம். தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் தமிழ் வேதத்தில் "பிறப்போக்கும் எல்லா உயிர்க்கும் சிறப் போவ்வாச் செய் தொழில் வேற்றுமையால்" என்கிற இலக்கண வரம்பு வகுக்கப்பட் டிருக்கிறது. தொழில் வேறுபாட்டினாலே

தான், மனித ஜாதி (சிறப்பில்) மாறுபடுகிறதன்றி பிறப்பால் அல்ல. பிறவியில் எல்லோரும் சமம் என்பது வள்ளுவர் கருத்து. அப்படியானால் அக் காலக் கணிதப்படி கேவலமான தொழில் எதுவாயிருக்கலாம் என்பதையும் ஆராய்ந்து அதன் வழிச் சென்றாலன்றி அனுமானமுங்கூட அசாத்தியமாயிருக்கும். கண்ணுக்குங், கருத்துக்குஞ், சுகாதாரத்துக்கும் ஒவ்வாத ஒரு தொழிலைக் கேவலமான தொழில் என்னலாம். ஒரு சின்னத் திருஷ்டாந்தம். மிருகங்களைக் கொன்று தோலுரித்து உலர்த்திப் பதனிட்டுப் பறையாக்கி முழக்கும் பறையர்களைப் புன் புலால் நாற்றத் தொழிலைச் செய்த அருவையால் சிலர் வெறுத்துத் தீண்டவும் மறுத்தனர். இவ்வாறு இதுபோன்ற புன் தொழில் செய்த பலர் புறக்கணிக்கப்பட்டு விட்டனர். அதன் மஹா பயங்கரமான விளைவுதான் இப்பொழுது ஹிந்து மதத்தையும், ஹிந்துஸ்தானத்தையும் அஸ்திவாரத்தோடு குலுக்கிக்கொண்டிருக்கிறது. மனிதன் செய்த அக்கிரமம் இது. மதம் பொறுப்பல்ல. இப்பொழுதுங்கூடக் காலப் போக்கோடொத்த கருத்தும், கல்வியும், நாகரீகமும் அடைந்த இளம் இந்தியர்கள்—வாலிப ஹிந்துக்கள் சுத்தாசுத்தம் அறிந்து அதன் காரணமாகத் தீண்டுவது தீண்டாமலிருப்பது என்கிற கொள்கையைக் கையாண்டு வருதல் பிரத்தியக்ஷம். ஆகவே தீண்டாமையென்பது, அசுசியிலே பிறந்து, அசுசியிலே வளர்ந்து, அநாகரீகத்திலே சஞ்சரித்திருக்கும் தொழு நோய்—தொத்து நோயல்லாது வேறில்லை. இந்தக் கிருமியை—விஷப் பூச்சியைக் கொன்று தொலைக்க வேண்டுமானால் நாகரீகம் அமோகமாய் நாட்டிடைப் பரவ வேண்டும். தீண்டப் படாதவர் என்கிற தாழ்த்தப்பட்டவர்கள் சுகாதாரமாக—நாகரீகமாக வாழப் பழக வேண்டும். ஜாதி ஹிந்துக்கள் எனப்படுவோர், கீழோரை மேலோராக்க முற்பட வேண்டும். ஆனால் இது சாமான்யமான காரியமல்ல; இன்று நாளைச் சரிப்பட்டு விடுவதுமன்று. தீண்டாதார்களைத் தீண்டாதார்களாகவே வைத்துக்கொண்டு ஒரு தலைமுறையல்ல கற்பகோடி காலம் முயன்றாலும் வெற்றியின் நிழலைக்கூடக் காணமாட்டோம். அலை ஓய்ந்து கடலாட முடியுமா? பின்னர் நிவர்த்திதான் என்ன? தீண்டாமையை அறவே அகற்றி எல்லோரும் தீண்டுவோராகிவிட்டால் சகவாசப் பயிற்சியால் தீண்டப் படாதாரிடத்தில் இருந்த அசுத்தம் அகன்று நாகரீக உதயங் காணலாம். ஆம். அவ்வாறுதான் செய்ய வேண்டும்.

## ஆலயப் பிரவேசம்.

ஆலயம் ஆண்டவன் வீடு. சர்வாமியாகவும் சர்வ வியாபிதனாகவும் இருக்கிற ஜெகதீஸ்வரனுக்குத்தான் சகல சேதனா சேதனப் பொருள்களும் சொந்தம். அவனது உரிமையைத் தடுக்க எந்த மனுஷ்ய ஜெந்துவுக்கு அதிகாரமிருக்கிறது? கல்லினுட் டேரைக்கும்



கருவினுட் சிசுவுக்கும், ஸ்ருஷ்டி தெய்வமாகவும், கருணையங் கடவுளாகவும், சம்ஹார ருத்ரனாகவும் இருக்கின்ற முக்கூட்டு முதல்வனுக்கு, ஜீவ வர்க்கம், நடமாடுங் கோவில்கள்—சிறப்பாக மனிதக் கூடு. உதாரணங்கள் பலப்பல உரைக்கலாம். தூணைப் பிளந்துகொண்டு நாரசிங்கன் பிறந்து, இரணியனைக் கொன்று, பிரஹலாதனை ரக்ஷித்த கதை கற்பனையல்ல; நடந்தது.

பஞ்சமனும், பார்ப்பனனும், கிறிஸ்தவனும், இஸ்லாமியனும், புத்தனும், சௌராஸ்தியனும், எல்லோரும் ஏக கடவுளரின் நடமாடும் ஆலயங்கள்தான். படமாடும் ஆலயங்களை, நடமாடும் ஆலயங்கள் தங்கள் தங்கள் மனோ பாவனைக் கேற்றவாறு இயற்றிக் கொள்ளுகின்றன. கடவுள் மனிதனை ஸ்ருஷ்டிக்கின்றான்; மனிதன் கடவுளைக் கற்பிக்கின்றான் என்பது வழக்கத்திற்கு வந்துவிட்ட ஒரு நியதி. புலால் உண்பவன் தனக்கு இஷ்ட தெய்வமாகப் புலால் உண்ணும் காளியையோ, கருப்பனையோ, மாடனையோ, காடனையோ ஆட்டையும், மாட்டையும், கோழியையும், குருவியையும் பலி கொடுத்துப் பூஜிக்கின்றான். கள் குடிக்கும் குடிகாரன் இருளனை, முனியனை வணங்குகிறான். இவ்வாறே திக்கை வணங்குபவரும், சிலுவையை வழிபடுபவரும் உண்டு.

உலகமே ஒரு பாடசாலை. நாமெல்லாம் மாணவர்கள். ஆண்டவன் பரிட்சை அதிகாரி (Inspector). இயற்கை பேராசிரியை. பராசக்தி பயிற்றுவிப்பவள். நாம் ஒவ்வொருவரும் பரீட்சை கொடுத்துப் படிப்படியாக ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்பிற்கு உயர்ந்து பாண்டித்திய பதமாகிய முத்தி நிலை சேர வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வினா என்னும் கேள்விக் காகிதத்திற்கு வினையென்னும் விடையை எழுதி வருகிறோம். நல்ல வினையாயிருந்தால்தான் "புரோமோஷன்" (மேல் வகுப்புக்கு உயர்வு) கிடைக்கும்; இல்லாவிட்டால் இல்லை. மறுபடியும் மறுபடியும் பரீட்சைக் கூடத்தில் பார்க்க வேண்டியதைத் தவிர வேறு விதி கிடையாது. நாம் செய்யும் வினை, நமக்கு நல்லதாய்த் தோன்றலாம்; ஆண்டவனுக்குச் சரிப்படாததாயிருக்கவும் இருக்கலாம். ஆலயப் பிரவேச மறுப்பு, தீண்டாமை முதலிய வினைகள் கடவுள் சம்மதமில்லாத விடைகள். அவைகளை அனுஷ்டிப்பவர்களுக்கு மார்க்கு இல்லை; பரீட்சையில் தோற்றுவிட்டார்கள். மேல் பதத்திற்குப் போகவே முடியாது.

தீண்டாதார் என்று சொல்லி ஒரு வகுப்பாரை-ஹிந்துக்களாகப் பிறந்து ஹிந்துக்களாகவே யிருக்கும் ஒரு ஜாதியாரை, ஆண்டவனது ஆலயத்துக்குள் அனுமதிக்க மறுக்கின்றோம். யாரை? நம்மைப் போல் நடமாடுங் கோயில்களை! ஆண்டவன் திருமேனிகளை! ஆனால்

அவர்களிலேயே சிலரைத் தெய்வங்களாக வைத்து வணங்கவும் செய்கிறோமே அதற்குப் பிராயச்சித்த மென்ன? வலையர்களைத் தீண்டுகிறோமில்லை; வலைச்சியைச் சிவபெருமான் வாழ்க்கைத் துணையாக வரித்தபோது அவருடன் சரியாசனத்தில் அவளையும் வைத்து வணங்குகிறோம். குறவர்களைத் தொடுகிறதில்லை, வள்ளிக் குறத்தியை நமது வீர தெய்வம்—குமாரக் கடவுள் வதுவை செய்தபோது அவளையும் சமமாக வழிபடுகிறோம். சக்கிலியர் குலத்திலே வளர்ந்த மதுரை வீரனைப் பூஜிக்கின்றோம்; சக்கிலிய ஜாதியாரைப் புறக்கணிக்கின்றோம். திருவள்ளுவரைப் புலமைத் தெய்வமாகப் புகழுகிறோம் நாம்; வள்ளுவ வகுப்பைக் கீழ்மையாகக் கணிக்கின்றோம். நந்தனார் நாயனாராகிவிட்டார்; அவர் பிறந்த குலம் பறைக் குலமாகவே யின்னுமிருக்கிறது. இவைகளெல்லாம் எவ்வளவு அக்ரமங்கள்! மன்னிக்க முடியாத குற்றங்கள்! பிராயச்சித்த மில்லாத பாவங்கள்! பஞ்சமா பாதகங்கள் அல்லவா! மக்கள் தீண்டப்படாதவராயின் அவர்களைப் படைத்த ஆண்டவனும் தீண்டப்படாதவன்தான். அவனுக்கும் ஆலயப் பிரவேசம் கண்டிப்பாய் மறுக்கப்பட வேண்டியதுதானே.

## மத மாற்றம்.

ஹிந்து மதம் ஆதி, என் அநாதியானது; பிறப்பும் இறப்பும் இல்லை. புத்த மதத்தாலும், சமண மதத்தாலும் ஹிந்து மதம் அஸ்திவாரத்திலிருந்து ஆட்டி அலைக்கப்பட்ட பொழுது, சமயாச்சாரியர்களும் நாயன்மார்களும் பிறந்து மதப் போர் செய்து ஹிந்து மதத்தைக் காத்தார்கள். என்றாலும் நஷ்டம் கொஞ்சமல்ல. இந்தியாவின் ஜனத் தொகை எந்தக் காலத்திலும்; வேத காலத்திலும் சரி, இதிகாச காலத்திலும் சரி, புராண காலத்திலும் சரி 33 கோடிதான்; குறைந்ததில்லை. இந்த முப்பத்து மூன்று கோடியர்கள் எல்லோரும் ஆதியில் ஹிந்துக்களாகவே யிருந்தனர். நாளாவட்டத்தில் கிறிஸ்தவ மதமும், இஸ்லாமிய மதமும், சமண மதமும், சௌராஸ்திய மதமும், புத்த மதமும், ஜைன மதமும் புகுந்து ஹிந்து வர்க்கத்தில் பெருத்த சேதத்தை யுண்டாக்கிவிட்டன. இந்தியாவில் இப்பொழுதிருக்கும் 8 கோடி இஸ்லாமியரும் 60 லட்சம் கிறிஸ்தவரும் ஹிந்து ஜாதியின் இழந்த தனங்கள்தானே. இதற்கு மூலகாரணமா யிருந்தது வேறொன்றுமல்ல தீண்டாமையும், ஆலய மறுப்பும் ஆம். இப்பொழுதைய கணிதப்படி இந்தியாவின் மொத்த ஜனத் தொகையில் 100-க்கு 68 பேர் ஹிந்துக்கள். இதற்குள் 16 பேர் தீண்டப்படாதவர்கள். முஸ்லீம்கள் 22 பேர். கிறிஸ்தவர்களும் கொஞ்சமல்ல. இவர்களனைவரும் நூற்றுக்கு நூறாயிருந்த ஹிந்து மதத்தின் சேதாரந்தான்—சிதைவுதான். திருவிதாங்கூர்ச் சமஸ்தானத்தில் மாத்திரம் நாள் 1-க்கு 28 ஹிந்துக்கள் கிறிஸ்தவர்களாகி வருகின்றனர். இவ்வாறு வருஷா வருஷம் லட்சக் கணக்கான ஹிந்துக்கள் அந்த சமஸ்தானத்தில் மத



மாற்றமடைந்து வந்தால், ஹிந்து மதத்தின் கெதி இன்னும் சின்னாட்களில் என்னாகும்! ஹிந்து மதத்தைப் பின்பற்றுகிறவர்களும், ஹிந்து மதத்தைக் காத்து உத்தரவாதஞ் செய்கிறவர்களும் இனிமேலும் சும்மா இருப்பதற்கில்லை. நெருக்கடியான நிலைமை யேற்பட்டிருக்கிறது, தர்மசங்கடமான விவஸ்தையிலே ஹிந்து மதம் சிக்கி யிருக்கிறது. மடாதிபதிகளோ, கோயில் தர்ம கர்த்தாக்களோ, வைதீகக் குடுக்கைகளோ, பூஜாரிகளோ ஒன்றுக்கும் உதவமாட்டார்கள். அவர்களது துளசித் தீர்த்தமும்; திரு மண்ணும், திரு நீறும் ஹிந்து மதத்தைக் காக்கப்போகிறதில்லை. வைதீகம் பரவப் பரவப் புனிதமான ஹிந்து மதம் எண்ணிக்கையில் க்ஷீணித்துக்கொண்டுதான் போகும்; முன்னேற மார்க்கமே யில்லை. கருப்பனாகவோ, செவப்பனாகவோ இருந்து ஜாதி ஹிந்துக்களின் செருப்புக்கும் கேவலமாய் மிதியுண்டு நசுங்கிச் சாவதைவிட ஜானாகவோ, ஜிம்மியாகவோ அல்லது இஸ்மாயிலாகவோ மாறி சுயேச்சையாய் வாழுவதை அந்த ஹரி ஜனங்கள் விரும்புவதில் பழுதில்லை. மனிதனுக்காகவே மதம்; மதத்திற்காக மனிதனில்லை. ஹிந்து மதத்திலுள்ள பழைய ஆசாரங்களையும், கொள்கைகளையும் இப்பொழுதைய காலப் போக்குக் கேற்பத் திருத்தி யமைத்தாலொழிய குடிலமுகமாய்க் குறைந் தோடிக்கொண் டிருக்கும் பயங்கரமான வீழ்ச்சியிலிருந்து ஹிந்து மதத்தைக் காக்கவே முடியாது. வெகு சமீப காலத்திற்குள் ஹிந்து வர்க்கம் சர்வ ஸ்வ ஜனங்களையும் இழந்து, வெறும் வைதீகங்களையும், மடாதிபதிகளையும், பூஜாரிகளையும் வைத்துக்கொண்டிருக்கப் போகிறதா?

## காந்தி மஹாத்மா.

ஹிந்து ஜாதிக்கும், ஹிந்துஸ்தானத்துக்கும் காந்திஜீ, ஒரு கடவுளாகவே பிறந்திருக்கிறார். பிரபஞ்ச மீட்சிக்கும் அவர்தான் அவதார புருஷர். ஹிந்து மதத்திலே ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்து, அந்த ஜாதியையும் தேசத்தையும் காப்பாற்றுவதற்காக காந்திஜீ, கலிக்காவதாரம் எடுத்திருக்கிறார். இந்தியாவின் பொதுப் பீடத்திலே காந்திஜீ, தன்னையும் தனது சர்வ ஸ்வத்தையும் அர்ப்பணித்துக் கொண்டதிலிருந்து அவரது நாட்டமெல்லாம் தீண்டாதார் மாட்டே துறுவி நின்றது. கதர், காங்கிரஸ், தீண்டாமை என்ற மூன்றையும் ஒன்றாகப் பிணைத்து தேசோத்காரமாகவும், மதமார்த்திகமாகவும் தமது ஆத்மார்த்த தத்துவத்தை உணர்த்தி வருகிறார். இந்தத் திரிமந்திரத்தாலேதான் சமத்வம், சகோதரத்வம், சுதந்திரம் என்கிற சாயுச்ய பதத்தைப் பெற முடியுமன்றி வேறு விதி யில்லை யென்பது காந்தி வேதம். அதை நமது இருக்கு, யசுர், சாம, அதர்வணம் என்கிற சதுர் வேதங்களோடு சேர்த்துப் பஞ்ச வேதங்களாக ஏன் ஆக்கக் கூடாது என்று கேட்கின்றோம்?

## தீண்டாமையும் காங்கிரஸும்.

தீண்டாமைப் பிரச்னை காங்கிரஸால் பிரதிஷ்டை செய்யப்பட்ட போதுதான், பிரச்னை பரம்பரையி லிருந்து கர்ம காண்டத்திற்கு வந்தது. பிர்ம சமாஜம், ஆர்ய சமாஜம், தியாஸாப்பிகல் சொஸைட்டி முதலிய சனாதன சங்கங்கள், எத்தனையோ ஆண்டுகளாக முயன்றும் முடியாத வேலையை, இற்றைக்குப் பனிரெண்டு வருஷங்களுக்கு முன்னே கல்கத்தாவில் கூடிய விசேஷ பாரத மண்டலத்தில் (காங்கிரஸில்) ஸ்வர்கீய லாலா லஜபதிராய் சன்னிதானத்திலே அரங்கேற்றப் பட்டது. அதே வருட அகில இந்திய காங்கிரஸ் மஹா சபையில் அக்கிர ஸ்தானம் வகித்த ஞான விளக்கு விஜயராகவாச்சாரியாரும், அதைக் காங்கிரஸ் புத்தகத்தில் பிரபந்தஞ் செய்துவைத்தார். பனிரெண்டு வருஷங்கள் பிரசாரம் நடந்தது. பலன் கிடைக்கவே யில்லை. காலத்திற்காகக் காந்திஜீ காத்திருந்தார். காலமும் கைக்குக் கிட்டிற்று. இரண்டாவது வட்டமேஜைதான் அந்தக் காலம்.

## அன்பு வேள்வி.

காங்கிரஸின் ஒற்றைப் பிரதிநிதியாக லண்டன் சென்ற காந்திஜீயை, இந்தியாவின் ஏகப் பிரதிநிதியாக ஏற்கத் தீண்டாதார் தலைவர்களும், சீக்கியத் தலைவர்களும், முஸ்லீம் தலைவர்களும் மன மிணங்கவில்லை. பிரித்தாளும் கொள்கையைப் பிறவிக் குணமாகப் படைத்த பிரிட்டிஷார், இந்தச் சாக்கிலே வட்டமேஜையை யுடைத்துவிட்டார்கள். ஹிந்துக்களாகவே பிறந்து ஹிந்துக்களாகவே இருக்கும் தீண்டாதார் ஹிந்துக்களை, இதர இந்துக்களி லிருந்தும் வேறாகப் பிரிப்பதற்கு ஆஸ்பதமான தனித் தொகுதியை, என் உயிரைக் கொடுத்தும் எதிர்ப்பேன்" என்றார் மகாத்மா. அதன் அர்த்தத்தை அப்பொழு தொருவரும் அறியவே யில்லை. ஏதோ பேச்சுக்காலுக்காகப் பேசுகிறார் என்ற மட்டிலே தான் தாத்பரியம் செய்யப்பட்டது. ஆனால் காந்திஜீ கர்ம வீரன். சொல்லும் செயலும் அவருக்கு இரண்டல்ல. சொல்லைப்போல் செயல்; செயலைப் போல் சொல். சொன்னபடியே தனது மஹா பிராணனைப் பணயமாக வைத்து எதிர்க்கவும் எதிர்த்தார் "ஹிந்து மதத்திற்கே பிராண ஹானி நேர்ந்திருக்கையில் என் ஒரு பிராணனுக்காக ஏன் லட்சியம்? ஆயிரம் ஆயிரம் பிராணன்களைக் கொடுத்தாலும் போதுமா? நமது மதத்தைச் சேர்ந்த திக்கற்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஜாதி ஹிந்துக்கள் செய்து வந்த ஆத்ம ஹத்திக்கு இவ்வளவுதானா பிராயச் சித்தம்? எவ்வள வெவ்வளவு பலி தியாகங்கள் செய்தாலும் பிரமாதமல்ல." என்பது காந்தி வாக்கு.



தீண்டாமையைப் போக்குவதற்காக "மகாத்மா காந்தி, உள்ளத்தைக் குழியாக்கி, உயிரை எரியாக்கி, அன்பை நெய்யாக்கிச் சிறந்ததொரு வேள்வி துவக்குகிறார்" என்று சமரச சன்மார்க்க யோகி—தமிழ் இலக்கிய பீடம் கல்யாண சுந்தரர் வர்ண விஸ்தாரம் செய்கிறார். குரு தேவர் ரவீந்திரநாத் தாகூர் கொடுத்த ஆசீர்வாதமும் இருக்கிறது.

* "இராகு கேதுக்களாகிற விஷப் பாம்புகள் எவ்வாறு தினமணி யாகிற சூரியனைக் கிரஹணமாகக் கவளீகரம் செய்து பிரபஞ்சத்தை இருள்த் திரையால் மூடி விடுகின்றனவோ அவ்வாறு தீண்டாமை, ஆலய தெரிசன மறுப்புகளாகிற இராகு கேதுக்கள், உலக ஜோதியாகிற ஒரு காந்தியை—ஒரு மகாத்மாவை வாய் மடுக்க விருக்கின்றன. தேச மஹா ஜனங்க ளெல்லாம் அதி பயங்கரமான அவஸ்தை யிருளில் அந்தகர்களைப் போல அவதிப்பட்டு அலைகிறார்கள். பரோபகாரத்தின் பிரபாகரத்தால் அகண்டிதமான சர்வ ஜெகத்தையும் தம்மதாக ஆட்கொண்டு விட்டார். தன்ய! மகாத்மா தன்யனா யிருக்கட்டும்!

"ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு உட் பிரதேசமும் இருக்கிறது. அங்கே பலாத்காரம் பலிக்காது. வெளியிலிருந்து வருகிற அரசர்கள் அந்த உட் பிரதேசத்துக்குள் நுழைய முடியாது. வெளியிலிருந்து கொண்டுதான் அதிகாரம் செலுத்துகிறார்கள். அவர்களுக்குப் பின், அங்கே அவர்கள் ஆண்டார்கள் என்கிறதற்கு ஒரு அடையாளங் கூடப் பாக்கியா யில்லை. ஆனால் ஆத்ம பலத்தால் ஒரு ராஜ்யத்தைக் கோலிக்கொண் டிருக்கிற மஹா புருஷன் பிறந்தான், இருந்தான், இறந்தான் என்றாலும் அவனுடைய ராஜ்யம் அழிவற்றதா யிருக்கிறது. அப்படிப்பட்ட ராஜ்யத்தைத்தான் காந்திஜீ கட்டி முடித்து அன்பால், ஆதர்ஸத்தால், ஆத்ம ஜோதியால் ஆளுகிறார். அந்த ராஜ்யம் சாச்வத மானது; அதன் பிரஜைகள் பாக்கியம் செய்தவர்கள்.

"மனிதன் பிரபஞ்சத்தில் பிறந்தது முதலாய்ப் பேதாபேதமும் இருந்துகொண்டுதா னிருக்கிறது. பலாஷ்டிகன் பல ஹீனர்களைக் கட்டி மேய்க்கிறான். மற்றவர்களில் தான் உயர்ந்தவன் என்கிற அஹங்காரம் அவனது உச்சி மண்டைக் கேறத் தனக்காக ஒரு கோட்டையை வளைத்துக்கொண்டு மற்றவர்களுக்குச் சர்வாதிகாரியாக உச்ச ஸ்தானத்தில் உட்காருகிறான். அவனுடைய பிரஜைக

* சாந்திநிகேதனத்தில் விஸ்வ பாரதி சர்வ கலாசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கூடி யிருந்த கூட்டத்தில் கவி சம்ராட் ரவீந்திரநாத் தாகூர் பேசிய பேச்சின் பொறுக்கு சாரம்.

ளெல்லாம் அவனால் தாழ்த்தப் பட்டவர்கள். இவ் வழக்க மென்னவோ நீண்டதுதான். ஆனால் சாச்வதமான தல்ல—சத்திய மானதல்ல. எவருடைய மனுஷ்யத் தன்மை காலின் கீழ் மிதித் துப் தேய்க்கப்பட்டு விட்டதோ, எவருடைய புத்தியும் போதமும், இருளில் விடப்பட்டு விட்டதோ, எவருடைய வாழ்க்கை யானது வறுமைப் பாலை வனத்தில் சஞ்சரித்துச் சஞ்சலம் அடையும்படி விடப்பட்டு விட்டதோ அப்படிப்பட்ட ஒரு சமூகம்—குறிப்பாக ஹிந்து ஜாதி, நீண்ட காலம் க்ஷேமமாக வாழ முடியாது. நம்மால் அழுத்தப்படுகிறவர்கள், நம்மையும் காலைப் பிடித்துக் கீழே யிழுக்கிறார்கள். நாமும் முன்னேற மாட்டோம். அவர்களையும் முன்னேற விடமாட்டோம்.

"இன்று இந்தியாவில் ஆயிரக் கணக்கான நாட்டு மக்கள் சிறைக் கம்பிகளுக் கிடையில் பூட்டப்பட் டிருக்கிறார்கள். இது அன்னியர் செய்கிற அக்கிரமம். ஆனால் ஸ்வதேசிகளாகிய நாமே நம்மில் பல கோடிக்கணக்கானோரை அவமானமாகிற இருட் டறைக்குள் சிந்தையும், செயலும், ஆத்மமும், உடலும் புழுங்கப் பூட்டி வைத்திருக்கிறோமே அந்த மஹா அக்கிரமம் யாரைச் சார்ந்தது? நமது சகோதரர்கள் சிலருக்குத் தீண்டப் படாதவர்கள் என்ற சூடு போட்டு விட்டோம். சிறை யென்பது கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்டால் தானா சிறை? மனிதனுடைய சுய மதிப்பைப் பாழாக்கும் ஒவ்வொரு சொல்லும் செயலும் சிறைதான். கல்லாலான சிறையைவிட இந்த அவமானச் சிறை அதி பயங்கர மானது.

"மனிதனுக்கு மனிதன் சிற் சில சிறு சிறு அம்ஸங்களில் வித்தி யாசப் படலாம். ஜாதிக்கு ஜாதி அவ்வாறே. ஆனால் அந்த அலட்சிய மான பாகுபாடுகளைப் பொருட் படுத்தாமல் மனிதராகப் பிறந்த அவர்களுக்கு—ஹரி ஜனங்களுக்கு உரிமை மறுத்தல் ஒவ்வாது—அபார குற்றம்! அதன் மஹா கோரமான விளைவு நாளுக்கு நாள் விருத்தியாகி ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் நம்மைச் சர்வ நாசஞ் செய்துவிடப் போகிறது. யாரை நாம் மானபங்கப் படுத்தித் தீண்டாமை என்கிற இரும்புச் சங்கிலியால் காலையும் கையையுங் கட்டிப் போட்டிருக்கிறோமோ அவர்களின் பலத்தை யழிப்பதால் நமக்கு நாமே தண்டிக்கப்பட்டு நமது பலத்தையும் இழந்துவிடு கிறோம். நமது எல்லாத் தோல்விகளுக்கும் இதுதான் ஆதி பீஜம். மனிதனை மனிதன் மானபங்கஞ் செய்து பலப்பல வகுப்புக்கள் சிருஷ்டிக்கப் படும்போது நமது ஹிந்து ஜாதி ஒரு நாளைக்கு நிச்சயமாய்க் குடை யடித்துத் தலை கீழாய் விழுந்து முறியத்தான் போகிறது".



நாடு செய்த தவப் பயனாலும், ஹிந்து மதம் முன்னை நாளில் புரிந்திருந்த சாக்ஷாத் காரத்தாலும், நாட்டுடைத் தலைவர்களின் அறிவுப் பெரு முயற்சியாலும் நாமும், மதமும் கிருதார்த்தமாகி விட்டோம். நாமெல்லாம் தன்யரானோம். காந்திஜீ சிரஞ்சீவி பதம் பெற்றார். புதிய சகாப்தம் உதயமாகி யிருக்கிறது. பள்ளி யெழுச்சி பாடுவோம்; பல்லாண்டு கூறுவோம். புனா ஒப்பந்தமும், புதிய பாரதமும் வாழ்க!

## வேள்விப் பயன்.

உபவாசம் முடிந்தது. உத்கிருஷ்டமான தபசு பூர்த்தியா யிற்று. வெற்றுரையாலல்ல, விசுவாசத்தால் தமது தியாக வேள் வியைக் காந்திஜீ சம்பூர்ணமாக்கினார். புனா ஒப்பந்தம் ஒவ்வொரு எழுத்தெழுத்தாய் நிறைவேற்றப்படா விட்டால் காந்திஜீ மறுபடி யும் தமது மஹா விரதத்தை ஆரம்பித்துவிடுவார். ஹிந்து ஸ்தான மெங்கும் இரண்டே யிரண்டு வாரங்களில் எழுந்த ஜீவகளையும், மன எழுச்சியும், உண்மை உற்சாகமுந்தான் அவருக்கு உத்தர வாதமா யிருந்தன. அவற்றை அவர் நன்றாய் நம்பி யிருக்கிறார். மோசம் செய்து விடப்படாது; நம்பிக்கைத் துரோகிகளாக நாம் ஆகிவிடக் கூடாது. "இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இந்த உடன் பாட்டை, அளவிடத் தக்க காலத்துக்குள் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வராவிட்டால் நான் மறுபடியும் உபவாசம் இருப்பேன்" என்று கூறியுள்ள அடிகளின் மொழிகளை ஹிந்து ஜாதி மறந்து விடப் போகிறதா?

யுக சந்தியிலோ யுகாந்தரத்திலோ நின்ற ஹிந்து மதத்தின் ஐந் தொகை நஷ்ட கட்டத்திலேயே யிருந்தது. இப்பொழுதோ நஷ்ட மில்லை. அபரிமிதமான லாபத்திற்கு அறிகுறிகள் நாடெங்கும் காணப்படுகின்றன. ஆலயப் பிரவேசம், பூர்வபக்ஷத்துப் புதுப் பிறையைப் போல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாய் வளர்ந்து வருகிறது. தீண்டாதவர்களும், தீண்டப்படாத வர்களும் ஒரு கலத்தில் உண்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டின் சமத்வக் குதிரை கொஞ்சம் நொண்டி. ராஜாஜீயும் ராஜேந்திரனும் ரண சிகிச்சை செய்து வருகிறார்கள். அண்மையில், நமது நீல வேணியும், பாராசாரியும் பலம் பெற்று வேங்கட முதல் குமரி வரை சாரியடிக்கும். தமிழர் எல்லோரும் அந் நன்னாளை வரவேற் போமாக; வாழ்த்துவோமாக.

# நாளந்தா சர்வ காலசாலை.

## (NALANDA UNIVERSITY.)

திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.

(302-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ஹீனயான மதஸ்தர்களின் பொறாமை.

கன்யாகுப்ஜ ராஜ்யம் இந்த தேசத்தின் மத்திய பாகத்தில், பெரும் பாகம் வியாபித்திருந்தது. "சிலாதித்ய ஹர்ஷ வர்த்தனன்" என்னும் பெயரினன் கன்யாகுப்ஜத்திற்கு அரசனா யிருந்தான். அவன் பௌத்தன். இவன் நாளந்தா சர்வகலாசாலை மாணவர்கட்காக ஒரு பெரிய மாளிகை கட்டுவித்து அதற்கு அளவற்ற பொருள்களை நன்கொடையாக அளித்திருந்தான். உலகில் அப்பொழுதே யன்றி இப்பொழுதுங்கூட நாளந்தா சர்வகலாசாலையின் வித்யா மாளிகையைப்போல் வேறெங்குங் காணுதல் அரிது.

இச் சிலாதித்ய ராஜன், தேச யாத்திரையாக உரியா(ள்) (Orissa) நாட்டிற்குச் சென்றிருந்தான். அத் தேசத்தில் ஹீனயான மதததினர் பெருந் திரளாக விருந்தனர். அவ் ஹீனயான மதஸ்தர்களில் பிரதானமானவர்களிற் சிலர், சிலாதித்யன் தமது நாட்டிற்கு விஜயஞ் செய்திருப்பதை யறிந்து அவனைச் சென்று கண்டார்கள். அவர்கள் முன்னமே நாளந்தாவில் வித்தை விரும்பும் வித்தியா மாணவர்களுக்காகப் பெரும் பொருள் செலவிட்டுச் சிலாதித்தன் கட்டுவித்த பெரு மாளிகையைப்பற்றிக் கேள்விப்பட்டுப் பொறாமை கொண்டிருந்தார்களெனினும், அதனைக் காட்டிக்கொள்ளாமல், அவன் தமது ஹீனயான மத தர்மத்தின் தத்துவங்களை உணரும்பொருட்டாக அரிய கிரந்த மொன்றை அவனுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்துத் தமது மதமும், மத நூல்களும் விருத்தியாதற் பொருட்டு நிரந்தர க்ஷேமநிதியாக விருக்கப் பெருந் தொகையை உதவியருள வேண்டியதோடு, தமது மதத்தையும், அதன் தத்துவங்களையும் மறுக்க எவராலும் இயலா தென்றும் எடுத்து மொழிந்தார்கள். அது கேட்ட அரசன் அவர்கள் மதச் செருக்கையும், அகம்பாவத்தையும், பொறாமையையும் உணர்ந்து,



அவர்களை நோக்கி, "உங்களது வேண்டுதலையும், நூலையும் அங்கீகரித்துக்கொண்டேன். ஆயின், ஒன்று கூறுவேன். அது—நாளந்தாவின் கல்வியையும், அதன் உள் நிலையையும், மதத்தின் நேர்மையையும் ஊன்றி யுணராமலேயே நீங்கள் உங்கள் கருத்தைக் கூறுவது பொருத்த மன்று. நீங்கள் ஒரு முறை, நாளந்தாவின் பண்டித சிரேஷ்டர்களுடன் நேரில் கலந்து அவர்களது மதத்தையும், உண்மையையும் கேட்பீர்களாயின், உங்கள் தவறுதல்களை யுணர்ந்து கொள்வீர்கள்" என்பதேயாகும்.

அம் மொழி கேட்ட அம் மத வாதிகள், "சரி நாங்கள் அப்படியே செய்யச் சம்மதிக்கின்றோம். தாங்கள் விரைவில் சபையொன்று கூட்ட முயற்சியுங்கள். நாங்கள் அச் சபையில் பிரசன்னமா யிருந்து வாதம் புரிகின்றோம்" என்றார்கள். அரசன் நன்றெனச் சம்மதித்து, அங்கிருந்தே நாளந்தா சர்வகலாசாலையின் பீடாதிபதி சீலபத்திராருக்கு, மேற்கண்ட விபரங்களைக் காட்டி ஓர் அழைப்பு அனுப்பினன். அது பெற்ற பீடாதிபதி, கலாசாலையில் ஒரு சிறிய சபை கூட்டி, அரசனது கருத்தை அவர்களுக்கு எடுத்துக்கூறி சாகரமதி, பிரக்ஞாரஸ்மி, சிம்மரஸ்மி, யுவான் சுவாங் ஆகிய நான்கு மகா வித்துவான்களை, உரியா தேசத்துப் பண்டித சபைக்கு மத வாதம் நிகழ்த்துவதற்கு அனுப்பத் தீர்மானித்தனர். சாகரமதி முதலிய மகா வித்துவான்களே மத வாதம் புரிவதில் சிறந்த திறமையுள்ளவர்களா யிருந்தும், பிற நாட்டுச் சீன யாத்திரீகனையும் அவர்களுடன் கூட்டியது; யுவான் சுவாங், மகாயானமதம் ஹீனயான மதங்களின் அரும் பெருங் கிரந்தங்களைச் சந்தேக விபரீதமறக்கற்று அவற்றின் நுட்பா நுட்பங்களை ஓர்ந்து உணர்ந்து பல சபைகளில் இவ் விரு மதங்களைக் கற்ற வல்லார்களுடன் வாதம் புரிந்து, பல முறையும் வெற்றி பெற்று, மகா வித்துவான்களால், மத வாதம் புரிவதில் மிக வல்லான் எனப் பெயர் சிறந்திருந்தனனென்க. யுவான் சுவாங்கின் திறமைக்கு அடியில் வரும் உதாரணம் சிறந்த சான்றாகும். அது:—

"பௌத்தர்களில் 'லோகாயதர்' என்ற ஒரு பிரிவினர் உண்டு. அவர்களில் ஒருவர், பௌத்த மதக் கண்டன சித்தாந்தங்களை, நாற்பது வினாக்களாகப் பிரித்து, ஓர் வினாப் பத்திரமாகத் தயாரித்து, அவற்றை மறுக்கின்றவர் எவரா யிருப்பினும், தம்மோடு வாதம் செய்ய வாலாம் என்றும், தம்மை வெற்றி கண்டால், அவர்கட்குத் தமது சிரத்தைக் கொய்து சமர்ப்பிப்பது என்றும் பிரதிக்ஞை செய்து அவ் வினாப் பத்திரத்தை நாளந்தா சர்வகலா

சாலையின் முன் வாயிலில் பிரதான பாகத்தில் ஒட்டி வைத்திருந்தான். அதனைப் பார்த்த யுவான் சுவாங், தனது மாணவன் ஒருவனை அழைத்து அவ் வினாத் தாளில் எழுதப்பட்டிருந்த விஷயங்களை வேறு பிரதி செய்துகொண்டு அம் மூலப் பிரதியை அங்கு நின்றும் அப்புறப்படுத்தும்படி அனுப்பினான். அவனும் அவ்வாறே செய்தான். அதனை யறிந்த அந்த லோகாயதன், பிற நாட்டினனான அப் பண்டிதனின் வித்வத் திறமையைக் கண்டறிவதற்காகத் தன்னுடன் வாதம் புரிய வருமாறு அறைகூவி அழைத்தான். யுவான் சுவாங், அவனது அழைப்பிற்குச் சிறிதும் அஞ்சாமல் அவனை மசகமென மதித்து அவன் கூடிய சபையில் சிம்மேறென நுழைந்து அவனது நாற்பது வினாக்களுக்கும் ஏற்ற விடை அழகாகவும், ஆணித்தரமாகவும் யாவரும் சரியென்று ஒப்புமாறு அளித்து, வெற்றி கண்டான். அச் சபையில் பூதர்கள், நிர்க்கந்துகள், காபாலிகர்கள், சாங்கியர்கள், வைசேஷிகள் என்ற பல பிரிவுகளையுடைய பௌத்தமத வாதிகள் வீற்றிருந்தார்கள். ஆனால், அவர்கள் யாவரும், யுவான் சுவாங் என்னும் கோளரிமுன், வாய் திறக்க முடியாமல் ஊமர்களாயினர். லோகாயதன், தனது பிரதிக்ஞையின்படி தனது சிரத்தைக் கொய்துவிடும்படி யுவான் சுவாங்கைக் கேட்டுக்கொண்டான். ஜீவகாருண்யம் நிறைந்த அப் பெரியோன், அவன் சிரசைக் கொய்யாமல் விடுத்து, அதற்குப் பதிலாக வேறு நிபந்தனைக்கு உட்படச் செய்தான். அது, பௌத்தர்களின் அஹிம்சா தர்மத்தை உலகெங்கும் சுற்றி மக்களுக்குப் போதிப்பதற்குத் தனது பிரசாரகனாக விருப்பதாகும்.

## கன்யாகுப்ஜத்தில் மத வாத சபை.

கன்யாகுப்ஜம், சிலாதித்ய ஹர்ஷ வர்த்தனனது தலைநகரம். இது, கங்கை-காளிந்திகள் கூடுகின்ற சங்கம ஸ்தானத்தில் இருக்கிறது. உரியா தேச ஹீன யான மதத்தினர் விரும்பிக் கோரிய மத வாத சபை, கன்யாகுப்ஜத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பெற்று முற்றுப் பெற்றது. அம் மகா சபைக்கு அந் நாட்டு அரசனே அக்ராசனராக வீற்றிருக்க இசைந்திருந்தான். சிலாதித்யனுடைய சாமந்த அரசர்கள் பதினெண்மர்களும் சபைக்கு விஜயமா யிருந்தார்கள். நானா தேசங்களினின்று மூவாயிரம் பௌத்தர்களும், இரண்டாயிரம் பிராமணர்களும், நாளந்தாவினின்று ஆயிரம் சந்நியாசிகளும் வந்திருந்தார்கள். யுவான் சுவாங்கும் மற்றும் பல பிரபல வித்துவான்களும் விஜயமா யிருந்தனர். கன்யாகுப்ஜத்தில் அகன்ற வெளியில் மத வாத சபைக்கென பெரிய சிங்காரப் பந்தல்கள் இரண்டு அழகாகப் போடப்பட்டிருந்தன. ஒன்றில் புத்த பகவானது "ஹேம விக்கிரகம்" எழுந்தருள்



செய்வதற்கும், மற்றொன்றில் சபையினர் வீற்றிருப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அக்கிராசனரை ஆரம்பத்தில் நடைமுறையை யொட்டிச் சிறப்பான அலங்காரங்களுடன் அரசனது அரண்மனையினின்றும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது. அக்கிராசனராகிய கன்யாகுப்ஜ அரசன் சிலாதித்யன், சகலவித ராஜ மரியாதைகளுடன் இருவர் வெண்சாமரை வீசிவர இடது பக்கமாகவும், பிரம்மாவைப் போல் அலங்கரித்துக்கொண்டு இளவரசன் வலது பக்கமாகவும் பட்டத்து யானைகள் மீது வந்தார்கள். புத்தரது சுவர்ண விக்ரகத்தைச் சர்வாபரண அலங்கிருதமான யானையின் மீது எழுந்தருள்வித்து முன்னே நடத்திச் செல்லப்பட்டது. அவ் விக்கிரகத்திற்கு இரு பாரிசத்திலும் இரண்டு யானைகள் மீது நறு மலர்கள் நிறைக்கப்பட்ட பெருங் கூடைகளை வைத்துக் கொண்டு, ஒவ்வொரு அடிகள்தோறும் மலர்களைச் சொரிந்து கொண்டே வந்தார்கள். அரசனுக்குப் பின்னால் கஜாரூடர்களாய் யுவான் சுவாங் முதலான பண்டித மணிகளும், இராஜாங்க அதிகாரிகளும், அமைச்சர்களும் தொடர்ந்து வந்தார்கள். சாமந்த அரசர்களும் பிரசித்தி பெற்ற பௌத்த சந்நியாசிகளும், துணை அமைச்சர்களும், முந்நூறு யானைகள் மீது ஆரோகணித்து ஊர்வலத்தை அழகுபடுத்திக்கொண்டு வந்தார்கள்.

அரசனது அரண்மனைக்கும், வாத சபை அமைத்திருக்கும் அலங்காரப் பந்தல்களுக்கும் இரண்டு மைல் தூரமிருந்தது. இவ்விரண்டு மைல் தூரமும் வழி நெடுக நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. எல்லாருமாகச் சபையை அடைந்ததும், புத்த பகவானது சுவர்ண ஹேம விக்கிரத்தை அவ் வலங்காரங்களுடன் சபையின் பிரதான இடத்தில் உயர்ந்ததொரு பீடத்தில் எழுந்தருளச் செய்தனர். அதற்கு அரசனது பூஜகர், விதிப்படி பூஜை செய்தார். பின்னர் அங்கெழுந்தருளியுள்ள யாவருக்கும் சிற்றுண்டி வழங்கித் தாக சாந்தி செய்விக்கப்பட்டது. வித்துவான்களுக்கு அந் நாட்டு வழக்கப்படி வித்யா மரியாதை செய்து சபை ஆரம்பிக்கப்பட்டது. அரசனும் அக்ராசன பீடத்தில் அமர்ந்திருந்தனன்.

## யுவான் சுவாங் வெற்றிச் சிறப்பு.

அங்ஙனம் அமர்ந்ததும், அரசன் யுவான் சுவாங்கை அழைத்து வாதத்தைத் தொடங்குமாறு கூறினன். யுவான் சுவாங் உடனே எழுந்து நாளந்தா சர்வகலாசாலையின் வித்தியார்த்தி (மாணவர்)களில் ஒருவரை அழைத்து, இங்கு மகா சபை கூட்டப்பட்டிருப்பதற்குரிய காரணத்தையும், தனது உபந்நியாசத்தின் கருத்துக்களை

யும் மகா சபையோர்களுக்கு அறிவிக்கும்படி கூறினான். அதன்படி வித்யார்த்தி ஒருவர் முன் வந்து, யாவருக்கும் தெளிவாகக் கேட்கும்படி ஹீன யான மதத்தினது சித்தாந்தங்களுக்கு, யுவான் சுவாங் எழுதிய கண்டனங்களை உரக்க வாசித்தார். லோகாயதன் என்பவன், தமது வினாக்களுக்கு விடை யளிக்கப்படுமானால் தாம் தோல்வியை ஒப்புக்கொண்டு வெற்றி பெற்றவர்க்குத் தமது சிரசைக் கொய்துகொள்ளும் உரிமையைப் பகிரங்கமாக அளித்திருந்தான். பிரதிக்ஞை செய்வது வழக்கமா யிருந்ததெனினும், அது அநுஷ்டிக்கப்படவில்லை. யுவான் சுவாங்கின் ஹீனயான மத கண்டனங்களின் திறமையையும் அதற்கு அவர் காட்டிய காரணங்களையும் வாக்கியங்களின் அழகையும் ஆழ்ந்த கருத்துக்களையும் சபையோர் கேட்டு ஆனந்தித்துக் கரக் கம்பமும் சிரக் கம்பமும் மிகுதியாகச் செய்தார்கள். எதிர்க் கட்சியார் சிலருக்குப் பொறாமையால் கோபம் கொதித்தெழுந்ததெனினும், வாதத்தில் யுவான் சுவாங்கை வெல்ல வல்லமை யின்மையால் எதிர்க்கக்கூடாதவர்களாய் ஊமர் நிலைமையில் வாயோய்ந்தனர். இங்ஙனம் மத வாத சபை, நான்கு நாட்கள் நடைபெற்றன. ஹீன யான மதத்தினர் ஒருவரேனும் தம்மை எதிர்த்துத் தர்க்க வாதத்தில் வெற்றி பெற்றார்களில்லை. யுவான் சுவாங், ஹீன யான மதத்தினது தாழ்வையும், மகா யான மதத்திலுள்ள உயர்வையும் வெகு தெளிவும் திறமையுமாக யாவரும் சரி யென ஒப்பும் முறையில் உயர்ந்த நிலையில் கம்பீரத் தொனியில் மிக அழகு பெற எடுத்துக் கூறினன்.

யுவான் சுவாங்கை சபையில் பகிரங்கமாகத் தர்க்க முறையில் வாய்ப் போரில் வெல்லத் திறமை யற்ற பகைவர்களில் சிலர், அந்த ரங்கத்தில் மாயச் சூழ்ச்சிகளால் கொன்றுவிட முயன்றுகொண்டிருந்தார்கள். அத்தகைய சதியாலோசனைக் கொலைஞர்களிருப்பின், அவர்கள் அரசனால் நன்றாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று அதிகாரிகளால் விளம்பரப்படுத்தப்பட்டன. பதினெட்டு நாட்கள் வரை ஹீனயான மதத்தினர்கட்கும், அவர்கள் தலைவர்கட்கும் கெடுக் கொடுத்திருந்தும் அவர்கள் ஒருவரேனும் முன்வந்து தங்கள் மதத்தின் உண்மையை நிலைநாட்டக் கூடாமற் போயினர். இறுதியாக, யுவான் சுவாங், மகாயான மதத்தின் உண்மைத் தத்துவத்தைப்பற்றி மேலானதொரு பிரசங்கத்தை அப் பெருஞ் சபையில், மிகவும் திறமையாக யாவருங் கேட்டுப் பிரமானந்தத்தில் மூழ்கும்படி செய்தார். அப் பிரசங்கத்தில் அடங்கியிருந்த அரிய விஷயங்கட்குச் சித்த மகிழ்ந்த மிகப் பலர், அன்றே அப்பொழுதே மகா யான மதத்தில் சேர்ந்து கொண்டார்கள். எதிரிகள் வாயோய்ந்து வெட்கித் தலை குனிந்தனர்.



இங்ஙனம் மத வாதத்தில் வெற்றியடைந்த அந்தச் சீன தேசத்து யாத்ரீகரான யுவான் சுவாங்கை, சிலாதித்ய ஹர்ஷ வர்த்தனனும், பிற அரசர்களும், பிரபுக்களும், பெரியோர்களும் மிகவும் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்தார்கள். அவருக்கு ஏராளமான பொருள்களும், பொன் பட்டாடைகளும் வெகுமதி செய்தனர். ஆனால், கர்வமின்மையும், தியாகியுமான அவ் யாத்ரீகர், வெகுமதிப் பொருள்களில் பூஜா விக்கிரகங்களையும், அரிய மதக் கிரந்தங்களையும் மட்டுங் கைக்கொண்டு மற்றவைகளை, நாளந்தா சர்வ கலாசாலையின் கஜானாவிற்குச் சேரும்படி கொடுத்துவிட்டார். சபை கலையு முன்னரேயே, அரசன் முதலான பல்லோர்களும், வெற்றிபெற்ற அம் மகா பண்டித சிரோமணியை வெற்றியின் அடையாளத்தின் அறிகுறியாக அலங்கரிக்கப்பட்ட யானை மீதேற்றி, கன்யாகுப்ஜத்தின் இராஜ வீதிகளில் பவனி செய்வித்தார்கள். மக்கள் யாவரும் மனக் களிப்புடன் அப் பவனியில் மிகுதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்து அவருக்கு, "மகாயான தேவன்" என்ற விருதுப் பெயரைச் சூட்டினர். பொறாமைப்பட்ட புத்தர்கள் ஒழிய எஞ்சிய ஹீனயான மதத்தினர் யாவரும் ஒரு முகமாய் அவருக்கு "மோக்ஷ தேவன்" என்று பெயரிட்டு அழைத்தார்கள். சபையின் உயர்ந்த பீடத்தில் எழுந்தருளுவிக்கப்பட்ட பொன்னாலாகிய புத்த ஹேம விக்கிரகத்தை சிலாதித்யன், நாளந்தாவின் சர்வகலாசாலைக்குக் கன்யாகுப்ஜ சபையின் ஞாபகார்த்தச் சின்னமாக அர்ப்பணஞ் செய்தான்.

## யுவான் சுவாங் சீன தேசத்துக்குத் திரும்புதல்.

சீன யாத்ரீகர் யுவான் சுவாங், இந்து தேசத்திற்கு யாத்திரையாக வந்து நீண்ட காலமாய்விட்டது. ஐந்தாறு ஆண்டுகள் நாளந்தா சர்வகலாசாலையில் கல்வி கற்பதிலேயே கழிந்துவிட்டது. நாளந்தா சர்வகலாசாலையில் நுழைந்த பின்னரேயே தாம் முன்னர்க் கற்காமல் விட்டிருந்த கலைகளையும், சாஸ்திர மாதியவைகளையும் பூர்த்தியாகவும், சந்தேக விபரீதமறக் கற்பதற்குக் காலம் வாய்த்தது. வட மொழிப் புலமையிலும் வல்லமை யுண்டாயிற்று. தம்முடைய பெரும் புகழ் திக்கெலாம் வியாபிப்பதற்கு, நாளந்தா சர்வகலாசாலையிலுள்ள பண்டித சபைகளில் கலந்து எதிர் தரப்பு மத வாதங்களைக் கண்டிப்பதில் பயிற்சி பெற்றதே காரணம். மத நூல்களை ஆழ்ந்து படிப்பதும், நுனித் தறிவதும், சிந்தித்துத் தெளிதலும், நெஞ்சகத்தே நிலை நிறுத்தலும் மற்றோர் காரணம். இங்ஙனம் யுவான் சுவாங் புகழ் பெற்று விளங்கியதோடு, புண்ணிய நதிகளும், புனிதம் வாய்ந்த விஷ்ணு சிவாலயங்களும், அங்கே சிற்ப நிறைவும், கலைகள் விளைவும் நிரம்பிய இந்து தேசத்தின் பற்பல பாகங்களையும், அங்குள்ள, மலை, நதி, ஆலயம்,

சிற்பம், கலா பீடங்கள் முதலியவற்றையும் தரிசித்தும், கற்கவேண்டிய வனைத்தும் கற்றும், பார்க்க வேண்டியவைக ளெல்லாம் பார்த்தும், ஒழுக்கத்தில் உயர்ந்தோனாக விளங்கினன்.

இங்ஙனம் விளங்கிய இவ் யாத்ரீகர்க்குத் தமது பெருமையையும், தாம் அடைந்த புகழையும் தமது சொந்த நாட்டில் பரவச்செய்ய வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. எழவே தமது தாய் நாட்டிற்குப் பிரயாணப்பட ஆயத்தமானார். இவ் வாயத்தத்திற்கேற்ப, சிலாதித்ய ஹர்ஷவர்த்தன அரசன், தனது கன்யாகுப்ஜ நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தும் "மகா தான விரதம்" என்ற அரும் பெரும் விழாவிற்கு விஜயஞ் செய்யுமாறு யுவான் சுவாங்கிற்கு அழைப்பு அனுப்பி யிருந்தான்.

மேற் குறித்த இரண்டு காரணங்களையும் ஆதாரமாகக் கொண்டு தனது கருத்தைத் தனது பேராசிரியராகிய சீலபத்திரரிடத்திற் சென்று விண்ணப்பித்தான். ஆசிரியரும் மாணவனது விருப்பத்தை யேற்று, நன்றாக ஆசீர்வதித்து நலமே பெருகச் சென்று வருக என்று விடை நல்கினர். விடை பெற்ற யுவான் சுவாங், கலாசாலையின் வித்யார்த்திகள் யாவரிடத்திலும் பிரியாவிடை பெற்று, தான் இந்தியாவில் சேகரித்து வைத்திருந்த அதிசயப் பொருளுடனும், கிரந்த பொக்கிஷங்களுடனும் மகத நாட்டின் இராஜதானியாகிய ராஜக்கிரகஞ் சேர்ந்து, அங்கிருந்து வட இந்து தேசத்திலுள்ள எல்லா ராஜ்யங்களையும் கண்டுகளிப்பதற்கு விமான மூலமாகவே பாரசீகம் வரை சென்று அதன் பின்னரே கன்யாகுப்ஜம் சேர்ந்தான்.

அங்ஙனம் வந்த யுவான் சுவாங்கை, கன்யாகுப்ஜ அரசன், நல்வரவேற்று இருக்கை நல்கி இனிதுபசரித்துப் போதிய சன்மானங்களை மனம் பூரிக்குமாறு தந்தான். அத் திருவிழாவுக்கு நாலுதிசைகளினின்றும் 5 லட்சம் சந்யாஸிகளும், பிட்சுக்களும் கூடினார்கள். அவர்களை யுவான் சுவாங் கண்டு வியந்து மகிழ்ந்தான். அம் மகத்தான திருவிழாவில் நிகழ்ந்த அன்பையும், அதிசயங்களையும், ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும், கொடைப் பெருக்கையும், பொருட் செலவையும் பார்த்துப் பிரமித்துப் போனான். பின்னர் அரசன்பால் விடை பெற்றுத் தனது சீன தேசத்திற்குப் பிரயாணமானான்.

இங்ஙனம் விடை பெற்ற இவன், பிற அரசர்களிடத்திலும் சென்று வரிசையாக ஆதரணை பெற்று அவர்களின் உதவியினால் தானும், தனது பரிவாரங்களும், கிரந்த பண்டாரங்களும், புத்த விக்கிரகங்களுங்கொண்டு சிந்து நதியைக் கடக்கும் போது அஜாக்கிரதையின் காரணமாக தனது கிரந்த சேகரங்களிற் சில, நதியில் வீழ்ந்து ஆழ்ந்து



போயின. அங்ஙனம் ஆழ்ந்து போன கிரந்தங்களுக்கு வேறு பிரதிகள் செய்வதற்கு உத்யான ராஜ்யத்தில் சில காலந் தங்கிக் கிரந்தங்களைச் சேகரித்துக்கொண்டு அங்கு நின்றும் பிரயாணப்பட்டு "கபீட" ராஜ்யத்தைச் சேர்ந்து, இந்துகுஷ் பர்வதங்களையுங் கடந்து அந்தரவகுஸ்தன தேசத்தையும் தரிசித்துக்கொண்டு தனது ஜனன தேயமாகிய சீன தேசத்திற்குச் சுகமே சென்று சேர்ந்தான். இவனது கிரந்த பண்டாரத்தில் 224 மகா யான கிரந்தங்களும், மற்றும் ஹீனயான சர்வாப்தி-வாத-சம்மதீய-மஹிசாஸக-காஸ்யபீய தர்மகுப்தாதி பௌத்த கிரந்தங்களும் இருந்தன. இவற்றின் மொத்தம் 657.

## இறுவாய்.

நாளந்தாவைப் போன்ற சர்வகலாசாலைகள் பூர்வ காலத்தில் இந்து தேசத்தில் மிகுதியாக விருந்தன. அவைகள் யாவும் நாளந்தா சர்வகலாசாலையைப் போல் அவ்வளவு உலகப் பிரசித்தி பெறாது போயினும், கீர்த்தியில் எத்தகைய குறைவும் இல்லாமலிருந்தன.

புத்தனது சம காலத்தில், காந்தார தேசத்திற்கு இராஜதானியான தக்ஷசீலத்தில் ஒரு சர்வகலாசாலை யிருந்தது. வியாபகத்திலும் கீர்த்தியிலும், ஒப்புயர்வற்ற அர்த்த சாஸ்திரப் பிரவீணர் சாணக்யரும், வியாகரண (இலக்கணம்) கர்த்தவாகிய பாணினியும், தக்ஷசீல வித்தியார்த்திகளே. கிறிஸ்து சகம் 67-ம் ஆண்டில் சீன தேசத்தில் பௌத்த மதத்தை வியாபிக்கச் செய்த மகனீயர்களான கோபணரும், மதங்கரும், தக்ஷசீல மாணவர்களே. காசியிலும் ஒரு பிரசித்தி பெற்ற சர்வகலாசாலை யிருந்தது. நாளந்தா சர்வகலாசாலையில் கல்வி கற்றுத் தேர்ந்த "நாகார்ச்சுன ராஜன்" என்பவன் கிருஷ்ணா நதிக்கரையில் "சுதான்ய கடகம்" என்ற இடத்தில் ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபித்தான்.

இத்தகைய ஜகத் பிரசித்தி பெற்ற சர்வகலாசாலைகளுக்கு நிலைக்களமாயுள்ள பாரத தேசத்தில், சுமார் ஆயிரம் ஆண்டுகள்வரை யாதோர் இடையூறுமின்றி இனிது பிரகாசித்துப், பின்னர்க் கல்வியின் வளர்ச்சிக்கும், வியாபகத்திற்கும் இடமின்றிப் புகை நிரம்பிய மனையில் மூச்சு விடுவதற்கின்றி வசிக்கும் ஜீவர்களைப்போல், பாரத நாட்டுக் கல்வியும், பல கலைகளும், நாகரீகங்களும் நசித்தன.

## நாளந்தாவின் வீழ்ச்சி.

உலகமெங்கணும் ஓங்கு புகழ்பெற்ற நாளந்தாவின் சர்வகலாசாலையும், அதில் அரசர்கள் வசிப்பதற்குரிய அழகிய மாளிகைகளும் எண்ணற்றன வென்றும்; அங்கு மிகப் பரந்த நேர்த்தியான உத்தியான

வனங்களும், மலர்ச் சோலைகளும், மாமரச் சூழல்களும், தாமரைத் தடாகங்களும், இறங்கு கிணறுகளும் எதேஷ்டமாக விருந்தன வென்றும் முன்னரே விவரித்துள்ளோம். இவை யனைத்தும் இற்றைக்குச் சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முன்னர் மேலான நிலையில் மிகப் பெருமையுடன் விளங்கியிருந்தன. பிற்காலத்தில் தோன்றிய பௌத்த மத விரோதிகளான பிராமணர்களாலும், மகமதியர்களாலும் இவைகள் நாசமடைந்து நிரம்ப ஜீர்ண தசை யுற்றன. மத விரோதிகளின் பொறாமையினாலும், மதாவேசத்தாலும் அழிவடைந்ததோடு, காலமென்னும் மோசக்காரனது செயலாலுங்கூட ஒடுக்க நிலையைப் படிப்படியாய் அடைந்து இப்பொழுது முற்றுஞ் ஜீர்ணமடைந்து பெயரளவில் மாத்திரம் பல மாளிகைகள் அங்கு அழகு குன்றி நிற்கின்றன.

நாளந்தாவுள்ள பிரதேசத்திற்குப் "பரகான்" என்று பெயர். புத்த பகவானுக்கு அன்புள்ள மாணவர்களான சாரிபுத்திரன், மகா மௌத்கலாயர்கள் நாளந்தாவிற்குச் சமீபத்திலேயே பிறந்தவர்கள் என்று முன்னருங் கூறியுள்ளோம். மகா மௌத்கலாயர்கள் பிறந்த குலிகம் என்ற பெயருள்ள கிராமம் தற்பொழுது ஜகதீஸபுர மேடை என வழங்கப்படுகிறது. இம் மேடை இப்பொழுது இருநூறு அடி சதுர அளவில் அதிகமான உயரமின்றி விளங்குகிறது. அதன் சிகரத்தில் அநேக சிறிய விக்கிரகங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று போதி மரத்தின்கீழ்ப் புத்த பகவான் தவஞ் செய்வதுபோல் சித்தரிக்கப்பட்டுள்ளது. அன்றியும் அப் புத்த விக்கிரகத்தைச் சுற்றிப் பல அசுரர்கள், பூதப் பிசாசுகள், அழகிய பெண்கள் முதலியன நின்று புத்த பிரானது தவத்தைப் பங்கப்படுத்துவதுபோல் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச் சிற்பங்கள் அழகிய வேலைப்பாடுகளுடன் கண்கவர் வனப்பினவாகத் திகழ்கின்றன. இச் சிலாவுருவங்களின் அளவு 7 அடி அகலமும் $9\frac{1}{2}$ அடி உயரமும் உடையனவாக விருக்கின்றன. இச் சிலா வுருவங்களை இக் காலத்து ஜனங்கள் லீலா விநோதனாகிய ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் அன்புடைத் தேவி "உருக்குமணி யம்மையார்" என்று கருதிப் பூஜித்து வருகின்றார்கள். இவ் விக்கிரகங்களின் முன்னர் பூசகர்களும், பக்தர்களும், நாடோறும் பால், மாமிசம் முதலியன படைத்து நிவேதிக்கின்றார்கள்.

சர்வகலாசாலையின் மாளிகைகள் மட்டும் சுமார் 1,600 அடி உயரமும், 8,000 அடி அகலமும் கொண்டிருக்கின்றன. இவற்றில் பிரதான அழகிய பவனங்கள் ஆறு. இவ் வாறில் பலாதித்யனது உயரிய மாளிகை மிக உன்னதம் வாய்ந்தது.

புத்த தேவன், நாளந்தாவில் ஒரு காலத்தில் மூன்று மாத காலந் தங்கி மாணவர்கட்குப் புத்த மார்க்கத்தை உபதேசஞ் செய்ததின்



ஞாபகார்த்தமாக ஓர் ஆலயம் சமைக்கப்பட்டிருக்கிறது. அது 53 அடி உயரமுள்ளதா யிருக்கிறது. சிகரம் மட்டும் 65 அடி சதுரங் கொண்டதாயுள்ளது. இதற்கு மேற்கே புண்ணிய நதியொன்று பிரவாகிக்கின்றது. இவையன்றி மேற்படி ஆலயத்திற்குத் தெற்கில் சுமார் 100 அடி தூரத்தில் அழகிய ஸ்தூபி அதாவது சிகரம் ஒன்று விளங்குகிறது. அதன் அருகில் தூரதேசவாசியான சந்யாஸி ஒருவர், பஞ்சாங்கத் தபசு செய்ததாகக் கூறுகிறார்கள். இதற்குத் தெற்கில் அவலோகிதேஸ்வரம் என்ற பௌத்த ஆலயம் இருக்கிறது. இதற்கு அடுத்துப் புத்தரது நகங்களும், கேஸமும் வைத்துப் பிரதிஷ்டிக்கப்பட்ட சிகரமிருக்கிறது. இந்தச் சிகரத்தைப் பிரதக்ஷணம் செய்கிற பக்தர்கள் நோயினின்றும் நீங்குவதாகக் கூறப்படுகிறது. 20 அடி உயரமுடைய இந்த ஸ்தூபம், இப்பொழுது கிழமடைந்துள்ளது. மற்றும் சர்வகலாசாலையின் பிரகாரத்திற்கு மேற்குத் திசையில் பெரிய மடுவுக்கு அருகில் ஒரு ஸ்தூபி யிருக்கிறது. இதனை ஒரு பௌத்த மத பண்டிதர், ஜனன மரணம் பற்றிப் புத்த தேவருடன் வாதம்புரிந்த இடம் என்று இப்பொழுது சொல்லுகிறார்கள்.

மேலே காட்டிய ஸ்தூபிக்குக் கிழக்குப் பக்கத்தில், 200 அடி உயரமுள்ள ஜீர்ணமடைந்த மாளிகை யொன்றுள்ளது. இதில் புத்த பகவான், முதன் முதல் நான்கு மாதங்கள் மத போதனை செய்து கொண்டிருந்ததாகக் கூறுகின்றார்கள். இம் மாளிகை இப்பொழுது பெரும் பாகம் சிதலமடைந்து 60 அடிக்குக் குறைந்து விட்டது. இத் தூபிக்குப் பாதுகாப்பிற்காகக் கட்டப்பட்ட சுற்று மதில்களின் நீளம் 240 அடியும், அகலம் 15 முதல் 20 அடிகளும் உள்ளன. இதற் கடுத்து வட கிழக்கில் எண்ணிக்கை யற்ற ஸ்தூபிகள் சிறிதும் பெரிதுமாக இலங்குகின்றன. இவைகள் ஒவ்வொன்றும் 10 முதல் 30 அடிகள் வரை அகல நீளங்கள் உள்ளன. ஒவ்வொரு ஸ்தூபிகளும் சித்திர விசித்திரமான சிற்பங்களாற் செதுக்கப்பட்டு கண்டோர் வியந்து களிக்குமாறு காணப்படுகின்றன. இச் சித்திரச் சிகரங்களின் இடையில் புத்த பகவானது உருவங்கள் அழகு பெற விளங்குகின்றன. ஒவ்வொரு ஸ்தூபத்தின் அடிப் பீடங்களில் கற்களையும், இரும்புக் கம்பிகளையும் பிணைத்துப் பூகம்பம் முதலான அபாயங்களுக்கு உள்ளாகாமல் பலமாகக் கெட்டிக்கப்பட் டிருக்கின்றன.

மேற் கூறியவைகளுக்கு வடக்கில் விளங்குவது போதி சத்வ "அவலோகிதேஸ்வராலயம்." இத் தேவாலயத்துள் கொலுவமர்ந்து விளங்கும் தேவனைத் திபேத்து நாட்டினர் "பத்மபாணி" என்று கூறுகின்றனர்.

இதற்கு வடக்கிலிருப்பது பாலாதித்யன் கட்டுவித்தது. பிரசித்தமான புத்தாலயம். இதன் உயரம் இருநூறு அடி. இது "தேஹர" தடாகத்திற்குக் கிழக்கில் ஜீர்ண தசையில் இப்பொழுது 45 அடி உயரத்திற்குக் குறைந்துவிட்டது. இதற்கு அருகாமையி லுள்ளது "வைரபீடம்." இப் பீடத்தின் மீது பிர்மாண்டமான தொரு தாமிர புத்த விக்கிரகம் வைக்கப்பட் டிருக்கிறது. இதன் உயரம் 80 அடி. இதனைப் பிரதிஷ்டை செய்வித்த அரசன் பெயர் 'பூர்ணவர்ம ராஜா', இவ் விக்கிரகத்திற்கு மேல் விதானமாக, ஆறடுக்குகள் கொண்டதொரு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

'சுராஜ்' என்ற தடாகத்திற்குக் கிழக்கில் 'தாராபோதி சத்வம்' என்ற ஓர் ஆலயம் இருக்கிறது. இதன் அகலம் $60\frac{1}{2}$ அடி; நீளம் 70 அடியுள்ளது. இதன் கீழ்க் காணப்படும் 125 அடி சதுரமுள்ள விளிம்புகளிலிருந்து ஆலயத்தின் உயரம் சுமார் 240 அடி யிருக்கலாமென யூகிக்கலாம். இதற்குப் பின் பாகத்தில் பெரியதொரு கூடம் இருக்கிறது.

---

கொடுங்கோலன் ஒரு சமூகத்தாரை ஆளவே முடியாது. ஏனெனில் ஒனாயை ஆட்டிடையனாக ஆண்டவன் படைக்கவில்லை.

ஸாடி ஸாதி.

* * *

தேச பக்தி இல்லாதவனுக்கு வேறெதிலேதான் பக்தி யிருக்க முடியும்! —பைரன்.

* * *

குற்றம் செய்வது மனித குணம்; மன்னிப்பது தேவ குணம்.

—போப்.

* * *

சுதந்திரத்தின் சக்தி, கொடுங்கோலைப் பார்க்கிலும் மஹா பலமுடையது. —ஸாடி ஸாதி.

* * *

பதினாயிரம் வருஷம் ஜீவித்திருக்கப் போவதாக எண்ணி நடவாதே. மரணம் உன்னை விழுங்குவதற்காக ஒவ்வொரு நிமிஷமும் வாயை யகலத் திறந்துகொண்டு காத்து நிற்கிறது. மூக்கில் மூச்சுள்ள போதே நல்வினை செய். உயிர் போன பிறகு உன்னால் என்ன பண்ண முடியும்? ஏமாந்து விடாதே. —மார்க்க ஔரேலியன்.

* * *

முள்ளில்லாத ரோஜாவும் மயக்கமில்லாத கள்ளும் இல்லை. நமக்கும் மோக்ஷத்திற்கும் நடுவே சாத்தான் இருக்கிறான்.

ஸாடி ஸாதி.

# காளிதாஸனுக்குக் : : : : : கவி ரவீந்திர காணிக்கை. *

(தினமணி.)

[நித்திய யௌவனத்தோடும் சர்வாந்தர்யாமியாயும் இருந்துகொண்டு சர்வ ஜெகதலத்திலும் சர்வாதிகாரஞ் செய்துவருகிற மஹா கவி காளிதாஸனுக்குப் புகழ் மாலை சூட்டாத கவிகள் அருமை. ஜெர்மானிய கவி கெதே (Goethe) யுங்கூடக் காளிதாஸனுடைய சாகுந்தலத்தைப் படித்துவிட்டு வாடாத வர்ண விஸ்தாரமான பல பா மாலைகளை அணிகின்றான். ராஜ கவி ரவீந்திரனும் காணிக்கை செலுத்துகிறான். ஐந்தே ஐந்து மலர்கள். பஞ்ச ரத்தினங்களுக்கும் அவ்வளவு பவித்திரமான பிரகாசம் உண்டா? அன்று பூத்து அன்றுதானே வதங்கிப் போகும் பூ மலர்களல்ல; தேவ புஷ்பங்கள். இந்திரனுக்கும் சந்திரனுக்கும் கிடைக்காதவை. வாசனை அதிகம். அழகு தவழுகிறது.]

## I

மஹா மந்திரமாகிய காவிய உத்தியானத்தின் மத்தியிலே கவிதா விருக்ஷத்தின் அடியிலே இளமையின் வனப்பும், யுவராஜ தேஜஸும் ஒளி பரப்பிக்கொண்டிருப்ப மஹா மண்டலீஸ்வர பதமாகிற ஸிம்ஹாஸனத்தின்மீது கற்பனா சக்தியும் மதுர பதமும் சாமர மிரட்டக் காளிதாஸன் ஆஸ்மான க்ஷேத்திரத்தில் கெம்பீரமாக வீற்றிருக்கின்றான். அவனுடைய நவரத்தின கசிதமான பாத பீடத்தை யேந்தி ஈடேறுவதற்காக சர்வ ஜெகதலமும் சமஸ்த ஜீவப் பிராணியும் ஆவலோடும் காத்துக்கொண்டிருக்கின்றன. ஸ்வர்ண மயமான கொற்றக் குடையை வான வளையம் நிழற்றுகிறது. எந்த மனுஷ்யனுக்கும் எந்த தேவனுக்கும் எட்டாத அவனது கபோல தலத்துக்கு மேலே ஆறே ஆறு அழகு அணங்குகள்—ஆறு பருவ மாதர் மாறி மாறி நடமிடுகிறார்கள். புதுமை மங்காத புகழ் மலர்களைக் காளிதாஸனது கவின் சிரசின்மீது சதா சர்வ காலமும் தூவிக்கொண்டே யிருக்கின்றனர். அவனுடைய யௌவன சரோவரத்தில் புது வர்ணத்தோடு கூடிய புதுத் தேனைப் பொழிந்து அவனது யுவா தாகத்தைத் தீர்க்கின்றார்கள். ஜீவ ஜாதிக்கெல்லாம் மர்மமா யிருக்கிற இரகசிய அறை—பள்ளியறை அவனுக்கு மாத்திரந்தான் சொந்தம்.

---

*மொழிபெயர்ப்பு.

## II

காளிதாஸா! இன்று நீ ஒரு ஒப்பற்ற கவிஞன். வேறு யாருமில்லை. உனது ராஜ தர்பார் எங்கே? உஜ்ஜயினி எங்கே? உனக்கும் அகில பாரதத்திற்கும் பிரபுவா யிருந்த மஹா சம்ராட் எங்கே? (விக்கிரமார்க்கனைக் குறிப்பிடுகிறார்.) எந்த ஞாபகார்த்தமும் இல்லை. ஆனால் உன்னைப்பற்றி உலகம் என்ன நினைக்கிறது? இன்ப ராஜ்யத்தின் தலைநகரியாகிற அளகாபுரிப் பட்டணத்திலே சாச்வதமான இன்ப ஸ்வப்பனத்தில் அமர மெய்திவிட்டதாகவல்லவா? சாந்தியா காலம். மேக மகுடந் தரித்த மலைச் சிகரத்தின் மீது யோக சாதனையினாலேற்பட்ட மிதமிஞ்சிய சந்தோஷத்தினாலே பரமசிவன் நடராஜ மூர்த்தியாக நடனஞ் செய்கிறான். மழைத் தாரையைத் தனது பரம பவித்திரமான கொ்ப்ப குண்டத்திலே சூல்கொண்ட கொண்டல், மெல்லிய இடி யோசையாகிற மேள கர்ஜனையைச் செய்கிறது. பிரபாகரமான மின்னல் தேவி, தனது ஒளி பொருந்திய கண்களால் பளிச்சுப் பளிச்சென வெட்டுகிறாள். அப்போது நீ உனது வனப்பு வாய்ந்த தேவஹாரத்தை அந்தப் பழைய பரமனுக்குச் சூட்டினாய். சிவதேவி-கௌரிமணி, ஜோதி மானாய் உனது மதுர வாணியிலே லஹித்துவிட்டாள். உனக்குச் சன்மானஞ் செய்ய அந்த விசித்திர சன்னியாசினியிடம் என்ன இருக்கிறது? கொண்டையிலே சொருகியிருந்த மயிற்பீலியை உருவி அன்பு தவழும் புன்னகை பூக்க நினது சிரதலத்திலே சாற்றினாள்.

## III

*குமார சம்பவத்தைத் தெய்வப் புலவா! நீ தேவனுக்கும் தேவிக்கும்—பரமனுக்கும் பார்வதிக்கும் பாடினையே, அப்பொழுது உன்னைச் சூழ தேவ கணங்கள் மொய்த்திருந்தன. சாந்த மயமான மாலை மேகம் மலை யுச்சியிலே மெல்ல மெல்லக் கொஞ்சிக்கொண்டே இறங்கிற்று. மின் வெட்டவில்லை, இடி மௌனமாயிருந்தது. கார்த்திகேயனுடைய மயில் தனது நீண்ட வாலைத் தாழ்த்திக்கொண்டும் காம்பீர்யமான கழுத்தைச் சற்றே வளைத்துக்கொண்டும் பார்வதியின் பக்கத்திலே நிசப்தமாய் நின்றது. தேவியின் ரோஜா நிறத்து இதழ்கள், மிருதுவான சிறு நகை பூக்கக் கொஞ்சுகின்றன. அதோ! ஒரு பெரு மூச்சும் விடுகின்றாள். அந்த சப்தம் எவருக்கும் கேட்கவில்லை; எவரும் பார்க்கவில்லை. காதளவோடிய கண்களின் கடையிலே கண்ணீர் ததும்புகிறது. ஏனோ கலவரமும் நாணமுங் கலந்த உணர்ச்சியால் கீழ் நோக்கிய இமைகள் மூடி. மூடித் திறக்கின்றன? இதைக் கண்டதும் கவியரசே! நீ திடீரென உனது முடிவற்ற பாடலை நிறுத்திவிட்டாய்.

*காளிதாஸன் பாடிய குமார சம்பவம் என்கிற காவியம்.



## IV

கைலயங்கிரியில் நிர்மானுஷ்யமான ஓரிடம்! பக்கத்திலே மானஸ புஷ்கரணி! அதைச் சுற்றி ஒருவிதமான சாந்தி திகழ்ந்துகொண்டிருக்கிறது. அங்கு வீசிய காற்றுக்குங்கூடப் பரபரப்பு இல்லை. அடுத்தாற்போல் சிவனுடைய அரண்மனை! அதன் மணி வாசலிலே சாக்ஷாத் சிவபெருமானின் சொந்த வித்வானாக நீ நின்றுகொண்டிருந்தாய். சிவனுடைய மஹா கண்டத்தின் நீல ஜோதியைப்போல், வைசாக மாதத்துக் கனத்த மேகத்தின் இந்திர நீலப் பிரகாசத்தைப் போல், சப்த ரிஷிகளின் பிரதிபலிதமான பிரார்த்தனா உலகத்தில் மனோராஜ்யமாகிற மோக்ஷ சாம்ராஜ்யத்திலே இன்னும் நீ இன்ப வாழ்வு துய்க்கின்றனை—இனி என்றென்றும் அங்குதான் இருப்பாய். ஓ! மஹா கவியே! நீ பாடுகிற சிவ ஸ்தோத்திரம் எந்த உலகத்துக்குத்தான் எட்டாது? இவை மத்தியில் ஒரு இன்பக் கனவு தோன்றும். உஜ்ஜயினி அரண்மனை! விக்கிரமாதித்ய மன்னன்! * நவரத்தினங்களின் புலமைச் சதஸு! அப்புறம் அந்த மஹா படம் மறைய, ஸ்வப்பனாவஸ்தையிலிருந்து ஜாக்கிராவஸ்தைக்கு நீ வருகிறாய். அப்பொழுதும் நீ கவிஞன்தான். எப்பொழுதும் நீ மஹா கவிதான்.

## V

உன்னுடைய உலகத்தில் இன்ப துன்பச் சுழல் இல்லையா? நம்பிக்கையும் கவலையும் கிடையாதா? ஹே! சர்வ வியாபித விற்பனனே! எங்கள் மண்ணில் இருப்பதுபோன்ற இராஜீயப் புரட்சி அங்கு மிருக்கின்றதோ? எதிரியைப் புறமுதுகில் குத்துவதுபோன்ற பேடிச் செயல் அவ்விடத்து முண்டோ? ‘காதல், கவறாடல், கள்ளுண்டல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல்’ இந்த அதர்ம அநீதிகளை யெல்லாம் நீ என்றைக்காவது அனுபவித்திருப்பையோ? இவ்வளவு கடுமையான சூறைக்காற்றினால் எந்த ஒரு இரவையாவது தூக்கமில்லாமல் கழித்திருக்கின்றனையா? இவையனைத்தையுங் கடந்த புனித பதமாகிற சாயுச்ய மண்டலத்திலே—காவிய உத்தியானத்திலே உனது கவிதா மலர்கள், மொக்குப் பருவங் கடந்து மலர்ப் பருவத்திலே ஜோபிதஞ் சொட்டப் பூத்திருக்கின்றன. வனப்புத் தேவியின் வாழ்விடமாகிய தாமரைப் புஷ்பம், சந்தோஷ புஷ்கரணியில் இன்ப சூரியனுக்காக முறுகவிழ்ந்து மலர்ந்திருக்கிறது. அதன் ஒரு சிறு இதழிலேகூட துக்கத்தின் வடுக் கிடையாது-நிர்ப்பாக்கிய நிழற் சாயைகூட இல்லை. துக்கத்தின் நக ரேகையுங் கிடையாது. விஷக் காற்றோ குரோத மூச்சோ அதை நுகரவில்லை. சம்சார சாகரத்தில் கவிதை

* விக்கிரமாதித்ய மன்னன் சபையில் இருந்த ஒன்பது புலவர்களின் சபை. அவர்களில் காளிதாஸன் சிரோன்மணி.

# ஸ்பானியக் குடியாட்சி.

திரு. தினகரன் அவர்கள்.

நாமிருக்கும் இக் காலம், ஒரு புதிய யுகம். மகுட மன்னர்கள் மண்ணைக் கவ்வும் சகாப்தம். முடியரசு முடி தாழ்ந்து, குடியரசு குவலயம் ஆளுகிற கட்டத்தில் காலச் சக்கரம் அதி வேகமாகச் சுழன்றுகொண் டிருக்கிறது. சர்வ ஜெகதலமும், அரச நாயகத்தை வெறுத்து, ஜன நாயகத்தில் வேட்கையும், வெகு விருப்பும் கொண்டுவிட்டது. கண்ணுக்குங் கருத்துக்கும் எட்டாத காலத்திலிருந்து, எத்தனையோ எண்ணற்ற தலைமுறை தத்துவமாக அரச கிரீடம் சுமந்த தலைகள், இன்று சர்வ சாதாரணமான தொப்பிகளை யணிந்திருக்கின்றன. செங்கோல் பிடித்த கரங்கள் பல, மேழி பிடிக்கின்றன; காடு வெட்டிக் காம்பை திருத்திச் சாகுபடி செய்கின்றன. இவ்வளவு மஹத்தான மாறுதலுக்குக் காரணங் காண வேண்டுமானால் 1914-லே பிறந்து 19-லே முடிந்து பிரமாண்டமான பல பக்கங்களை நிரப்பவிட்டிருக்கிறதே அந்த மஹா பாரத ஏடுகளைப் புரட்டிப் பார்க்கவேணும்.

துன்பத்திற்குப் பின் இன்பம்; சண்டைக்குப் பிறகு சமாதானம். ஐந்து வருஷத்து யாதனையும் வேதனையும் ஐரோப்பியர்களைத் துணிச்சலிலே யிறக்கிவிட்டன. இஷ்டமே சட்டம், இட்டதே கட்டளையாக அதிகார வரம்பு எவ்வளவு தூரத்துக்கிருக்குமோ அவ்வளவும் போய் அரசாண்ட ஜார் அரசன் எங்கே? போர்ச்சுகல் தேசத்து மானுவேல் எங்கே? பல்கேரியா மன்னன் பெர்தினந்து எங்கே?

---

பாகிற மத்தைப் போட்டுக் கற்பனைக் கயிற்றினாலே கடைந்தாய். விஷம் பிறந்தது. அதை யெடுத்துக் கண்டத்திலே கட்டிக்கொண்டு காவியமாகிற தேவாமிர்தத்தைச் சமஸ்த ஜீவனுக்கும் உதவியிருக்கிறாய்.*

---

*இவ்விடத்தில் ரவீந்திரர், காளிதாஸனைச் சாக்ஷாத் சிவபெருமானாகவே சங்கல்பித்திருக்கிறார். பாற் கடல் கடைந்ததும்; விஷம் பிறந்ததும்; தேவாசுரர்களின் ஜீவனுக்கு ஆபத்து விளைந்ததும்; சிவன் தோன்றி அவ் விஷத்தை யுண்டு உயிர்களை ரக்ஷித்ததும் இங்குக் காவியம் பெறுகின்றன.



ஹங்கேரியாவின் ஒட்டோ எங்கே? ஆஸ்தி[illegible] எங்கே? மீசை முறுக்கிய ஜெர்மன் சம்ராட் கெய்ஸர் எங்கே? ஆப்கன் அரசன் அமானுல்லா எங்கே? துருக்கர்களின் சுல்தான் எங்கே? ஸ்பானிய வேந்தன் அல்பான்ஸோ எங்கே? இவர்களெல்லாம் இப்பொழுது எந்தெந்த மூலை முடுக்கிலோ வனம் வனாந்திரங்களிலோ தேடுவாரற்றுத் திரிவார்கள். ஜன சுதந்திரம் என்கிற அலை ஆறு, அவர்களைக் குடில வேகத்தோடு அடித்துக்கொண்டு போய்விட்டது. அந்த சிம்ஹாஸனங்களில், சாமான்யப் பிரஜையாயிருந்த குதிரைக்காரனோ வண்டிக்காரனோதான் வீற்றிருக்கின்றான்.

உலகமெங்கும், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஊரிலுங்கூட பழைய பரசுராமர்கள் தோன்றி யிருக்கிறார்கள். மன்னர் குலத்தைக் கருவறுக்கவென்றே பரசுராமன் பிறந்ததுபோல இன்றைய பரசுராமர்கள் மன்னர்களின் ஆதிக்கத்தை அழித்துவிட்டு, அந்த ஸ்தானத்திலே பிரஜைகளின் ஆட்சியை ஸ்தாபிக்கப் பிறந்திருக்கிறார்கள். பரசுராம யுகத்தின் அழித்தல் வேலை முடிந்து ஆக்க வேலையும் பூர்த்தியாகிவிட்டால், ராம ராஜ்யம் அல்லது தர்ம ராஜ்யம் நிலவப்படும் என்பது ஜனநாயகக்காரர்களின் புனிதமான எண்ணம். அது நிரந்தம். வாழ்க!

இற்றைக்கு ஓராண்டு முன்னதாகத்தான் ஸ்பானிய மன்னன் அல்பான்ஸோ அரசிழந்தான். இங்கிலாந்தின் இரண்டாவது ஜேம்ஸ், லண்டனிலிருந்து பாரீஸுக்கு ஓடியதுபோலும், பிரான்சின் பதினாலாவது லூயி, வருனை (Varenues)-க்கு வழிபற்றியதுபோலவும், ஜெர்மனியின் கெய்ஸர் உவில்லியம், உலாந்துக்கு உயிர் தப்பி ஓடியது போலவும், அல்பான்ஸோ மதுரித (Madrid)-த்திலிருந்து எங்கேயோ ஓடிப்போனான். பிரமோதூத போய் பிரஜாதிபதி வருஷம் ஸ்பானியர்க்குப் பிறந்தது. பூரண பிரஜாதிபத்யம் ஆட்சி செய்துவரும் ஸ்பெயினுக்குள் அல்பான்ஸோவின் நிழல்கூட நுழையப்படாது.

ஜன சுதந்திரம் என்கிற ஜோதி விளக்கு, ஸ்பானியர்களின் சிந்தனையிலே இன்று நேற்றுத்தான் கொளுத்தப்பட்டதா? எத்தனையோ தலைமுறைகளாகிவிட்டன. தளபதி வாஷிங்டனுடைய எண்ணத்திலும், ரூஸோ, ரோபஸ்பீர், தாந்தன் முதலிய பிரெஞ்சுக்காரர்களின் சமதர்மத்திலும், ஒலிவர் கிராம்வேலின் உள்ளத்திலும் பிறந்து வளர்ந்த பிரஜாதிபத்தியம், ஸ்பானியர்களின் சிந்தனையையும் கவ்விற்று. ஆனால் அவர்களது கால இயந்திரம்—கடிகை யாரம் கொஞ்சம் பழுதாயிருந்ததுபோலும், பன்னிரண்டடித்து ஒரு மணி காட்டச் சிறிது கால தாமதம் ஆகிவிட்டது. வருஷம் வளர வளர ஸ்வாதந்தர்ய வாஞ்சையும் வளர்ந்தது. ஸ்வாதந்தர்ய சூர்யன், உதிக்கவேண்டிய நேரத்தில் உதிக்காவிட்டாலும், காலம் அதன் வேலையிற் சுணங்க

வில்லை. விடுதலைப் பிரசாரம் ஜரூராகத்தானே நடந்துகொண்டிருந்தது. சுதந்திரப் பிரியர்கள் காலத்திற்காகக் காத்திருந்தனர். "ஒரு காசுக்கு வாங்கும் பூஞ்சிட்டுக்கூட அவன் அறியாமல்—அவன் விதித்த காலத்துக்கு முந்தி வீழ்வதில்லை" யென்று மஹாத்மா இயேசு சொல்லுவதுபோல எதுவும் அததன் காலப் போக்கின்படிதானே நடைபெற வேண்டும்?

ஆனந்தா வருஷத்திலே, போர் ஆனந்தத்தில் ஐரோப்பா பேரானந்தங்கொண்டு, தலைகால் தெரியாமல் யுத்தத்திலே குடில முகமாகக் குதித்துப் பல ஆண்டுகளாக வளர்த்துவந்த செல்வத்தையும் அந்தப் படுகுழியிலேயே போட்டு ஆகுதி செய்தபோது, ராக்ஷஸ வருஷம் பிறந்து ஏகாதிபத்தியப் பொக்கிஷங்களை யெல்லாம் ராக்ஷஸன்போல விழுங்கி ஏப்பம்விட்ட வேகத்தில், ஸ்பானியச் செல்வமும் கரைந்துபோய்விட்டது. வறுமை வளர வளரத் துணிச்சலும் தீவிர கதி கொள்ளலாயிற்று. சனிப் பார்வை ஊருக்குள் புகுந்து, அல்பான்ஸோவின் அரண்மனையில் தானே சனீஸ்வரனும் சாக்ஷாத்தாகக் குடியேறினான். ஒரே யிடத்தில், ஒரே காலத்தில், ஒரே பொருள் (One thing at a time at a place) என்கிற விஞ்ஞான சாஸ்திர விதிப்படி அல்பான்ஸோவுக்கு மங்கு சனியாக வந்து பிடிரியைப் பிடித்துத் தள்ளிவிட்டு ஸ்பானியர்களுக்குப் பொங்கு சனியாக பிரஜா உரிமைகளைச் சனீஸ்வரன் கொடுக்கவும் கொடுத்தான்.

ஸ்பானிய இராஜ வம்சம் அற்றுப் போய்விட்டது. அந்த வம்ச விருக்ஷத்தின் கடைசிக் கிளைதான் அல்பான்ஸோ. ஐரோப்பாவிலேயே பிரமாண்டமான பிரக்கியாதி பெற்ற போர்போன் வம்சம், இவ்வளவு இலகுவில் அழிக்கப்பட்டுவிடுமென எவரும் ஸ்வப்பனங்கூடக் கண்டிருக்க முடியாது. சந்திரகுப்தனாலும், ஸம்ராட் அசோகனாலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட மௌர்ய குலத்தைப் போன்றது போர்போன் வம்சம். அக்காலத்தில் மேல ஐரோப்பா முழுதையும், அந்த வம்சத்து அரசர்கள்தான் ஆண்டு வந்தார்கள். அத்தகைய சௌரியமும், க்ஷத்திரிய தேஜஸும் வாய்ந்த கொடி வழியிலே அல்பான்ஸோ, பதின்மூன்றாவது அல்பான்ஸோவாக 1902-ல் முடி சூட்டிக்கொண்டான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அநாவசியமான இன்னொரு விஷயத்தையும் பிரஸ்தாபிக்கும் நிர்ப்பந்தம் நேர்ந்துவிட்டிருக்கிறது. மேனாட்டிலே 13 என்கிற எண், கெட்ட சகுனமாகக் கருதப்படுகிறது. நிச்சயமாகவே அது மூட நம்பிக்கைதான். என்றாலும் இங்கிலாந்தின் வீட்டுப் பழமொழியாகிவிட்டது. ஸ்பானியர்களின் சரித்திரச் சொல்லாகி யிருக்கிறது. சின்னஞ் சிறு திருஷ்டாந்தங்கள் சில. லண்டன்



வட-கிழக்கு ரயில்வே வண்டிகளில் 13 என்கிற எண்ணை எழுதப்படவில்லை; 12-க்குப் பின் 13-ஐத் தள்ளிவிட்டு 14-லிருந்துதான் எண்ணிக்கை தொடர்கிறது. லண்டன் சவாய் ஹோட்டலிலும் அவ்வாறே ஒவ்வொரு அறைக்கும் எண்ணிக்கை யிடும்பொழுது எண் 13-ஐ அறவே நீக்கிவிட்டனர். இன்னொரு ஹோட்டலிலும் இங்ஙனமே இந்தப் பாழாய்ப்போன பதின்மூன்றை நீக்குவதற்காக 14-ஐ ஆதியாகக் கொண்டு, அறைகளுக்கெல்லாம் எண்ணிக்கை யிட்டிருக்கின்றனர். நியூ யார்க்கிலிருந்து இங்கிலாந்துக்கு மாரிதானியா என்ற கப்பல் ஏதோ ஒரு 13-ந் தேதி வெள்ளிக்கிழமை புறப்படுவதாயிருந்தது. பிரயாணிகளெல்லாம், கொன்றாலும் அக் கப்பலில் யாத்திரை செய்கிறதில்லை யென்று மறுத்துவிட்டார்கள். கப்பல் சொந்தக்காரன் எவ்வளவோ சமாதானஞ் சொல்லியும் கேளாமல், பிரயாணிகள் தங்களது பிரயாணச் சீட்டுகளை வாபீஸ் தந்துவிடும்படி வற்புறுத்தினார்கள். வேறு என் செய்வது? கப்பல் அன்றிரவு ஒரு மணிவரை காத்திருந்து 14உதான் புறப்பட்டது. இவ்வளவு அவசகுனம் நிறைந்த பதின்மூன்றாவது எண்ணிக்கையை ஸ்வீகரித்ததுதான் அல்பான்ஸோவின் வீழ்ச்சிக்குக் காரணம் என்கிற பேச்சும், சகுன சாஸ்திரிகளால் பேசப்படுகிறது. என்றாலும் நாம் இதை யொரு காரணமாய்க் கூறவில்லை. அல்பான்ஸோ மன்னன், பதின்மூன்றாவது அல்பான்ஸோவாயிருந்ததுதான் அவனது வீழ்ச்சிக்கு ஆதி பீஜம் என்கிறவர்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும்.

ஸ்பானியாவின் அரசனாக அல்பான்ஸோ முடி சூட்டிக்கொண்டபோது அவன் சிறு பையன்; பதினாறு பிராயந்தானும் சரிவர முடிவடையவில்லை. பந்தய விளையாட்டுகளில் கெட்டிக்காரன் என்கிற பெயர் அவனுக்கு இருந்தது. வேடிக்கையாகப் பேசுவதிலும் வினோதார்த்தமாகக் காலங் கழிப்பதிலும் யுவ அல்பான்ஸோவுக்கு அதிகப் பிரியம். ஹாஸ்ய பாகத்தை அவனைப்போல் அத்தனை அதிகம் பேர் ரஸித்திருக்க மாட்டார்கள். ஆனால் அரசியலில் சுத்த சூன்யர், இராஜ தந்திரம் என்றால் என்ன வென்றே தெரியாது. டம்பாச்சாரியாகத் திரிவதும், குதிரைப் பந்தயத்தில் காலங் கழிப்பதுந்தான் அவனுக்குச் சரிப்பட்டுவரும். தூரதிருஷ்டி கிடையாது. ஜன மனப்பான்மையை அறியும் ஆற்றலாவது இருந்ததா? இராஜ நீதி தெரிந்தவர்களின் வார்த்தைகளுக்குக் காது கொடுக்கவாவது செய்தானா? முகந் துடைக்கும் பேச்சாளிகள்தான் அவனது சாமந்தகர்கள். இவ்வளவு பிற்போக்கான கொள்கைகள் அமைந்த ஒரு அரசன் ஐரோப்பிய மஹா யுத்தம் சமாப்தியாக விருந்த சமயத்தில், தன்னை ஒரு மத்தி

யஸ்த மன்னனாக நியமிப்பார்கள் என்று தனது சின்னச் சிந்தையில் எண்ணிக்கொண்டும் சொல்லிக்கொண்டும் திரிந்தானே இது எவ்வளவு முட்டாள்தனம்?

டான் அல்பான்ஸோ, அவன் காலத்து அரசர்களிலெல்லாம் பணக்காரன். ஏராளமான குடும்பச் சொத்துக்குச் சொந்தக்காரனாயிருந்தான். இலாபகரமான பிரவிர்த்திகளில் பணத்தைப் போட்டுப் பல கோடிக்கணக்காகத் தனது செல்வத்தைப் பெருக்கிக்கொண்டான். பிரிட்டிஷ் கம்பெனிகளிலும் அமெரிக்கக் கம்பெனிகளிலும் அவனுக்குப் பல ஆயிரக் கணக்கான பங்குகள் இருந்தன. நேற்று ஐரோப்பிய வல்லரசுகளில் ஒருவனாய் அரச அல்பான்ஸோவா யிருந்தவன் இன்று சாமான்ய அல்பான்ஸோவாக ஆகிவிட்டான். ஆனால் உலகக் கோடீஸ்வரப் பிரபுக்களில் ஒருவன். பிரஜைகளின் முன்னேற்றத்தில் கவனமில்லாமல், தனது சொந்தப் பணப் பையைப் பெருக்குவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்ததே அல்பான்ஸோவின் வீழ்ச்சிக்கு அடிப்படையான காரணம். ஜனங்களை எவ்வளவுக் கெவ்வளவு கசக்கிப் பிழிய முடியுமோ அவ்வளவையும் அல்பான்ஸோ செய்தான். மனுஷ்ய சுதந்திரத்தைக்கூட அவன் மிதித்து நசுக்கிவந்தான். ஸ்பானியாவும், ஸ்பானியர்களும் அரச சொத்து என்பது அவனது சித்தாந்தம். ஆனால் அதன் அபிவிருத்தியைக் கவனிக்கவேண்டாமா? தன் கீழ்க் குடிகளைச் சகல துறைகளிலும் முன்னேறச் செய்து, அவர்கள் நன்னிலைமையில் இருக்கையில் அதிக வரி வசூலித்துவிட்டாலும் பரவாயில்லை. நொந்த குடிகளை மேலும் மேலும் ஹிம்ஸித்தால் அவர்கள் எவ்வளவு காலத்திற்குத்தான் சகித்துக்கொண்டிருப்பார்கள்? மிருகங்களுங்கூட அளவுக்கு மிஞ்சி ஹிம்சிக்கப்பட்டால் எஜமானின் கட்டுக் கடங்காமல் மீறிவிடுகிறதில்லையா?

ஐரோப்பிய பாரத*த்தின் பிராப்த காலத்தில், உலகை முழுதிலுமே நாலைந்து குடியரசு நாடுகள்தா னிருந்தன. ஆதியில் அமெரிக்கா வழி காட்டவும், சன்னஞ் சன்னமாக ஜனநாயக உணர்ச்சி பிரபஞ்சமெங்கும் பரவலாயிற்று. பிரெஞ்சுக் குடியாட்சி யேற்பட்டது. அதைப் பின்பற்றி சுவிட்ஜர்லாந்தும், போர்ச்சுகலும் பிரஜாதிபத்திய நாடுகளாயின. அப்புறம் 1919-க்கு மேல் இதர பன்னிரண்டு தேசங்கள் ஜனநாயகங்களாயின. அவை: ருஷியா, ஆஸ்திரியா, ஜெர்மனி, கிரீஸ், ஜெச்சோ-ஸ்லோவேகியா, எஸ்தோனியா, பின்லாந்து, லத்வியா, லித்துவானியா, போலந்து, துருக்கி, ஸ்பெயின் தேசங்களாகும்.

---

*பார் + அதம் = பாரதம். பார் = பூமி. அதம் = நாசம். பாரதம்: உலகத்தை நாசம் செய்தது என்பது பொருள்.



1931 முற்பாதிவரை, அல்பான்ஸோவுக்கு ஆபத்தில்லை; நல்ல திசை நடந்துவந்தது. 45 வயதிலேதான் பாபக் கிரஹங்களின் பார்வை விழுந்து, முடி யிழந்து, நாட்டை விட்டோட வேண்டிய கெட்ட காலம் புகுந்தது. அவனோடு ஸ்பானியர்களின் அடிமைத்தனமும் போய்விட்டது. நாலா வழிகளிலும் அடக்குமுறைகளாகிற ஈட்டிகளால் பாய்ச்சப்பட்டிருந்த ஸ்பானியா, ஸ்வதந்தரக் காற்றை நுகரலானாள். ஸ்பானியர்களின் சுமையா இருந்தவை நான்கு: அரசன், மதம், பிரபுத்வம், இராணுவம் என்கிறவைகள்தான் அவை. இந்தப் பாரங்களிலிருந்து விடுபடவேண்டு மென்கிற எண்ணம் ஸ்பானியச் சிந்தனையில் எழுந்தது ஸ்வபாவந்தான்; ஆச்சரியமல்ல. ஜனங்களின் பிரதிநிதியாக இருந்து, ஜனங்களின் நன்மைக்காக அரசாளாத அரசனும் அரசனா? அவன் ஏன் வேண்டும்?

ஸ்பானியர்களில் 100-க்கு 70 பேர் கிருஷிகர்கள். ஆனால் நிலம் அவர்களுக்குச் சொந்தம் இல்லை. அரசனுடையதுமல்ல; பிரபுக்களுடைமை. விவசாயிகளெல்லாம் பிரபுக்களின் நிலங்களில் வாடகைக்கு உழுது பிழைப்பவர்கள். அரசனுக்கு நிலத் தீர்வையும், பிரபுக்களுக்கு வாடகைப் பணமும் கொடுத்து மிஞ்சுவதில் ஏதோ அரை வயிறும் குறை வயிறுங் கழுவுவதுதான் விவசாயிகளின் ஓயாத உழைப்புக்கு லாபம்.

மனிதனுக்கு மதம் ஒரு பெரிய பாரம். இத்தனை பெரிய பளுவை எதற்காக மனிதன் தலையிலே தூக்கி வைக்கவேணும்? கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவரை அன்றாடம் அவனவன் இஷ்டப்படி வணங்கினால் போதாதா? சனாதனமான மதத்திற்குத் தலைவர்களும் வேண்டுமா? மனிதனுக்கும் தெய்வத்துக்கு மிடையில் தரகர்களும் வக்கீல்களும் என்னத்திற்கு? திக்கை வணங்கு, சிலுவையை வணங்கு, சிலையை வணங்கு. விழுந்து கும்பிடு, நின்று கும்பிடு, முழங்கால் மண்டியிட்டுக் கும்பிடு. இப்படி யெல்லாம் சிப்பாய்களைக் கட்டளையிடும் சேனாபதிகளைப்போல மதத் தலைவர்களும் அவசியந்தானா? பக்ஷிகளைப்போலவும், மிருகங்களைப்போலவும் சுயேச்சையாகத் திரிய விட்டா லென்ன? மனிதன் ஏன் அப்படி யிருக்கக்கூடாது?

சிச்சீ! என்ன எழுதிவிட்டேன்? மதம் இல்லாவிட்டால் மனிதன் என்னத்திற்குப் பிரயோஜனம்? கடவுள் என்கிற ஒரு வஸ்து இருப்பதையே மறந்துவிட மாட்டானா? நியதி யிருக்குமா? நேமம் இருக்குமா? நிஷ்டை யிருக்குமா? பாவ புண்யம் என்கிற ஞாபகமாவ திருக்குமா? மதத் தலைவர்கள் பண்ணுகிற அக்ரமத்திற்காக, மதத்தைப் பழித்துவிட்டேனே சிவ சிவா! மதாச்சாரியர்கள் தப்புச் செய்தால் அவர்களை யொழித்துவிட்டு மதத்தைக் காப்பாற்றாமல் அழிப்பதா வது!

ஸ்பானியர்களுக்கு மதாச்சாரியர்கள், அரசனைப் பார்க்கிலும் பிரபுக்களைப் பார்க்கிலும் பெரிய சுமையா யிருந்தனா. ஸ்பெயின் கத்தோலிக்க தேசம். வைதிகக் கிறிஸ்துவ மதத்தை, அந் நாட்டார் அனுஷ்டித்து வந்தார்கள். உலகத்திலேயே ஸ்பெயினைப்போல் இன்னொரு தேசம் மதாச்சாரியார்களாலும், பூஜாரிகளாலும் ஆட்சி செய்யப்பட்டதாகச் சொல்லுவதற்கில்லை. ஜனங்களின் மூக்கிலே மதம் என்கிற கடிவாள வாரைப் போட்டு அவ்வளவு அழுத்தமாகப் பிடித்திருந்தார்கள். அரசனும் பிரபுக்களும் அவர்களுக்கு உடந்தை.

இப்பொழுதும் நமது நாட்டில் தேவஸ்தானங்களுக்குகும், மடாலயங்களுக்கும் இருப்பதுபோல, ஸ்பெயினிலிருக்கும் சகல ஆலயங்களுக்கும் ஏராளமான மான்ய பூஸ்திதிகளுண்டு. அவற்றின் வருவாயெல்லாம் மதாச்சாரியர்களுக்குத்தான். இதுவும் போதாமல் அரசகஜானாவிலிருந்தும் கிறிஸ்தவ மதத் தலைவராகிய **போப்** என்பவருக்கு வருஷவாரிக் கப்பமாக 3 கோடியே 60 லட்சம் ரூபாய்கள் கட்டப்படுகின்றன. இவ் வளவிறந்த பணம் எவருடையது? வரி செலுத்தும் பிரஜைகள் உடைமையல்லவா?

பணத்தோடு மாத்திரம் அமைந்துவிட்டதா மதாச்சாரியர்களின் ஆதிக்கம்? அரசியலிலும் அவர்களுக்கு ஏராளமான செல்வாக்கிருந்தது. அதைத் தாராளமாக உபயோகித்தார்கள். கத்தோலிக்க மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திற்கும் சர்க்காரின் ஆதரணை யில்லை. மற்றைய மதங்கள் ஸ்பெயினுக்குள் அனுமதிக்கப் பெற்றிருந்தாலும் அரசாங்க நிபந்தனைகளுக்கு அடங்கியே யாகவேண்டும். நிபந்தனைகளும் மஹா கடினமானவை; மற்ற மதங்கள் நிர்வஹிப்பதும் தர்ம சங்கடம். கல்விக் கழகங்களிலும் கத்தோலிக்க மதந்தான் போதிக்கப்படவேண்டும். மாணவர்களும் அவர்கள் எந்தெந்த மதத்தைச் சேர்ந்தவராயினும் கத்தோலிக்க மதத்தைத்தான் கற்கவேண்டும். அரசாங்கத்திலும் சாமான்ய குமாஸ்தா முதல், மந்திரி பதம்வரை கத்தோலிக்கனுக்குத்தான் ஸ்வாதீனம். நீதி நிர்வாஹத்திலும் கத்தோலிக்கப் பூஜாரிகளின் சிபார்சுக்கு மதிப்புண்டு; சட்டங்கள்கூட சற்றுத் தள்ளி நிற்கவேணும்.

அடுத்தது இராணுவம். ஸ்பானியர்கள் எல்லோரும் சேர்ந்து 2 கோடியே 20 லட்சம் பேர்தான். இராணுவத்தின் தொகை 3 லட்சத்து 4 ஆயிரம். இருபது சிப்பாய்களுக்கு ஒரு தளபதி; ஆயிரம் பிரஜைகளுக்கு ஒரு அதிகாரி. கட்டாய இராணுவச் சட்டம் அமுலிலிருந்தது. ஒவ்வொரு ஸ்பானியனும், கண்டிப்பாய்ச் சில குறிப்பிட்ட காலம்வரை, ஸ்பானியப் படையில் சேர்ந்தே தீரவேண்டும் என்கிற உத்தரவை மீறப்படாது. இராணுவச் சட்டம்! இராணுவ முறுக்கிலேதானே கண்டனையும் தண்டனையும் இருக்கும்! உழவன் கலப்பையைக் கழற்றி நிலத்தைத் தரிசு போட்டேனும் சிப்பாயாகவேணும். இல்லாவிட்டால் மயிரிழையில் கட்டித் தலைக்கு மேல் தூக்கப்பட்டிருக்கும் இராஜ கத்தி உச்சந்தலையில் விழுந்துவிடும். ஒரு ஏழைக் குடும்பி. தகப்பனில்லை; தமயனுங் கிடையாது. வீட்டிலே தாயார், தங்கை, தம்பிமார்கள். இந்த ஐந்து ஆத்மாக்களுக்கும் எங்கேனும் போய் நாலு காசு கொண்டுவந்தால்தான் அன்றுடம் அடுப்புப் புகையும். அவனுங்கூட அவனை நம்பியிருக்கும் நாலு ஜீவன்களையும் நடுத் தெருவிலே விட்டுவிட்டு இராணுவத்தில் இரண்டு மூன்று வருஷங்கள் சம்பளமில்லாமல் இலவசமாக உழைத்தாகவேண்டும். வாயில்லாப் பூச்சிகள் போன்ற ஸ்பானியக் குடிகளுக்கு வேறு கதிமோக்ஷமில்லை. சேனைக்கதிபதிகளையும் பட்டாளத்து உத்தியோகஸ்தர்களையும் திருப்தி செய்தால்தான் அதிர்ஷ்டம். அவர்களின் தயவுக்கும் தாக்ஷண்யத்திற்கும் ஸ்பானியக் குடியானவன் பலிப் பொருளாயிருந்தான்.



ஐரோப்பாவின் இதர தேசங்களோடு ஒப்பிட்டுச் சொல்லுவதானால் ஸ்பெயினில் பொதுக்கல்வி நன்கு போதிக்கப்படவில்லை. நூற்றில் அறுபது எழுபது பேர் தற்குறிகளாகவே யிருந்தார்கள். வர்த்தகத் தராசும் கோணல். வியாபார விர்த்தி இல்லவே யில்லை. ஒவ்வொரு வருஷத்திலும் சர்க்காரின் வரவு செலவில் ஓட்டைகள் விழுந்துகொண்டே யிருந்தன. அரசாங்க வரவுக் கேற்பச் செலவு செய்ய அல்பான்ஸோவுக்குத் தெரியவில்லை. பாவம் ஓட்டைக் கையன். வருவாயை யெல்லாம் வலம் இடமாக இறைத்துவிட்டு வெளியிலே அதிக வட்டிக்குக் கால் தலை தெரியாமல் கடன் வாங்கிவந்தான். அந்தத் தவணைகளைச் சரிசெய்வதற்காகத் தனது பிரஜைகளின் இரத்தத்தைத் துளிவிடாமல் உறிஞ்சினான். கடன்கார தேசமாகிய ஸ்பெயினின் நாணய மாற்று விகிதமும் மோசம். பெரிய பெரிய ஜமீன்களும், அவற்றின் தீர்வைகளும் அரசனுடைய பைப் பணமாகிவிட்டதால் இராஜாங்க கஜனு வெறுமையா யிருந்தது.

இந்தப் பீடைகளை யெல்லாம் பியத்தெறிய ஸ்பெயினுக்கு ஒரு நல்ல காலம் பிறந்தது. 1923-ம் ஆண்டு கோடை காலம். களங்கள் நன்றாய்க் காய்ந்திருந்தன. அல்பான்ஸோவின் அக்கிரமங்களும் பழுத்து அறுவடைப் பருவத்திலிருந்தன. அறிவாள்களையும், சம்மட்டிகளையும் எடுத்துக்கொண்டு பிரஜைகள் புறப்பட்டு விட்டார்கள். புரட்சியிலே தான் மீட்சி உண்டு என்கிற எண்ணம் அவர்களுக்கு முற்றிவிட்டது. மதுரித நகரியில் விடுதலைப் போருக்குக் கொடியேற்ற மாயிற்று. புரட்சிச் சுவே

கங்கள் பாராயணம் பண்ணப்பட்டன. வேள்வி வளர்க்கப் பெற்றது. அரச கட்சியை அதில் ஆகுதி செய்தார்கள். நர பலி கொடுக்கப்பட்டு மனிதத் தலைகளையும், மனித இரத்தத்தையும் அவிர்ப்பாக மாக்கினார்கள். ஜனத் தலைவர்களுடைய அபீஷ்டத்திற்கு அரசன் இணங்கிப் போனான்; இல்லாவிட்டால் வேறு விதியில்லை. ஜனக் கட்சி வலுத்திருந்தது. அரசனும் பிரஜைகளும் ஒருவாறு ஒத்துப்போய் முன்னவன் மீசுரமான தனது இராஜ பதத்திலிருந்து ஒரு படி கீழிறங்கவும், பின்னவர்களாகிய பிரஜைகள் தங்களது விடுதலைப் பாட்டையில் ஓரடி முன்னேறவும் சமரசம் சாத்தியமாயிற்று. அரச அல்பான்ஸோ சர்வாதிகாரி (Dictator)பாகி ஜன சபைத் தலைவன் என்கிற ஸ்தானம் அளிக்கப்பெற்றான்.

அப்பொழுதும் ஸ்பானிய திசை, அதிர்ஷ்ட சக்கிரத்தின் மீது சுற்றவில்லை. பிரஜா உரிமைகளுக்கு அரசன் ஒதுங்கிப் போகாமல் காலடியில் போட்டு மிதித்து நசுக்கத்தான் செய்தான். ஏனெனில் அல்பான்ஸோவுக்கு இராணுவத் திமிர் கொஞ்சம் இருந்தது. அந்தப் பலத்தின் அதிகம் பலம் வைத்திருந்தான். சர்வாதிகாரிக்கிருந்த விசேஷ ஏதேச்சாதிகாரத்தால், ஜன சபையின் வார்த்தைக்குப் பளுவில்லாமல் போய்விட்டது. இப்பொழுதுதான் ஸ்பானியர்களின் நெஞ்சு பொறுக்கவில்லை. ஹிருதயக் கிரந்தி பலமாக ஏற்பட்டது. எரிச்சல் தாங்க முடியவில்லை. அல்பான்ஸோவின் விஷப் பல்லைப் பிடுங்கிவிட வேண்டுமென்று நிச்சயித்துவிட்டார்கள். அத்துடன் வறுமைப் புயலும் வேகமாக வீசத் தலைப்பட்டது. அதன் பிரசண்ட மாருதத்தில் அலைபட்டு அடிபட்ட ஸ்பானியர்கள் துணிச்சல் கொண்டனர், கூட்டங் கூட்டமாகக் கூடி அரசாங்கத்தைக் கண்டித்தார்கள். அரசனுக்கு உதவி மறுத்தல் பிரசாரம், பாசறைவரை எட்டிவிட்டது. புரட்சி எந்த நிமிஷமும் ஏற்பட்டுவிடலாம் என்றிருந்த கடைசி நேரத்திலேதான், அல்பான்ஸோவுக்கு ஸ்பானியர்களின் தீவிரப் போக்குத் தெரிந்தது. இனி என்ன செய்யலாம்? அணை கடந்துவிட்ட வெள்ளத்தை அவனால் தேக்க முடியுமா? வெகு ஜன வாக்கு என்கிற சூறாவளியில் அரசன் ஒரு ஒடிந்த துரும்பு மாத்திரந்தானே? ஆயுதங்களெல்லாம் அவசர அவசரமாக ஜனச் சார்பில் தயாராயின. வெடி மருந்தும் குழாய் நிறையக் கிட்டித்தாகிவிட்டது. ஒரு சின்ன நெருப்புப் பொறிதான் செலவு. ஸ்பானிய சுதந்திரப் பிரியர்கள் சர்வ முஸ்தீப் போடும் காத்திருந்தார்கள். தலைவன் சமிக்ஞை செய்யவேண்டியதுதான் பாக்கி. அரசன் இதைக் கண்டு பயந்துவிட்டான். ஜார் அரசன் நடுத் தெருவில் சுட்டுக் கொல்லப்பட்டதும், பதினாறு



வது லூயி தலைவாங்கி யந்திரத்தில் திணிக்கப்பட்டுச் செத்ததும், முதலாவது சார்லஸ் சிரச்சேதம் செய்யப்பட்டதும் அல்பான்ஸோவின் மனதில் சலனபடம்போலத் தோன்றின. தனது தலையையும் அவ்வாறு அரை நிமிஷத்தில் இழக்க அவனுக்கு இஷ்டமில்லை. தனது அழகிய இராணியையும், யுவ ராஜாக்கள் இருவரையும் விட்டுப் பிரிய அல்பான்ஸோவுக்கு இஷ்டமில்லை. பிரஜைகளுக்கு இணங்கிவிட்டான். பொதுத் தேர்தலை வைத்து அதன் மூலம் அமைக்கப்படும் ஜனப் பிரதிநிதிகளின் சபைக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகக் கூறினான். தேர்தல் நடத்தப்பெற்றது. முடியாட்சியில் கொஞ்சங்கூட விருப்பமில்லாதவர்களுக்கே சீட்டு விழுந்தது. சபையுங் கூடிற்று. அதன் தலைவனாக அரசனை ஏற்பதற்கு ஜனப் பிரதிநிதிகள் முற்றும் மறுத்துவிட்டனர். அவர்களுக்குள்ளேயே ஒரு தலைவனைப் பொறுக்கி யெடுத்துக்கொண்டு அரசனைத் தள்ளிவிட்டார்கள். இனிமேல் அல்பான்ஸோ, ஸ்பானியர்களின் தலைவனில்லை; சாமான்யப் பிரஜைகளிலே ஒருவன்.

அல்பான்ஸோவின் தலைவிதிக்காக மனுஷ்ய ஜாதியில் எத்தனை பேர் துக்கித்தார்கள்? எத்தனை துளி கண்ணீர்கள் சிந்தப்பட்டன? அல்பான்ஸோ அழுதிருப்பான். அவன் மனைவி அலறியிருப்பாள். அவனுடைய நாலு குழந்தைகளும் கதறியிருக்கும். அவனை அண்டிப் பிழைத்த பிரபுக்களும், பூஜாரிகளுங்கூடத் தங்களது நீலிக் கண்ணைக் கசக்கியிருப்பார்கள். பிரிட்டிஷ் மன்னனுக்கு வருத்தம்; பெல்ஜிய வேந்தனுக்கு வேதனை; பல்கேரிய ராஜனுக்குத் துக்கம்; தேன்மார்க்கு (Denmark) இறைவனுக்குக் கலக்கம்; நெதர்லாந்துக் கோனுக்குப் பிராந்தி; நார்வே யரசனுக்கு நடுக்கம்; ருமானியா வேந்தனுக்கு ருத்ராங்காரம்; ஸ்வேதன் (Sweden) பதிக்கு விசனம். அல்பான்ஸோவுக்காக வருந்திய ஆத்மாக்கள் அவ்வளவேதான்.

அரசன் மகன் அரசனாகப் பிறந்தும் அல்பான்ஸோவுக்கு அரசாளத் தெரியவில்லை. அருகதை யில்லாமல் அரச பீடத்தை வெறுமனே நிரப்பிக்கொண்டு அவன் ஏன் இருக்கவேண்டும்? வேறு வேலையைப் பார்த்துக்கொண்டு, ஸ்பானியர்களின் தலைப் பாரமாயிருந்ததுபோல் பூமியின் பாரமாயிராமல் மனிதனாய் வாழட்டும் என்று ஸ்பானியப் பிரஜைகள் எண்ணியதில் பிழையில்லை; செய்தது பழுதுமன்று.

அல்பான்ஸோ மன்னன் தனது பெண்ஜாதி பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஸ்பெயினை விட்டு எங்கேயோ ஓடிப்போய்விட்டான். ஸ்பானியர்கள் அனைவரும் அந் நாட்டு மன்னர்கள் ஆகி

விட்டார்கள். இனிமேல் ஸ்பெயின் குடியரசு நாடாக நடக்கும். ஜமோரா (Zamora) ஆட்சித் தலைவன் ஆனான். ஆனால் குடியாட்சித் தத்துவத்தில் அவன் புதியவன். 1923-ம் ஆண்டுவரை ஜமோரா அரச கட்சியில் இருந்தான். அந்தத் தரப்பில் மூன்று தரம் மந்திராலோசனை சபையில் மந்திரியாகவும் இருந்திருக்கிறான். அரச அல்பான்ஸோவுக்கு ஜாமோரா ஒரு கையாளாக இருந்தான். அவனுக்காக, ஜனத் தலைவர்களுக்கு எதிரிடையாக எத்தனையோ முறை குரல் எழுப்பி யிருக்கிறான். ஆனால் அரசனோ ஜாமோராவுக்காகப் பரிந்து பேசியதே கிடையாது. 1928-லே நடந்த சபைத் தேர்தலில் பிரிமோ-டி-ரிவாரா சர்வாதிகாரி யானான். ஜாமோரா யுத்த மந்திரி. இப்படியிருக்கையில் மந்திராலோசனை சபையிலே ரிவாராவுக்கும் ஜாமோராவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஜாமோராவை, ரிவாரா குற்றஞ்சாட்டினான். அரசன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தானே யொழிய ஜமோராவுக்கு உதவி செய்யவில்லை. அப்போதுதான் ஜமோரா, அரசனை வெறுத்தான். அவனுக்காகத் தனது ஹிருதயத்தில் வைத்திருந்த இடத்தை ஜனங்களின் ஸ்தானமாக்கினான். குடியாட்சிக்காரர்களின் அணி வகுப்பில் அவன் இடது கட்சியை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டான். ஆனால் அது உண்மையிலல்ல. பசுக் கூட்டங்களோடு புலி உறவுகொண்டு மேய்ந்த கதைதான். ஆனால் இப்பொழுது அப்படியில்லை. ஆட்சித் தலைவன் ஆகிவிட்டான். ஜனங்களின் நம்பிக்கையாளனாகி விட்டான். இருந்தாலும் அந்நிய நாட்டு மந்திரி லேர்ரோவும் சர்வாதிகாரி ஜாமோராவும் ஜனநாயக தத்துவத்தின் தாதுப் பொருளில் இவ்வளவுகூடக் குறையாமல் ஸ்பெயினை நடத்திச் செல்லுவார்கள் என்பதில் நமக்குச் சந்தேகம் சந்தேகந்தான்.

புதிய ஸ்பானியக் குடியாட்சி சர்க்காரின் முன்னால், பிரபலமான பிரச்னைகள் இருக்கின்றன. தெய்வாதீனமாய்த்தான் அவைகள் தீர்க்கப்பட வேண்டும். கட்டலான் ஸ்வாதீனப் பிரச்னையும் பாஸ்கோ பிரிவினையும் பஹு முக்கியமானவை. இங்கிலாந்துக்கு அயர்லாந்து எப்படியிருக்கிறதோ அப்படி ஸ்பெயினுக்குக் கட்டலோனியா. அல்பான்ஸோ மன்னன் ஆட்சி செலுத்திய காலத்திலிருந்து கட்டலான் ஸ்வாதீன மடைவதில் பலகாலும் முயன்றிருக்கின்றது. சுருக்கமாகச் சொல்லுவதானால் இங்கிலாந்து பார்லிமெண்டுக்கு ஐரிஷ் பிரச்னை எவ்வளவு பிரமாதமானதோ அவ்வளவு ஸ்பானியக் குடியாட்சிக்கு கட்டலோனியப் பிரச்னை. ஆனால் கட்டலோனியா, அயர்லாந்தைப் போல் வறுமை நாடில்லை; செல்வ வள நாடு. ஸ்பானியத் தீப கற்பத்திலேயே கட்டலோனியாதான் நீர் வளம், நில வளம், எல்லா வளமும் நிறைந்த முதற்



றரமான பிரதேசம். அதன் தலை நகரியான பார்ஸிலோனா, ஸ்பானியாவின் சிறந்த துறைமுகப் பட்டினம். மதுரிதத்தைவிட அழகான நகரம். அல்பான்ஸோவின் ஆட்சியைக் கவிழ்த்தி ஸ்பெயினை விடுவித்த முயற்சிக்கு ஆதி பீஜமாயிருந்தது கட்டலோனியாதான். அது இல்லாவிட்டால் ஸ்பானியக் குடியாட்சி இவ்வளவு சீக்கிரத்தில் ஏற்பட்டிராது. ஸ்பானிய ஸ்வதந்திரத்திற்காகக் கட்டலோனியா தனது செல்வப் பொருளை வாரி வாரி யிறைத்தது. அப்பொழுது கட்டலோனியா தவிர்த்த இதர ஸ்பானியர்களுக்கும் கட்டலோனியருக்கும் ஒரு பேச்சிருந்தது. அரசனை யொழித்துவிட்டதும் கட்டலோனியா ஸ்பெயினிலிருந்து பிரிந்து தன்னைத் தானே யாளும் ஸ்வாதீன நாடாகிவிடும் என்பதுதான் அந்தப் பேச்சு. அதன்படி ஸ்பெயின் எல்லையை அல்பான்ஸோ தாண்டினானோ இல்லையோ உடனே கட்டலோனியர்கள், தங்களது கொடியைப் பறக்கவிட்டதும் ஜனாதிபத்திய சபையைக் கூட்டி தளபதி மேக்கியாவை முதல் தலைவனாக நியமித்துக் கொண்டார்கள்.

இவைகளல்லாமல் பொருளாதாரப் பிரச்னை, வியாபார அபிவிருத்தி, கைத்தொழில், முன்னேற்றம், விவசாய சீர்திருத்தம் முதலிய ஜீவாதாரமான விசாரங்களும் இருக்கின்றன. இந்த ராஜ பாட்டைகளை யெல்லாம் செப்பனிட்டு ஸ்பானியர்களின் வாழ்க்கை நடமாட்டத்தைச் சந்தோஷகரமாக்குவதில் எத்தனையோ உடைப்புகள் விழலாம்; தவறுகள் நேரலாம். என்றாலும் ஸ்பெயினை ஸ்பானியர்களே நிர்வஹித்துக் கொள்ளுவதில் தப்புச் செய்வதற்கும் அவர்கள் ஸ்வதந்திரம் பெற்றிருக்கிறார்கள். அரசர்களின் அக்ரம ஆட்சியின் கீழ் பல நூற்றாண்டுகளாக மிதித்துத் துவைக்கப்பட்டுக் கிடந்த ஸ்பானியர்கள், சுதந்திர லகிரி கொண்டு தவறுதல் செய்வதும் சகஜந்தான். அதைக் கேட்பது யார்? யாருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவர்களுக்கு அவர்கள்தானே அரசர்கள்.

இந்தியாவும் இதே ஸ்வதந்திரத்தைத்தான் கேட்கிறது. இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்துவிட்டால், நாமெல்லோரும் ஒருவனை யொருவன் கொன்று குவித்துக்கொள்ளுவோமென்று சர்ச்சில் கோஷ்டியார் கூறுகிறார்கள். அதற்கும் ஸ்வதந்திரம் இருக்க வேண்டுமென்பது காந்திஜீயின் கருத்து. ஸ்வதந்திரம் என்றால், நன்மை செய்வதற்கு மாத்திரந்தானா? நன்மையோ தீமையோ எதைச் செய்வதற்கும் அதிகாரம் இருந்தால்தான் சுதந்திரம் பெற்றதாக அர்த்தம். இந்தியர்கள் கும்பகர்ண சைன்யமல்ல. தர்ம பட்டாளம்.

# கோ மாதாவின் முறையீடு.

ஆரியூர் திரு. வ. பதுமநாப பிள்ளை அவர்கள்.

திருமகள் முன்னர்த் திருப்பாற் கடலில்
அருள் உருக்கொண்டு அமரர்கள் உய்யத்
தோன்றிய போது, துணையெனப் பிறந்து
வான்றிகழ் கற்பக மரத்தினை ஒப்ப
வேண்டுவார் வேண்டும் விழைவெலாம் அருளும்
மாண்பை யுடைத்தாய் வலி மிகப்பெற்ற
காம தேனுவின் காதற் சந்ததியாய்ப்
பூமியிற் பெருகிப் புகலரும் பெருமை
எய்திய தெல்லாம் இந்நாள் யாங்கள்
வெய் துயிர்த்திட விலகின அந்தோ!

பார்மகள் முன்னர்ப் பசு உருக்கொண்டு
சீர்வளர் திருமால் திருவருள் பெற்றாள்!
எமதுட லதனில் எண்பத்து நான்கு
அமரரும் உறைவர் அங்கங்கள் தோறும்!
நான் மறைக்கெட்டா நாரணப் பெருமான்
ஆன்பின் செல்ல ஆர்வம் மிகுந்தான்!
மூலப் பழமறை முன்நிற்கும் எந்தை
காலிக்குப் பின் கானில்த் திரிந்தான்!
மாதவர் போற்றும் மலரடி யிணையை
யாதவர் கோக்கள் இன்புற நக்கின!

கண்ணன் பக்கலிற் காதல் மிகுந்து
வண்ணமும் நிலையும் மாறி அவனருள்
எய்த ஏங்கி எண்ணறு கோவியர்
வெய்ய துயர்ப்படும் விதத்தை உன்னாது,
கோவலர் நாயகன் கோவிந்தன் முன்
ஆவல் மிகுந்தனன் ஆன்பின் செலவே!
அன்று தொட்(டு) இவ்வாரிய நாட்டில்
இன்றும் பெரியோர் ஏத்துவர் எம்மை!
அத்தகைச் சிறப்புகள் அனைத்தும் இந்நாளில்
புத்தகங்களில் புகுந்து கிடக்கும்

அத்தனையே யல(து), ஆரும் அவற்றைச்
சித்தத்தில் சற்றும் சிந்திப்ப தில்லை!



செந்தமிழ் நாட்டிற் செப்பும் இந்நாளில்
எந்தமர் துயரம் இயம்புவ தரிதே!
இன்று யான்படும் இன்னலை விளக்கின்,
வன்றுயர்ப்பட்டு வாடும் எம் இனத்தின்
அல்ல லெல்லாம் அறிந்தினி யேனும்
நல்ல கருணை நாட்டங் கொண்டு
உறுதுய ரொழிய உழைக்கு(ம்) நன்னெஞ்சைப்
பெறுவீ ரென்பது பேதையேன் எண்ணம்!

கன்றுப் பருவம் கடந்ததை எண்ணில்,
இன்றும் என்னெஞ்சம் ஏங்கி நிற்கின்றது!
தாய் மடிப்பாலைத் தமியேன் குளிர
வாய் மடுக்கும் வகை இலையேனும்,
மனஞ் சென்றவாறு மகிழ்ச்சியிற் பொங்கிப்
புனத்தும் அகத்தும் பொழுது கழித்தேன்!
அவ்வின்ப நாட்கள் அகன்றன விரைவில்;
செவ்வியிற் சிறந்து செப்பும் ஐந்தாண்டில்,
இனியதொர் கன்றை ஈன்றெடுத்தனனே!
சனியுந் தொடர்ந்தான் சாற்றன்று தொட்டே!

மாத மொராறாய் வயிற்றில் சுமந்து
வேதனைப் பட்டு விழைந்தீன் றெடுத்த
என்கன்(று) இன்புற இனிய என்பாலை
நன்கதற்(கு) ஊட்டி நலம்பெற அதனின்
ஆர்வந் தீர்க்க ஆசை கொண்டேனேல்,
சோர்வையே நுகரத் தோன்றிய எனக்கு
இன்ப அவ்வுரிமை எய்தியதிலை; என்
துன்பம் கன்றையும் தொடர்ந்தது அந்தோ!
என் மடிதன்னில் இன்பால் சுரந்தும்,
தன்மனம் மகிழத் தாய்ப்பால் அருந்தும்

உரிமைதானும், உற்ற என் கன்றுக்கு
அரிதென முடிந்தது! அன்பொ டென்பாலைப்
பருகும் போதே பக்கத் திருப்போன்
கருணை யில்லாக் கல் நெஞ்சினனாய்க்
கன்றின் கழுத்துக் கயிற்றினை இழுப்பான்!
வன்றுய ரடைந்து வாடியே, 'அம்மா'
'அம்மா' என்றது அலறித் தவிக்கும்!
வெம் மானிடரின் வேட்கையைத் தணிக்கக்,
கண்களாம் அந்தக் காட்சியைக் கண்டும்
புண்படு(ம்) நெஞ்சைப் பொருட் படுத்தாது,

கற் சிலை யொத்துக் காலாட்டாமல்
நிற்கவும் வேண்டுமாம்! நீதி அதேயோ?
சற்றே அசையினும் தயையது மனத்தில்
சொற்பமு மற்றுச் சுயநலங் கருதிப்
பாலைக் கறக்கப் பறக்கின்ற பாவி
கோலினா லென்னைக் கொடுமையாய் அடிப்பான்!
வன் கண்ணனென்றன் வாலை முறுக்கிப்
பன்முறை முதுகில் பளீர் பளீரென்ன
கையிற் கிடைத்த கழியினைக் கொண்டு
நையப் புடைக்க நான்பட்ட பாட்டை

இன்று நினைப்பினும் இருகணீர் பெருகும்!
என்றன் முதுகினில் இரக்கமே யில்லாப்
புல்லன் பலமுறை புடைத்ததனாலே
அல்லற் புண்களும் அமைந்தன அந்தோ!
அப் புண்களிலும் அப்பாவி யென்னைத்
தொப்புத் தொப்பெனவும், சுளீர் சுளீரெனவும்
பன்முறை அடிக்கப் பதைத்தேன்; இரத்தம்
என் முதுகதனில் எழும் பீறிட்டே!
அன்னது கண்டும் அடியை நிறுத்தான்!
என்னையோர் கல்லாய் எண்ணிப் புடைத்தான்!

வாலை முறுக்கி வயிற்றில் உதைப்பான்!
கோலைக் கொண்டு குத்துவன் முதுகில்!
இருப்புக் கோலை இனிது சிவக்க
நெருப்பினில் காய்ச்சி நெஞ்சில் சினத்துடன்
துடிக்கத் துடிக்கச் சுடுவன் சிலநாள்!
இடிப்பன்! உதைப்பன்! எண்ணிலாக் கொடுமைகள்
பற்பல செய்வன்! பரிவினை என்மேல்
அற்பமுங் காட்டான் அப்பாவி யந்தோ!
கண்ணீர் விடுத்துக் கலங்கி நின்றாலும்
எண்ணுவதிலை என் இன்னலை அன்னான்!

என் மடிக் காம்புகள் ஈரிரண்டவற்றுள்
இன்புறக் கன்றுக் கிரண்டையும் விடுத்து
எஞ்சிய காம்புகள் இரண்டையே கறப்பர்;
விஞ்சிய பரிவால் வேளை யிரண்டிலும்
சிந்தை குளிரத் தீனியும் இடுவர்
முந்தை நாளில் மொழி தமிழ்ப்பெரியோர்!
எம்மவ ரீன்ற எங் கன்றுகளை
தம்மக்கள் பேணும் தன்மையை யொத்து



மணிகளும் வளைகளும் மகிழ்வுறக் கோத்து
அணிபெறப் புனைந்து அழகு செய்திடுவர்!

முகத்தை மோந்து முத்த மிட்டிடுவர்!
பகரவற்றோடு பரிவொடு கொஞ்சுவர்!
அனையவை ஓடி ஆடிடக் கண்டால்,
மனை விளையாடும் மைந்தரைப் போலும்
மனத்தி லவற்றை மதித் தின்புறுவர்;
சினத்தை அறியார் சீர்பழந் தமிழர்!
எம்மவர் பெருமை இனி துணர்ந்தவராய்
தம்மனை பேணும் தாய்மா ரென்ன
எங்களை முன்னர் எண்ணிப் போற்றினர்!
மங்கல மென்பர் மனைக் கெம்மவரை!

துயில் விட்டெழுந்து தொழுவினை அடைந்து
பயிலும் எம்மவரைப் பரிவொடு நோக்கி
எம்மவ ருடலில் இயைந்த தேவர்களைத்
தம் மனத்தெண்ணிச் சாந்த நெஞ்சினராய்
இருகரங் குவித்து இறைஞ்சி நிற்பர்—எம்
பெருமையை உணர்ந்த பேரறிவாளர்!
மங்கையர் எம்முகம் மஞ்சளால் பூசிக்
குங்கும மணிந்து கும்பிட்டிடுவர்!
சிந்தை குளிரத் திரிந்து அகம் மீண்டு
அந்தி வேளையில் ‘அம்மா’ என்று

அழைத்திடுவோமேல், அக் குரல் கேட்டுத்
தழைத்த நெஞ்சினராய்ச் சடக்கென வந்து
கொள்ளுந் தவிடுங் கூறு பிண்ணாக்கும்
தள்ளாதின்றிக் கருணையோ டளிப்பர்!
வயிறது நிறையு மளவும் எம்முன்னோர்
எயிறவை அசைத்து இன்ப மெய்திடுவர்!
என்புன் வாழ்வில் இவையெலாம் அறியேன்!
முன்(பு)என் அன்னை மொழிந்திடக் கேட்டேன்!
பகரிவை யெல்லாம் பழங்கதை யாயின;
இகழ்வு மிகுந்த(து) எம் இனத்தவர்க் கின்றே!

எந்நன்றி கொன்றார்க் கெனினு(ம்) உண்டு உய்வு;
செய்ந் நன்றி கொன்ற தீயருக்(கு) உய்வு
என்று மில்லை என்பர் மூதறிஞர்!
அன்புறு தாய்போல் அரு மகவதற்கு
ஊட்டிடு பாலை உதவி வளர்த்தும்;

தீட்டது நீங்கத் திவ்விய பஞ்ச
கவ்வியம் அளித்தும்; காலையும் மாலையும்
செவ்விய பாலைத் தினமுந் தந்தும்
செய்யுபகாரம் சிந்தியா தென்னை
நையப் புடைத்த நன்றியற்றவனும்

இருகால் மிருகம் இறந்தபின் எய்தும்
அரு நரகதனை அறநூல் பலவும்
வருணித்திருக்கும் வகைகள றிந்தும்,
கருணை யின்றிக் கல் மனத்தினனாய்ப்
பெரிதெனை வாட்டிய பேதை, மறுமையில்
எரிவாய் நரகினில் இருந்து வருந்துவன்!
எம் மினத்தவரின் ஏற்ற மறிந்து
தம்மினத் தலைவன் தாமோதரன் முன்
செய் விளையாட்டைச் சிந்தை யிருத்தி
பொய் காவறியாப் புகழுடை ஆயர்,

செப்பும் எமைத்தம் செல்வமாய் மதித்து
ஒப்பறும் அன்பொடும் ஒப்பி வளர்த்தனர்!
பாசம் வளர்க்கும் பண மயலற்று
நேசம் வளர்க்கும் நீர்மையராம் எம்
இனத்தவர் தம்மையே இன்புறு செல்வமாய்
மனத்தினி லிருத்தி வளர்த்தனர் முன்னாள்!
எங்கு நோக்கினும் இயற்கை வனப்பு
பொங்கும் இன்பத்தைப் புந்தியிற் பெருக்கி
வருத்தப் பேயை மறைந்திட ஓட்டிக்
கருத்தினில் தெய்வக் காதலை மூட்டும்

முல்லை நிலத்தில் முன்பு வாழ்தமிழர்
எல்லையி லின்பம் எம்மால் பெற்றனர்!
வனத்திடை எம்மவர் வயிறுற மேய்ந்து
மனத்தினில் என்றும் மகிழ்ச்சியே நுகர
எண்ணி, எம்மவரை இனிய அவ்வாயர்
தண்ணிழல் மரங்கள் தழைத்த வனத்தில்
செலுத்திச் சென்று செவ்விதில் மேய்த்து
அலுப்பறியாதே அகங் களித்திடுவர்!
வெங் கதிரோனின் வெப்பக் கொடுமை
அங்கிலை யாதலின், ஆநிரை மேய்க்கும்

செல்வன் ஒருமரச் சீர்நிழ லதனில்—
மல்கு மலர்க்கனி மரங்களி னிடையில்—



அங்கமர்ந் திருந்து நாற்புறம் நோக்கி
இன்ப இயற்கை எழில்வளங் காண்பன்
தண்மலர் பலவும் தாங்கி ஓங்கிய
வண்ண மரங்களும், வளியா லசைந்து
ஆடுங் கொடிகளும், அவற்றி லமர்ந்து
பாடும் புட்களும், பண்பல பாடிச்
செந்தே னருந்தித் திரி சுரும்பினமும்,
தந்தோ மென்று தம்சிறை விரித்து

நடமிடு மயில்களும், நற்கற் பாறையில்
தடதட வென விழும் தண்புனல் வீழ்ச்சியும்,
பசுநிறப் பட்டுப் பாப்பினை லன்ன
பசுமை நிறமுடைப் பைம்புல் தரையும்,
பார்க்கப் பாக்கப் பகரும் அன்பும்
சேர்ப்பனவாம் அவன் சிந்தையில் தினமும்!
மாலை வேளையில் மகிழ்வது பொங்க,
வேலை நிறத்து விமலன் போலும்
இன்னிசைக் குழலை எடுத்து வாய்வைத்துத்
தன்னையும் மறந்து தன் பசுவினங்கள்

தம்மையும் மறந்து தனிப் பேரின்பம்
விம்மிடப் பண்ணின் விதங்கள் பலவும்
இசைத்திடா நிற்பன்; இன்குரல் கேட்டு
அசைவிலராகி அங்கங்கு நின்று
மேய்கை தவிர்ந்து மேய்ந்திட்ட புல்லும்
வாய் கடைவழியே வழிய, அக்குழலிசை
இன்பந் தன்னில் ஈடுபட்டவராய்
அன்பவன் பக்கலில் அதிகரித்தவராய்ச்
செல்வர் அவனிடம் செப்பும் எம்முன்னோர்!
அல்லல் எதுவும் அறிந்திலர் அவரே!

இவையெலாம் முன்னர் என்தாய் சொல்ல,
நவையிலா முன்னோர் நல்லன்(பு) உணர்ந்து
அகம் மிக மகிழ்ந்தேன் அவர் வழி வந்தோர்
தகவிலராகித் தன்னலம் பேணும்
வன்னெஞ்சினராய் மாறிய தெண்ணிப்
பன்னருந் துன்பப்பட்டு நின்றனனே!
இக் காலத்திலோ எங்களை மேய்ப்பதை
மிக்கவும் இழிந்த வினையென நினைப்பர்!
இன்ப வனங்கள் எங்கோ மறைந்தன!
இன்புற எண்ணி எண்ணிலர் முல்லை

நிலத்தைத் துறந்து, நெய்தலும் மருதமும்
நலம் பலவற்றையும் நல்குதற்(கு) உரிய
நல்லிடங்களென நண்ணினர்; அதுமுதல்
பல்வகைத் துயரால் பரிதவிக்கின்றார்!
மொழி வளஎழிலை முற்றும் மறந்தார்;
இழிவுறு செயற்கை இன்பம் விழைந்தார்!
அழுக்காறல்லால் அன்பினைக் கொள்ளார்;
ஒழுக்கங் குன்றினர்; ஒருவரை யொருவர்
பகைக்கத் தொடங்கினர்; பழம் பெரியோரை
நகைத்திழித் துரைப்பர் நல்லறிவில்லார்.

பொய்யுஞ் சினமும் பொல்லாக் கொலையும்
வையமிதனில் மலிந்தன அந்தோ!
துயர்மிகும் என்கதை தொடர்ந்திடக் கேட்பீர்!
பயமறியா என் பச்சிளங் கன்று
வேதன் விதித்த வெவ்வினை வலியால்
மாதங்கள் பத்து வாழ்ந்திருந்ததுவே!
காலவை கயிற்றால் கட்டி, என் மடியில்
பாலது சுரக்கப் பண்ணும் நோக்குடன்
அருமைக் கன்றினை அவிழ்த்துவிட்(டு), என்பால்
இருவாய் குடித்ததும் இழுத்ததன் வாயை

வைக்கோற் கயிற்றால் வலிதிற் கட்டினர்!
அக் கொடுங்கோல மதனைக் கண்ணுற்
கண்டு நின்றிடவும் கடவுள் என் தலையில்
பண்டு வரைந்து பாருக் கனுப்பினன்!
என் கண்ணெதிரில் என்புக்கூடாய்
என்னருங் கன்று இளைத்து வந்ததுவே;
ஈன்ற தாய் எதிரில் இடுக்கண்படும் அது
தோன்றாதிருப்பின் துயரிலை என யான்
எண்ணவும் நேர்ந்தது! இறுதியில் ஒருநாள்
அண்ணால் இன்னருளால் அவனியின் வாழ்வைத்

துறந்தது சென்றது. துயர்மிகும் யானோ
இறந்திலன்; இருந்தேன் இனுந் துயருறவே!
தோலுள் வைக்கோலைத் துறுத்(து) உருவாக்கிக்
காலும் வைத்ததைக் காட்டினர்; கண்டேன்!
பொய்யுருக் கண்டேன் புன்மடியிற் பால்
வெய்யவர் கறக்க விட்டு நின்றனனே!
பின் சில கன்றுகள் பிறந்து பெருந்துயர்
தன்னை நுகர்ந்தன; தளர்ந்தனன் யானும்



உழக்குப் பாலும் உதவுதற்(கு) இயலாக்
கிழப்பசுவானேன்; கீழ்மை அடைந்தேன்!

சொற்ப வைக்கோலைத் தூவியிட்டுத் தினம்
பற்பல வருடமென் பாலைக் கறந்து
வயிற்றை வளர்த்த வன்கண்ணரெல்லாம்—
தயிரும் வெண்ணெயும் சாற்று நன்னெய்யும்
உண்டவரெல்லாம்—உரைப்பரு(ம்) என் துயர்
கண்டு மதனைக் காணாதவர் போல்
கவனியா தொழிந்தார்! கயிற்றை அவிழ்த்துக்
கவலையற் றென்னைக் கடத்தினர் வெளியில்!
பச்சைப் பசேலெனப் பார்த்தனன் ஒருவயல்,
இச்சையுற் றேனதன் இன்சுவை காண:

இறங்கி அவ் வயலில் இரு கதிர் தின்றேன்;
அறமதை நினையா ஆடவன் ஒருவன்
எங்கிருந்தோ உடன் எய்தினன்; என்னை
அங்கு கைத்தடியால் அடித்தனன் பன்முறை.
ஆண்டுகள் பலவாய் அரிய என் பாலை
வேண்டி யிரண்டு வேளைகள் தோறும்
என் பால் கறந்து இன்புறக் குடித்தும்
நன்றியே இல்லா நாயினுங் கடையர்
வலியெலாம் இழந்து வாடிப் பெரிதும்
நலிவுறு முதுமை நாட்களில் என்மேல்

சிறிதும் இரக்கம் சேர்ந்திலாதவராய்
வறிதே விடுத்தனர் வாடித் தவிக்க!
உடலம் இஃது ஒழிவ(து) எந்நாளோ?
கடவுட்கும் என்மேல் கருணையே இல்லை!
எழுந்தனன்; பின்னர் யான் அடைபட்டிடும்
தொழுவினை அடைந்து துன்புற்றிருந்தேன்.
தொட்டி யதனில் சொற்பக் கொள்ளுக்
கொட்டி யிருந்தது; குதூகலத்துடனே
தின்றேன் அதனை; தீயன் எவ்வாறோ
என்றனைக் கண்டான்; இயம்பரும் சீற்றம்

கொண்டவனாகிக் கோலது கரத்திற்
கொண்டு வந்து கொஞ்சமும் நெஞ்சில்
இரக்கமின்றி என்றனைப் புடைத்தான்;
அரக்கனே மனிதன் ஆயினன் கொல்லோ?

என்னுற் பயனில்லை என்ப தறிந்த
அண்ணன் ஒருநாள், அவ்விடம் வந்த
இறைச்சி விற்கும் இயல்பினனுக்குக்
குறைந்த விலைக்கெனைக் கொடுத்துவிட்டானே!
என்னை உடன் அவன் இழுத்துச்சென்று
தன்னிருப்பிடந் தன்னில் விடுத்தான்.

இன்றே நாளையோ என்னை அவன் இனிக்
கொன்றே தீர்ப்பன், கூறும் இவ்வுலகை
விடுத்தினி மடிவதில் விசனமொன்றில்லை!
தடுத்தெனைக் காக்கும் தயை உடை எவரும்
இவ்விடத்தில் இனி எய்துவ தரிதாம்;
வெவ்விய என்றன் விதிப்பயன் இதுவாய்
முடிந்த(து); என்போலும் முதிய பசுக்கள்
மடிந்திட இங்கே வந்துள சிலவே.
யாமினி வானில் இறைவனுரிடம், இப்
பூமியிற் கொடியோர் புரிபல கொடுமைகள்

தரித்திடற்(கு) அரிய தன்மைய என்பதை
விரித்(து) எடுத்துரைத்து விளக்கிக் காட்டுவோம்!
காக்குந் தொழிலுடைக் கடவுள் இவ்வுலகில்
கோக்களைப் பேணக் கோபாலனுகப்
பிறந்(து) எம்மவரின் பெருமையை உணர்ந்து
மறந்திடா தென்றும் மகிழ்வொடு போற்றி
இன்புற உணர்த்தி ஏகிய தெண்ணி
அன்புறுதவராய் அளப்பருங் கொடுமைகள்
செய்யும் புன்மையைத் திருமால் உணர
நையும் எம்மவர் நலிவெலாம் சொல்வோம்!

அருளிலாக் கோடியீர்! அத் திருமாலின்
திருவுளத்(து) உம்மேல் செப்பருஞ் சீற்றம்
பிறந்திடும்; பின்னர்ப் பெருகு துன்பங்கள்
இறந்திடல் இனிதென எண்ணும் வண்ணம்
உங்களைச் சூழும் உணர்வீர்! உணர்வீர்!!
எங்கட்(கு) இனியும் இன்னு இழைப்பின்,
திருமகள் உங்களைச் 'சீ'என இகழ்வள்;
பெருகு புன் வறுமை பின்னும் பெருகிடும்;
அடிமை வாழ்வில் அடை பல துன்பமும்
குடித்தனத் துயரும் கொலையும் கொள்ளையும்

உதிக்கும் குழந்தைகள் உடன் மடிந்திடலும்
கொதித்தெழு நெஞ்சம் கொள் பிணக்குகளும்



பிணிகளும் பிறவும் பெரிதும் மிகுந்திடும்!
பணி புரிந்திடலில் பரிவுறு பெரியீர்!
ஆருயிர்ப் பக்கலில் அன்பினை உடையீர்!
நேரும் எவ்விடர்க்கும் நெஞ்சில் அஞ்சாதீர்!
எங்கட்குத் துன்பம் எங்கெங்(கு) இயற்றுவர்,
அங்கங்கு நீவிர் அஞ்சாது சென்று
அக் கொடியோரின் அருளிலாச் செயலால்
மிக்க துன்பங்கள் விளைந்திடு மென்பதை

நலம்பெறப் பலர்க்கும் நன்(கு) அறிவுறுத்தி,
நிலம் இது பண்டைய நேர்மையை அடைந்து
உய்வுற உழைக்க உறுதி கொண்டிடுவீர்!
தெய்வ அருள்துணை சேரும் உங்கட்கே!
கோழைமை நீங்கிக் குன்று உறுதி கொண்(டு)
ஏழைப் பிராணிகட்(கு) இரங்கிடில், இறைவன்
இன்னருள் செய்வன்; எதிர்ப்படுகின்ற
இன்னல்க ளெல்லாம் இன்பங்க ளாகும்!
கோமாதா யான் கூறு மாற்றங்கள்
தாமா தரித்துத் தயை மிகுந்தவராய்

எம் மினத்தவரின் இடர்களை நீக்கச்
செம்பணியதை இனிச் செய்திட எழுவீர்!
அன்புத் தொண்டுக்(கு) ஆண்டவன் துணை உண்(டு);
இன்ப வெற்றியும் இறுதியில் உண்டே!

---

குறிப்பு:—

ஆரியூர்க் கவிஞர் பதுமநாபரின் இந்தக் "கோ மாதாவின் முறையீடு" ரொம்ப உருக்கமா யிருக்கிறது. பசு நிரையைக் காக்கப் பதுமப் பாடல், கோவர்த்தனக் குடையைப்போ லிருக்கிறது. விராட நாட்டுப் பசுக் கூட்டத்தைத் துரியோதன னிடமிருந்து சிறை மீட்டியது போலத் தமிழ் நாட்டுப் பசுக்களைப் பதுமநாபர் சிறை மீட்க விரும்புகிறுர். அந்த எண்ணமும், முயற்சியும் வாழ்க! நிரந்தரம் வாழ்க!!

கிழப் பசுக்களைத் தனித்தனியே ஒவ்வொருவராலும் சம்ரக்ஷிக்க முடியா விட்டால் ஒரு கிராமத்தாரோ அல்லது ஜில்லாவாசிக ளனைவருமோ சேர்ந்து அவைகளுக்குப் "பிஞ்சர் போல்" கட்டிவைத்து ரக்ஷிப்பது நலம். அப்பொழுதுதான் பத்ம வாவி கொந்தளிக்காம லிருக்கும். இரங்கோனி லுள்ள பகவான்தாஸருடைய 'பிஞ்சர் போல்' இப்பொழுது எங்கண் முன்னே காட்சி தருகிறது. கசாய்க் கடைக்கு இரண்டு ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப் பட்ட ஒரு கிழப் பசுவை, ஒரு நாள் 200 ரூபாய்க்கு வாங்கிய பகவான்தாஸ னுடைய ஜீவகாருண்யத்தை, எம்மால் உயிருள்ளவரை மறக்க முடியாது. எமது தமிழர்கள் என்ன செய்யப்போகிறுர்கள்? —(ப-ர்.)

# காதலா? கடமையா?

ஒரு சிறு கதை.

(கிருஷ்ண குமாரா)

மதுரை! மதுரை!! மதுரை யென்கிற பேரிலுந்தான் எவ்வளவு மார்த்தவம்!!! இனிமை தவழுகிறது; இன்பம் ஸ்புர்த்தி யாகிறது. காம்பீர்யம் ககனம் வரை யெட்டுகிறது; கர்வம் உச்சி வானைத் தொடுகிறது. பழந் தமிழ் வீரம்! மறக் குல மன்னர்களின் மயிர் சிலிர்க்கும் செயல்கள்! மூன்று சங்கங்களின் தண்டமிழ் மணம்! சமயாச்சாரியார்களின் திருவடிச் சுவடு! கவித் தச்சர்களின் காவிய உத்தியானம்! பாளையக்காரர்களின் தேச பக்தி! பாண்டியர்களின் ஸ்வாதந்தர்ய உணர்வு! இவைகளுக் கெல்லாம் எல்லையாகவும், ஞாபகார்த்தமாகவும் இப் பழங்கா நகரம் ஒன்றுதானே யிருக்கிறது! ஸ்வாதந்தர்யம், சுதேசாபிமானம், சுபிக்ஷம் ஆகிய சுபோதங்களுக்கு வரம்பு இவ்வளவுதான் என்று வரை யறுக்கின்ற நீதி பீடம் மதுரைதான். இல்லாவிட்டால் இந்தப் போரிலுங்கூடத் தமிழ் நாட்டுக்குக் கௌரவ ஹானி நேர்ந்து விடாதா?

எத்தனை எத்தனையோ பாண்டிய, நாயகர்கள் மதுரையை ஆண்டாண்டு மறைந்தார்கள். அவர்களைப் பற்றிய ஞாபகங்கூட நமக் கில்லை. அவர்கள் ஆண்டார்கள்—நன்கு அரசாண்டார்கள் என்பதையே நாடு அநேகமாய் மறந்துவிட்டது. ஆனால் அவர்கள் கட்டி வைத்துப்போன கோபுரங்கள், ஆலயம் அரண்மனை, தெப்பக்குளம், மண்டபம் முதலிய சிற்ப நிலயங்களை என்றைக்காவது தமிழ் ஜாதி மறந்துவிடப் போகிறதா? இப்பொழுது இருக்கிற தமிழர்களும், இனிமேல் பிறக்கப் போகிற தமிழர்களும், இந்தக் காவியச் சின்னங்களை ஹிருதயத்தைப் போல் போற்றுவார்கள்; காப்பாற்றுவார்கள்.

பாண்டியனுக்கு மகளாக வந்து, எம்பெருமான் சோமசுந்தரனுக்குத் தடாதகைப் பிராட்டியார் மாலையிட்ட பின், பந்தி போஜனம் நடைபெறுகின்றது. அந்த இடத்திலே ஒரு திருவிளையாடல். எவனோ ஒரு குண்டோதரன், மலை மலையாகச் சோற்றை விழுங்கு



கிறான். ஆக்கி யிருந்த அன்னமும் போதாமல், பொங்கிப் பொங்கிப் போடுகிறார்கள். அவ்வளவையும் தின்ன அவனுக்கு வயிறு எங்கிருந்துதான் வந்ததோ? சாப்பிட்டு முடிந்தது. தாகத்திற்கு தண்ணீர் கேட்கிறான். மிடா மிடாவாக மோந்து கொடுத்தார்கள். அவைகளெல்லாம் "மலை முழுங்கி மஹா தேவனுக்கு கதவு ஒரு அப்பளம்" என்ற கதையாக முடிந்தது. மோந்து கொடுத்து மாளவில்லை. அப்பொழுதுதான் நதிமகள் வைகை அழைக்கப்படுகிறாள். சக புத்ரர்களுடைய காஷ்டத்தைப் புனிதப்படுத்துவதற்காக தேவமாநதி கங்கையைப் பகீரதன் அழைத்தது போல குண்டோதரனுடைய வறண்ட நாவைக் குளிரப் பண்ணுவதற்காக வைகை மகள் அழைக்கப்பட்டாள். அன்று முதல் அவள் தென் தமிழ் நாட்டின் வறட்சியைத் தணித்து வருகிறாள். இல்லாவிட்டால் பாண்டி நாடு சஹாராப் பாலைவனத்தைவிட மஹா கேவலமாயிராதா? தாகவிடாய் தணிக்க வந்த வைகை, தனது ஒவ்வொரு துளி ஜலத்தையும் தான் பிறந்த தார்மார்த்தீகமாகவே சுரக்கின்றாள். மற்றைய நதி மகளிரெல்லாம் குடில வேகமாகத் தங்கள் தங்கள் நாயகர்களாகிற நீலக்கடலுடன் பிரேம சங்கமமாகச் சம்மேளிப்பதற்காக ஓடிக்கொண்டிருக்கையில் இந்த வைகைப் பிராட்டி மாத்திரம் ஒரு ஏரியைத் தனது சங்கம ஸ்வாமியாக ஏன் வரித்துக்கொண்டாள்? அரச குமாரிகளுங் கூட சாமான்ய பிரஜைகளிலே காதல் காணுவது உண்டல்லவா? புனிதமான காதலுக்கு ஜாதி யேது? தாரதம்மிய மேது?

இன்று அமாவாசை. சூரியனும் சந்திரனும் முப்பது நாட்களுக்குப் பிறகு இன்றுதான் சந்தி செய்திருக்கிறார்கள். அள்ளிக் கொள்ளலாம் போல அவ்வளவு காரிருள்—கருத்த இருள் உலகத்தை மூடிக்கொண் டிருந்தது. நட்சத்திரங்கள் கூட இன்று ஏனோ பூத்திருக்கவில்லை? மேக ராஜன் வான வளையத்தைக் கவ்விக்கொண்டு விட்டானோ? அல்லது இருள்த் தேவிதான் வையத்தையும் வானத்தையும் வயப்படுத்திக்கொண்டு விட்டாளா? என்னவோ தெரியவில்லை. கிள்ளிவிட்டுக் கிட்ட நின்றாலும் உருவத்தை ஒழிக்கின்றது. வைகை தேவியின் படுகையும் பஞ்சணையு மாகின்ற மணற் பரப்பிலே ஒரு ஜோதி மான் மாத்திரம் பளிச்சிட்டுக்கொண்டிருக்கிறது. அந்த வொரு மின்னல்தானு மில்லாவிட்டால் சிச்சி! இந்த இரவு எவருக்கு வேணும்?

"எட்டு மணி யடித்துவிட்டும் எனது பிரேம கிருஷ்ணன் இன்னும் ஏனோ வரவில்லை?" என்று ஒரு வீணா கானம் த்வொனித்தது. சாரங்கியின் மெல்லிய தந்தியுங்கூட அந்த ஸ்வரத்தை யிசைக்க முடியுமா? பெண் குரல்; ஆணுள்ளத்தை யெல்லாம் கவ்வுகிறது.

தொனி வந்த திசையிலே நமது மனோ தர்மமாகிற ரதத்தை விடுத்து அந்த மதுர வாணியை யொழுகவிட்ட தெய்வம் யாதெனப் பார்க்கத் துணிந்தோம். கற்பனாசிரியர்களுக்கும், கதா சிற்பிகளுக்கும் கண் பார்வை ரொம்பக் கூரியது. எப்பேர்ப்பட்ட இருட்டையும், கற் கோட்டைகளையும், அந்தப்புரச் சுவர்களையுங்கூட ஆசிரியக் கண்கள் ஊடுருவி விடுகின்றன.

ஒரு யுவதி. பெண்ணுலகத்தில் வாழ்க்கை யாகிற யாத்திரையில் எந்தப் பருவமானது மிகுந்த இன்பம் அளிப்பதாயும், சர்வ சுகங் கொடுப்பதாகவும் இருக்கின்றதோ அந்த இராணி வாசத்திலே இப்பொழுதுதான் அடி யெடுத்து வைத்திருந்தாள். யௌவனம் என்னும் புதுப் பூங்காவிலே பூத்திருக்கும் அந்தப் பூவிலிருந்து புதுத் தேனைப் பருகும் காதலோடு வண்டினங்கள் மொய்க்கக் கூடிய பதினாறும் பிராயம் ஆரம்பித்து இன்னும் மறு பூரணச் சந்திரனைப் பார்க்கவில்லை. ஈவு இரக்க மில்லாத ஈரமற்ற நெஞ்சத்தவர்களின் ஹிருதய அறைகளைப் போல நமது கற்பனா சுந்தரியின் கேசங்கள் கருத்து, அடர்ந்து, சடையாகப் பின்னப்பட்டுத் தோளின் மீது விளையாடிக்கொண் டிருந்தது. மாசு மறுவில்லாத நெற்றியிலே ஒரு சிறு குங்குமத் திலகம் அழகுபடுத்திக் கொண்டிரா விட்டால் அதைக் களங்கமுள்ள மூன்றாம் பிறைச் சந்திரமாவுக்கு இணையாகச் சொல்ல முடியுமா? கண்கள் காதளவோடி மின்னலைப் போலப் பளிச்சுப் பளிச்சென்று வெட்டிக் கொண்டிருந்தது. அவற்றில் படிந்திருந்த செவ் வரிகள், இன்னும் சோபையோடு அந்தகாரத்தி னடுவிலேகூடப் பிரகாசித்தன. அவைகள் மான் விழிகளைப் போல ஏன் மருண்டு மருண்டு பார்க்க வேண்டும்? எவரையோ எதிர் பார்ப்பதுபோ லிருக்கிறது. மற்ற அங்கங்களை வர்ணிக்க வேண்டுமே என்ன செய்கிறது? வாசகர்களின் தயா பூர்வமான மன்னிப்பைக் கோருகிறோம். நமது கதா ரதி, முரட்டுக் கதர்ச் சேலை கட்டியிருந்தாள். இரவின் இருண்ட நிறமும், சேலையின் பசுமை நிறமும் சேர்ந்துகொண்டு, அவளது இதர அவயவங்களை நமது கண்களிலிருந்தும் ஒழித்து விட்டன. முகம்—பூரணச் சந்திரன் போன்ற முகம்—சௌந்தர்யத்தின் வரம்பு வரை அழகு படுத்திக் கொண்டிருக்கின்ற முகம்! அவ்வளவுதான். அது வொன்றைத்தான் கண்டோம்.

நதி மாதாவுக்கே மாலை யிடுவதுபோ லிருக்கின்ற வைகையாற்றின் இரு கரைகளிலும் உள்ள தென்னைக் கூட்டம்! கமுகஞ் சோலை! மாந்தோப்பு! அவைகளை வகிர்ந்துகொண்டு எவரோ வருவது போலிருக்கிறது.



வசந்த காலம். வசந்த ராஜன் முழுக் கோலாகலத்துடனும் ஆட்சி செலுத்துகிறான். நதிப் பெண், புதுப் பெண் போல அச்சத்தாலும், நாணத்தாலும் அமைதியா யிருக்கிறாள். ஆலிலை போன்ற வயிற்றில் கெர்ப்பச் சின்னம் கொஞ்சங்கூட இல்லை. தலைவனோடு ஊடிய தலைவியைப் போல் பிசு பிசுவெனக் கண்ணீர்த் திவலைகளைப் பெருக்கிக் கொஞ்சந்தான் தண்ணீரைச் சுரந்துகொண் டிருக்கிறாள். அலையோ, வேகமோ இல்லை; சாந்தந் தவழுகிறது. நில்லு. இந்த அமைதியைக் கலைக்க எந்த ஆண்மகனுக்குத் தைரியம் வரும்?

"எனது கடிகாயந்திரம் எட்டடித்து இன்னொரு கால் மணியையும் காட்டி விட்டதே. இன்னும் ஏன் எனது ஹிருதயேஸ்வரன் வரவில்லை?" என்கிற தேன் மொழி ரோஜா நிறத்து இதழ்களின் வழியே வழிந்தது. நாலா பக்கமும் பார்வை! அப்புறம் ஒரு பெருமூச்சு! அதுஊருக்கெல்லாம் கேட்கும்! பின்னர் இதற்கு இரகசியமென்கிற பேர் ஏன்?

காதுக்கெட்டும் தூரத்திலே "அதோ அவர் வருகிறார்! அவருடைய காலடிச் சப்தம் எனக்கென்ன தெரியாதா? ஆம் அவர்தான். இல்லாது வேறு யாருக்கு இந்தத் துடுக்கு வரும்? நிச்சயமாய் அந்த உருவம் என்னை நோக்கித்தான் வருகிறது. இந்த இரவிலும், அந்தகார அடவியிலும் கூட, என்னை அடையாளங் கண்டுகொள்ள அவர் ஒருவருக்குத்தானே முடியும்! ஆம் அவர் வருகிறார்! அவர் வருகிறார்!"

"மன்னிக்க வேணும் வஸந்தா! மன்னிக்க வேணும். எனது பிராணப் பிரேமாவை இவ்வளவு நேரம் இந்த இருட் கணத்திலும் மணற் பரப்பிலும் இக் கிருஷ்ணன் காக்க வைத்து விட்டானல்லவா? அதற்குரிய தண்டனையை அவனுக்குக் கொடுத்துவிடு; சீக்கிரம் கொடுத்துவிடு."

"என் கண்ணா! நானா தங்களைத் தண்டிப்பது! இந்த இரவெல்லாம் காத்திருக்கச் சொன்னாலும் ஒரு நிமிஷ தரிசனத்திற்காக அப்படியே செய்வேனே. நானா என் பிராணனைத் தண்டிப்பது!"

"தண்டிக்கத்தான் வேணும் வஸந்தா! தண்டிக்கத்தான் வேணும். முதல் தடவையாகவும் கடைசித் தடவையாகவும் உனது சின்முத்திரையாகிற தண்டனையை எனது கன்னங்களிலே சுளீர் சுளீரென்று கொடுத்துவிடு. இல்லாவிட்டால் நானே உனது செக்கச் சிவந்த கன்னங்களில் கொடுத்துவிட்டு ஓடிப்போய் விடுவேன்."

"அப்படியே அறையுங்கள்; ஆனால் ஓடிப்போக மாத்திரம் வேண்டாம்."

இந்தக் கட்டத்திலே ஒரு இன்ப படலம் விரிகிறது. அதை நான் வர்ணிக்க மாட்டேன்; வர்ணிக்கவே மாட்டேன்; போ. போ. அதை என்னால் வர்ணிக்க முடியாது.

"பிரிய வசந்தா! உன்னை நான் பிரியவேண்டிய பிராணாவஸ்தையிலிருக்கிறேன். நம்மிருவருடைய காதலுக்கும் இடையே காதலைவிடப் பரம பவித்திரமானதும் தடுக்க முடியாததுமான இன்னொரு நிகழ்ச்சி குறுக்கிட்டிருக்கிறது. அதுதான் கடமை—மஹா புனிதமான கடமை."

"என்ன? என்ன சொல்லுகிறீர்கள்? ஒன்றுமே விளங்கவில்லையே? கடமையா? யாருக்கு? எதற்காக?"

"ஒவ்வொரு பிரஜையும் அவனவன் பிறந்து வளர்ந்து அவனுக்கே சொந்தமான ஜென்ம பூமிக்கு-தாய் நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமை யிருக்கிறதே அதைச் செய்து முடிக்க வேண்டிய கடைசி கட்டத்திலே-இறுதி நிமிஷத்திலே நான் இப்பொழுது நின்றுகொண்டிருக்கிறேன். ஆனால் அதை நிறைவேற்றுவதில் எனது பிராணன் வரை பலி கொடுத்தாக வேண்டும்."

"ஹா பிராணா! உயிரையும் பலி கொடுக்க வேண்டுமா? அப்படி நீங்கள் போய்விட்டால் உங்களையே உடல், பொருள், ஆவி சர்வமுமாய் நம்பி நிற்கின்ற இந்த ஏழையின் கெதி யென்னாகும்?"

"இந்தப் பிரச்னை பரம்பரையிலேதான் நானும் வெகு நேரம் வரை நின்றிருந்தேன். "காதலா? கடமையா?" எதை நான் செய்து முடிப்பது? என்கிற சந்தேக பாவத்திலே திசை காணாமல் திரிந்து கடைசியில் "கடமை"யைத்தான் சர்வமும் எனத் தேர்ந்தெடுத்தேன். இந்தத் தீர்மானத்திற்கு நான் வந்தபோது எனது பிரிய வசந்தாவும் எனக்கு உதவி செய்வாள்-நிச்சயமாய் உதவி செய்வாள் என்று திடமாக நம்பினேன். அந்த நம்பிக்கையிலே மண்ணைப் போட்டு விடாமல் உனது கனிவான வாயினாலே "பிராணா! போய் வா. பழந்தமிழ் வீரனைப் போல உனது கடமையைச் செய்து வா." என்கிற விடையையும், என்னையும் அமரனாக்கிப் பரமபதம் சேர்க்கக் கூடிய இன்னொரு முத்தத்தையும் கொடு."

"ஆனால் கடமையாகிற அக் கொடிய பூதம் எனது ஜீவ காதலனை என்னிலிருந்தும் இவ்வுலகத்திலிருந்தும் பிரிப்பதானால் தாங்கள் அதைக் கண்டிப்பாய்ச் செய்யவே கூடாது. வருவது வரட்டும்."



"என்ன சொல்லுகிறாய்? கடமையைக் காலடியிலே போட்டு மிதித்து நசுக்கிவிட்டு, பரோபகாரமாகிற மனுஷ்ய தர்மத்தையும் புறங்காலால் உதைத்து விட்டு, சுக போக பவனத்திலே பிரேம ஸ்வப்பனம் கண்டு கொண்டு சுய நலமாக வாழுகிறதா? முடியாது. கிருஷ்ண தாஸன் அவ்வளவு அற்பனல்ல! கர்த்தவ்யத்தை விட காதலோ போக விலாசமோ அவனுக்குப் பிரதமமில்லை. புவனம், பிரேமம், செல்வம் எல்லாவற்றையுந் தாண்டியதல்லவா தேச பக்தி."

"வாஸ்தவந்தான்; ஆனால் உங்களையே நம்பியுள்ள என் கெதி என்ன?"

தெய்வத்திற்குச் சித்தமானால் இதே உலகத்திலேயே மறுபடியும் சந்திப்போம்; இல்லையானால் வீரஸ்வர்க்கத்தில். என்னை மோசஞ் செய்து விடாதே. நான் உனக்காக அங்கிருந்துகொண்டு ஒவ்வொரு நிமிஷமும் உனது வரவு பார்த்துக் கொண்டிருப்பேன். நீ என்னையே-என்னொருவனையே காதலிக்கிறா யென்பது நிஜமானால்-நான் இதைச் சந்தேகிக்கவில்லை-நீ தமிழ் நாட்டின் வீர மாதர்களைப் போன்றோ அல்லது இராஜபுத்திர கோமளங்களைப் போன்றோ தேசத் தொண்டு செய்து வீர உலகத்திற்கு வந்து சேருவாய். கண்ணே! நேரமாகிறது முத்தமும், விடையும் கொடு."

## II

மதுரை ஜில்லாக் கலெக்டர் மிஸ்டர் நிக்கல்ஸனுடைய வீடு. இரவு பத்து மணி யிருக்கலாம். வீடு முழுதும் மின்சார விளக்குகள் ஒளி பரப்பிக்கொண்டிருக்கின்றன. வீட்டைச் சுற்றிலுமுள்ள தோப்பிலிருந்தும் குளிர்ந்த காற்று வீசுகிறது. பொது ராஜபாட்டையைத் தாண்டி வெளிக் கேட்டையும் கடந்தால் அங்கிருந்து வீட்டின் தலைவாசல் வரை செல்லுகிற ரஸ்தாவின் இரு மருங்கிலும் அடர்த்தியாய் வைத்து வளர்க்கப்பட்டிருந்த செடிகள் மூன்றடி யுயரத்தில் ஒரே மட்டமாய் வெட்டிவிடப் பெற்றிருக்கக் காணலாம். அவைகளில் ஒரு பக்கத்தில் ஒரு இடத்தில் இரண்டொரு செடிகள் குலுங்குகின்றன. சல சல என்றொரு சப்தமும் கேட்கிறது.

கலெக்டர் மாளிகையின் முன் முகப்பிலே ஒரு ஐந்தடித் தாழ்வாரம்; அதற்கடுத்தாப் போல் பட்டகசாலை. அதன் நடுவிலே ஒரு வட்ட மேஜையும், அம் மேஜையைச் சுற்றி நாலைந்து நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. நிக்கல்ஸனுடைய முழுக் குடும்பமும் நமது பிரஸ்தாப நேரத்தில் பிரஸ்தாப பட்டகசாலையிலேதான். தங்கச்

சிலை போலே மனைவி யிருக்கிறாள். பட்டுப் பட்டா யிருக்கும் குழந்தைகள் ஓடியாடிக்கொண்டும் மழலை மொழி பேசிக்கொண்டும் திரிந்தன. அவைகளின் களியாட்டிலே கலெக்டர் தம்பதிகள் பூரித்துப் போயிருந்தனர். இன்ப உலகத்திலே இருப்பதுபோலிருந்தது. பெற்றோர்களைக் கேட்கிறோம் அன்பும் அன்யோன்யமும் நிறைந்த குடும்ப வாழ்க்கையை விட தேவ லோகத்திலே தேவேந்திர பதம் என்கிறார்களே அதுவென்ன அவ்வளவு மேன்மையான இன்பத்தையா தந்துவிடும்? கன்னையாஜீயின் புல்லாங் குழலுக்கும் "பாரதி"யின் மதுர வீணைக்கும், குழந்தைகள் இசைக்கின்ற மழலைக்குரலின் மார்த்தவம் வருமா? குபேரனுடைய பொன்னுக்கும் புகழுக்குங் கூட மக்களின் தழுதழுத்த-மான்மியமான நடைச் சிறப்பேற்படுமா? நீதி பீடமாகிற தர்மாசனத்தில் அமர்ந்து, பல ஆயிரக் கணக்கான சம்பளத்தை நிக்கல்ஸன் வாங்குகிற தெல்லாம் எவருக்காக? அவருடைய அன்பு ததும்பிய குடும்பத்திற்காக வல்லவா? பாரதியாருடைய * மனைத் தலைவியைப் போல நிக்கல்ஸனுடைய மனைத் தலைவியும் கெட்டிக்காரி; ரொம்ப நல்லவள். பதியையும், பதியிடத்துப் பிறந்த காதற் கனிகளாகிய பிள்ளைகளையும், அவளைப் போல் வேறு யார் பராமரிப்பர்? சட்டங்களாகிற வெயிலிலே மூளை வறட்சிகொள்ள, குற்றவாளிகளின் ஹிருதயப் பாறைகளிலே மனம் மோதுண்டு, நியாயவாதிகளின் உருட்டுக்கும், புரட்டுக்கும் ஈடு கொடுத்து அதிகாரம் என்கிற பாலைவனத்திலே பகலெல்லாம் திரிந்த நிக்கல்ஸனுக்கு ஆறுதல் தேறுதலோடு ஓய்வுகொள்ள "கோடையிலே யிளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தரு"வாக ஒரு வீட்டை ஸ்ருஷ்டிக்க நிக்கல்ஸன் மனைவிக்குத்தான் முடிந்தது. ஹா! குடும்பத்தை பாரம் என்கிறார்களே அவர்களது நெஞ்சிலே ஈரமென்பதிருக்குமா? "சிட்டுக்குருவி தலையில் பனங்காயைக் கட்டுவது" போல ஒரே ஒரு மனுஷ்யத் தலையிலே மனைவி, மக்கள், ஆடு, மாடு, வீடு, அடுப்பு, அரிவாள்மனை, விளக்குமாறு, செருப்பு, மண்ணாங்கட்டி இவ்வளவு பளுவையும் ஈசுவரன் ஏன் தூக்கி வைத்திருக்கிறான்? அவனவன் வயிற்றையும் வாழ்க்கையையும் பார்த்துக்கொண்டு ஒருத்தரை ஒருத்தர் சுமக்காமல் வனத்து மிருகங்களைப் போலவோ, வானத்துப் பக்ஷிகளைப் போலவோ ஏன் வாழ்ந்துவிடக் கூடாது? ஆஹா! என்ன சொல்லிவிட்டோம்! குடும்ப மில்லாவிட்டால் மனுஷன் என்னமாய் வாழுகிறது? யாருக்காக வாழுகிறது? தர்மம் இருக்குமா? பரோபகாரம் பிறக்குமா? விருப்பும், வெறுப்பும், சுகமும், ஏது? ஒருவனை யொருவன் பிச்சுப் பிடுங்கித் தின்றுவிட மாட்டானா? பதி யேது? விரதமேது? எல்லாமே பாழாய்ப் போய்விடாதா?

* பாரதியாரின் சுதேச கீதங்கள் முதல் பாகம் 127-ம் பக்கம் பார்க்க.



குடும்பத்துக்கு வெளியிலிருந்து ஏதேனும் சனிப்பார்வையோ, விஷக் கண்ணோ விழாதவரை, நிக்கல்ஸனுடைய குடும்பத்தில் சாந்தமும் சந்தோஷமுமே நிலவியது. நிக்கல்ஸன் சுதாவிலேயே தயாளு. ஏழைகளுக்கு இரங்கும் குணமும், தீனர்களை ரக்ஷிக்கும் பான்மையும் அவருக்குப் பிறவிலேயே கிடைத்த பூஷணம். நீதி பீடத்திலும், நீதியைத் தவிர வேறு வழங்க அவருக்குத் தெரியாது. தெய்வ பக்தியையும், தெய்வ நம்பிக்கையையும் அவரிடத்திலே பலர் பாடங் கற்றுக்கொள்ள வேணும். அப்பேர்ப்பட்ட புண்யாத்மாவின் பேரிலே விஷ மூச்சுவிட எவனுக்கு நெஞ்சு துணியும்?

ஒரு ஆள் ஒளிந் தொளிந்து, செடிகளின் நிழலிலே பதுங்கிப் பதுங்கிப் போய்க்கொண் டிருக்கின்றான். அவனுடைய போக்கு நமக்குப் பிடிக்கவில்லை. அவன் விடுகிற மூச்சிலே விஷஜ்வாலை வீசுகிறது. கையிலே ரிவால்வர் வைத்திருக்கிறானே ஏன்? அதிலே தோட்டாக்களும் சொருகப்பட் டிருக்குமோ? ஐயையோ! துப்பாக்கியை நெஞ்சுக்கு நேரே தூக்குகிறானே! நிக்கல்ஸனுடைய நெற்றிக்குக் குறி வைக்கிறானே! "பட்! பட்!" ஹா! இரண்டு குண்டுகள் நெருப்பைக் கக்கிக்கொண்டு புறப்பட்டுவிட்டன. அடுத்த நிமிஷம், தீனதயாளு நிக்கல்ஸன் இந்தப் பாப உலகத்திலிருக்கவே மாட்டார்.

தெய்வச் சித்தம் வேறு விதமா யிருந்தது. கொடையாளி கர்ணனால், வில் விஜயனுடைய தலைக் கேவப்பட்ட நாக பாசத்தைத் தடுத்து, விஜயன் தலையைக் காத்த கிருஷ்ண சாரதியைப் போல, தீன ரக்ஷகன் நிக்கல்ஸனைக் காத்தான். குண்டுகள் தலைக்கு மேல் பறந்தோடின. அடுத்த நிமிஷம் கிருஷ்ணதாஸன் நிக்கல்ஸனுடைய கைப்பிடிக்குள் ளிருந்தான். ஆம். கலெக்டர் நிக்கல்ஸனைச் சுட்டுக் கொல்ல முயன்றவன் நமது கதா நாயகனான கிருஷ்ணதாஸன்தான். வேறு யாருமில்லை. இனி யென்ன? கிருஷ்ணனுக்குத் தூக்கு மேடையோ, அந்தமான் தீவோ இரண்டி லொன்றைத் தவிர வேறெந்த இடம் சொந்தமாகப் போகிறது? அந்தோ! வஸந்தாவின் காதலன்—கிருஷ்ணன் இப்படியா பாழாய்ப் போக வேணும்?

"ஹே! துடுக்கான வாலிபனே! நான் உனக்கு என்ன தீங்கிழைத்தேன்? என்னை ஏன் சுட்டனை?"—என்று உருக்கமாகக் கேட்டார் நிக்கல்ஸன்.

"வாஸ்தவம். தாங்கள் எனக்கு எவ்விதமான தீங்கும் செய்ததில்லை. ஆனால் தங்களது வர்க்கத்தாராகிய ஆங்கிலேயர்கள் இந்தியர்களாகிய எங்களைத் தெரு நாயினும் கேவலமாக நடத்துகிறார்களே

அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? அல்லது நீங்கள்தான் எத்தனை தேசாபிமானிகளை, அவர்கள் அவர்களது தாய்நாட்டை அபிமானித்து, அன்னிய ஆதிக்கத்திலிருந்தும் அதை மீட்க முயற்சித்த குற்றத்திற்காகத் தண்டித்திருக்கிறீர்கள்? அதற்குரிய பரிசை, உங்களது ஜாதியின் சார்பாகவும், உங்களது சொந்த சார்பாகவும் சமர்ப்பிக்க வந்தேன். ஆனால் அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருந்தது. என் கடமையை நான் செய்துவிட்டேன். இனிமேல் உங்களுடைய முறை வந்திருக்கிறது. என்னை என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்ளலாம். என் உயிருக்காக நான் எந்த விதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளப் போகிறதில்லை. இதோ இந்தத் துப்பாக்கியையும் எடுத்துக்கொள்ளுங்கள்"—என்று கிருஷ்ணதாஸ் கூறினான். அவனிடத்திலே கர்ம வீரனுக்குரிய தலையெடுப்பும், கர்வமும் இருந்தது. கலெக்டருடைய கண்கள் ஆச்சர்யத்தைக் காட்டின.

"அப்படியானால் ஆங்கிலேயர்களெல்லோருமே உங்களுக்கு விரோதிகள்தானா? சிநேகிதர் எவருமே யில்லையா?" என வினவினார் நிக்கல்ஸன்.

"விரோதிகளோ? சிநேகிதர்களோ? அதைப் பற்றி எனக்கு அக்கரை யில்லை. ஆங்கில ஆட்சியின் ஆஞ்ஞா சக்கரத்தைச் சுற்றுகிறவர்களெல்லாம் எங்களுக்குச் சத்துருக்கள்தான்"—என்றான் கிருஷ்ணன்.

"ஆனால் இது யாருடைய அபிப்பிராயம்? உன்னொருவனுடையதா? அல்லது ஏக இந்தியாவினுடையதா? எதுவாயினுஞ் சரி; என்னைக் கொல்லும்படி உனக்குக் கட்டளை யிட்டது யார்! எந்தச் சங்கம்?"—என்று கேட்டார் கலெக்டர்.

"ஐயா! எனது அதிகாரத்துக்கு மிஞ்சிய கேள்விகளைக் கேட்டுவிட்டீர்களே. இவற்றிற்கு விடையை பிராணனோடு கூடிய எனது வாயுரையாது. என்றாலும் ஒன்று மாத்திரம் சொல்லி வைக்கிறேன். அகில பாரதம் எனது சங்கம். பாரத மாதா அதன் தலைவி. அவளது கட்டளையாற் பிறந்த கடமையை நிறைவேற்றுவதுதான் எனது வேலை. மேலே பன்னிப் பன்னி ஒன்றுமே கேட்க வேண்டாம்." என்று சர்வ சாவதானமாகக் கூறினான் கிருஷ்ணன்.

"வீர வாலிபா! கர்ம தீரா! நீ உனது கடமையை நிறைவேற்றினாய். ஆண்டவன் சங்கல்பம் உனக்குச் சாதகமா யில்லை. கலெக்டர் நிக்கல்ஸன் உங்களுக்கு விரோதியா யிருக்கலாம்; ஆனால் மிஸ்டர் நிக்கல்ஸன் எந்த வொரு இந்தியனுக்கும், எந்த வொரு மனுஷ்யனுக்கும் விரோதி யில்லை. "ஒரு காசுக்கு வாங்கப்படும் பூஞ் சிட்டுக்கூட, அதைப் படைத்தவனுடைய கட்டளை யில்லாமல் கீழே விழாது" என்பது மஹாத்மா இயேசுவின் வாக்கு. எனக்கு முடிவு காலம் வாரா முன்னர் உனது துப்பாக்கியோ, வாளோ என்னை ஒன்றுஞ் செய்து விடாது. ஹே! வாலிபனே! இந்த உண்மையைச் சோதிக்க வேண்டுமா? இதோ இத் துப்பாக்கியைப் பிடி. இன்னுமொரு முறை என்னைச் சுட்டுக் கொல்ல முயற்சி செய்!" என்றதும் நிக்கல்ஸன் தனது கையிலிருந்த ரிவால்வாரைக் கிருஷ்ணதாஸிடம் நீட்டினான். கிருஷ்ணனும் அதை வாங்கி அலட்சியமாய் எறிந்து விட்டுக் கூறுவான்:



"கலெக்டரவர்களே! உங்களுடைய உயிர் எனக்கென்னத்துக்கு? நான் என்ன பைசாசமா பிணந் தின்ன? கடமை யொன்றுதான் நான் செய்ய விரும்பியது. செய்தும் முடித்து விட்டேன். இனி நீங்கள் செய்ய வேண்டிய சடங்கைச் செய்யுங்கள்."

கிருஷ்ணதாஸின் ஒவ்வொரு சொல்லும், செயலும் கலெக்டரைக் கவ்வுவதா யிருந்தது. அவரது தயாள நெஞ்சம் இன்னும் விரிந்தது. கோபதிருஷ்டியோ, குரோத உணர்ச்சியோ அவருக்கில்லை. அன்பும் ஆதர்ஸமும் ததும்ப, "நண்பனே! நீ எனக்குத் தீமை நினைத்தாய். அதற்குத் தண்டனையாக அதே தீமையை நானும் உனக்களிக்க முடியும். உனது கழுத்திலே சுருக்கு மாட்டித் தூக்கு மேடையிலே ஏற்றித் தொங்கச் செய்யலாம். அல்லது இப்பொழுதே சுட்டுங் கொல்லலாம். இல்லாவிட்டால் அந்தமானிலோ, சிறைக்குள்ளோ அடைக்கலாம். ஆனால் இவைகளில் எதுவையும் இப்பொழுது நான் செய்யப் போவதில்லை. நீ செய்த தீமைக்கு நீ நாண நான் நன்மை செய்யப் போகிறேன். வீர வாலிபா! நீ இப்பொழுது என் கைதியல்ல. சுதந்திர புருஷன். உனக்கிஷ்டப்பட்ட இடத்துக்கு நீ போகலாம்" என்றார்.

மதுரையிலே ஜவுளிக் கடை மறியல். கிருஷ்ணதாஸனும் வஸந்தாவும் ஒரு விதேசி ஜவுளிக் கடை முன்னே தொண்டர்களாக நின்று மறியல் செய்துகொண் டிருக்கிறார்கள். இது அஸிம்ஸா யுகம்; காந்தி சகாப்தம். இரத்தப் புரட்சிக்காரர்களையும் அஸிம்ஸா மூர்த்திகளாக மாற்றிவிடும் காந்தியின் ஆத்ம சக்திக்கும் மந்திரக் கோலுக்கும் பல்லாண்டு கூறுவோம்.

# உபயோகமற்ற பொருள்களின் உயர்ந்த வியாபாரம்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

அநேகமாகப் பழம் பொருள்கள் பலவற்றை உபயோக மற்றவை யென்று நாம் எறிந்துவிடுகின்றோம். பழைய துணிகளையும், துருப் பிடித்த பழைய இரும்புச் சாமான்களையும், அவற்றின் துண்டுகளையும், மற்றுமுள்ள உலோகங்களாலான பழைய பொருள்களையும், பழைய நாரையும், உபயோகமற்ற காகிதங்களையும், மற்றும் வீட்டுச் சாமான்களுக்குச் சம்பந்தப்பட்டனவுமாகிய கழிக்கப்பட்ட பொருள்களையும் உபயோகமற்றவையென நாம் நெருப்பிலிட்டோ, வீதியில் எறிந்தோ வீணாக்குகின்றோம். அல்லது இரண்டொரு பைசாக்களுக்கு அவற்றை விற்றுவிட்டு நமது வீடுகளைக் குப்பைக் கூளங்களில்லாமல் சுத்தமாக வைத்திருப்பதாக எண்ணிச் சந்தோஷிக்கின்றோம். அவ்வளவேயன்றி, இவ் வுபயோகமற்ற பொருள்களின் வேறுவகை உபயோகங்களைப் பற்றியும், அவற்றால் எவ்வளவோ ஊதிய மிருக்கிறதென்பதைப்பற்றியும் நம்மில் பெரும்பாலோர் ஒன்றும் அறியமாட்டார்கள். ஆகவே இங்கிலாந்திலுள்ள இவ்வித உபயோகமற்ற பொருள்களைக் கொண்டு வியாபாரம் செய்யும் பிரசித்தமான வர்த்தக ஸ்தாபனத்தைப்பற்றிய விபரங்களை நம்மவர் அறிந்தால் ஆச்சரியமடைவார்கள். ஆங்கிலேயர்களின் யுக்திக்கும், தூரதிருஷ்டிக்கும், பொருள்களை வீணாக்காது பயன்படுத்திக்கொள்ளும் ஊக்கத்திற்கும் இஃது உதாரணமாகலாம்.

இங்கிலாந்து தேசத்தில், இந்த உபயோகமற்ற பொருள்களின் வியாபார ஸ்தாபனம் 1870-ம் வருடத்தில் தொடங்கப் பெற்றது. காலஞ்சென்ற **"எட்வர்ட் ஆஸ்டின்"** என்பவர் இந்த ஸ்தாபனத்தை லண்டன் நகரத்தின் கிழக்குப் பாகத்தில் முதலில் ஏற்படுத்தினார். அவ் வியாபாரமானது நாளுக்கு நாள் விருத்தியடைந்து வந்தமையால் தனது புத்திரர் மூவரையும் அதே வியாபாரத்தில் அமர்த்தி



னார். எட்வர்ட் ஆஸ்டின் என்பவர் சமீபத்திலேயே காலஞ்சென்றாராயினும், இன்று அவருடைய வியாபாரம் மகோன்னத நிலைமையிலிருக்கிறதாம். உபயோகமற்றவையென ஜனங்கள் கழித்துவிடும் பொருள்களை அங்குமிங்கும் கொண்டு செல்லவும், ஆங்கிருந்து எல்லாப் பொருள்களையும் வியாபார ஸ்தலத்திற்குக் கொண்டுவந்து சேர்க்கவும் இவ் வியாபார ஸ்தாபனத்திற்கெனப் பிரத்தியேகமாக 24 மோட்டார்கார்—(வண்டிகள்) இருக்கின்றன. அவையன்றிக் கடற்கழிகள், ஆற்றுக் (தேம்ஸ் நதி) கால்வாய்கள் மூலமாய்ப் போக்குவரவு செய்யப் பல படகுகளு மிருக்கின்றன. குப்பை வஸ்துக்கள் நிரப்பி வைக்கப்பட்டுள்ள அநேக கிடங்குகள் (கட்டிடங்கள்) இருக்கின்றன. ஸ்திரீகளும், புருஷர்களும், சிறுவர் சிறுமிகளுமாக 500 போருக்கு மேற்பட்ட தொழிலாளர் மேற்படி ஸ்தாபனத்தில் வேலை செய்கின்றனர்.

பழைய உடுப்புகள், உடுத்திக்கொள்ள உபயோகமற்றுப் போகிறபொழுது அவை துண்டுகளாகக் கிழிக்கப்பட்டு வீட்டுச் சாமான்களைத் துடைக்கவும், கைகளைத் துடைக்கவும் உபயோகப்படுகின்றன. அவற்றிற்கும் உபயோகப்படாதபொழுது அவை குப்பைத் தொட்டியில் எறிந்துவிடப்படும்; அல்லது சொற்ப விலைக்கு விற்றுவிடப்படும். அப்படிப்பட்டவைகளில் மேல்ஜோடு முதலிய உடுப்புக்களின் துண்டுகளும், மற்றும் பலவகையான கம்பளித் துணிக்கந்தைகளும் கலந்து கிடக்கும். அவையனைத்தும் ஆஸ்டின் வர்த்தகசாலையாரால் விலைக்கு வாங்கப்படுகின்றன. அவை அங்குத் தொழிலாளரால் தரம் வாரியாகப் பிரிக்கப்பெற்று, அவையனைத்தும் அந்த ஸ்தாபனத்தின் துணிகளை வெளுக்கும் பிரிவினரால் துவைக்கப்பட்டு—சலவை செய்யப்படுகின்றன. பிறகு அத் துணிகளில் ஒரு பிரிவு யந்திரங்களைத் துடைப்பதற்காக யந்திரத் தொழிற்சாலையாருக்கு விற்கப்படுகின்றது. லண்டன் நகரமொன்றிலேயே வாரத்திற்கு 100 டன்கள் வீதம் இவ்விதக் கந்தைத் துணிகள் விலையாகின்றனவாம். இன்னும் எத்தனையோ டன் துணிகள் பிரான்சு தேசத்திலுள்ள இன்ஜினீரிங் மோட்டார் தொழிற்சாலைகளுக்கும், பிரீஸ்டேட்டிலுள்ள அச்சு யந்திர சாலைகளுக்கும் அனுப்பப்படுகின்றன. மற்றுமொருவிதத் துண்டுத் துணிகளை அவ்வைந்து நூறு வெயிட்டுகளைக் கொண்ட பேல் பொதிகளாகக் கட்டிக் காகித யந்திரசாலைகளுக்குச் சப்ளை செய்கின்றனர். அங்கே இத் துணிகளைக்கொண்டு அநேக விதமான காகிதங்களும், மை யொற்றுந் தாள்கள் முதலியனவும் தயாரிக்கின்றனர். மற்றுஞ் சில கந்தைத் துணிகளால் வீட்டுக் கூரைகளுக்கு ஓடுகளுக் கடியில் போடப்படும் ஒருவிதப் பலகைகளைச் செய்கின்றனர்.

பழைய துணிகளையும், தையற் கடைகளினின்றும் சேகரிக்கப் படும் புதிய கந்தைகளையும், நூற்றுக் கணக்கான சிறுமிகள் உட்கார்ந்துகொண்டு வெகு வேகமாகத் தரம் வாரியாகப் பிரித்துக்கொண்டிருப்பதைப் பார்க்க வெகு ஆச்சரியமா யிருக்கும். வெண்மையான காலர்த் துணிக் கந்தைகளெல்லாம் ஒரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, அவற்றால் பாங்கு நோட்டுகளும், டிரஷரி நோட்டுகளும் அச்சிடப் படும் உறுதியான காகிதங்கள் செய்யப்படுகின்றன. கம்பளித் துணிக் கந்தைகள் யாவும், ஒரு தரமாகச் சேர்த்து டியூஸ்பரி, ஹட்டாஸ் பீல்டு, லீட்சு முதலிய நகரங்களுக்கே யன்றி, ஜெகோஸ்லேவியா, ஜெர்மனி முதலிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவ் விடங்களிலுள்ள தொழிற்சாலைகளில் இவற்றைக் கொண்டு மீண்டும் விலை மலிவான கம்பளித் துணிகள் தயாரிக்கப்படுகின்றன. அப்படியே பழைய கயிறுகளும், நார்களும் சேகரிக்கப்பட்டுத் தொழிற் சாலைகளுக்கு விற்கப்படுகின்றன. அங்கே அவைகள் பலவித அட்டைக் காகிதங்களாகச் செய்யப்படுகின்றன. கழித்து விடப்பட்ட மோட்டார் டயர்களும், சைக்கிள் டயர்களும், ரப்பர் டியூபுகளும் ஏராளமாகச் சேகரிக்கப்பட்டு, அவற்றைக்கொண்டு மீண்டும் புதிய ரப்பர் சாமான்கள் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு விற்கப்படுகின்றன.

மேலும் இரும்பு, பித்தளை, செம்பு, தகரம், ஈயம் முதலிய பல வகை உலோகங்களாலாகிய பழைய சாமான்களும், ஆஸ்டின் வியாபாரச்சாலையாரால் சேகரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. காப்பி, டீ முதலியவற்றைக் குடிக்கும் பழைய பாத்திரங்களும் சேகரிக்கப்பட்டு வேலைக்காரர்களால் ஒவ்வொரு உலோகமும் தனித்தனியாகப் பிரிக்கப்படுகின்றன. ஒரு சாமானில் இரண்டு மூன்று உலோகங்கள் சம்பந்தப்பட்டிருக்குமானால் அச் சாமானை உடைத்து உலோகங்களைத் தனித்தனியாகப் பிரிக்கின்றனர். உபயோகமற்றுப் போகும் இன்ஜின்களைப்போன்ற பெரிய பெரிய சாமான்களும், இந்த ஸ்தாபனத்தை வந்தடைகின்றன. அவையனைத்தும் இங்கே பிரிக்கப்பட்டு உருக்கிப் புதிய உலோகமாக்கி விற்கப்படுகின்றன. இது போல் அவ் வியாபார ஸ்தாபனத்தார் செய்யும் வேலைகள் பலவாம். அதனால் இன்று ஆஸ்டின் கம்பெனியார், பெரிய தனவந்தர்களா யிருக்கின்றனர். இந்தியர்கள் வாய் வேதாந்தம் பேசிக்கொண்டு வாளா யிருப்பதை விடுத்து, இத்தகைய அரிய தொழில்களைச் செய்து ஊதியமடைய முயலுவார்களா?

## "பாரதி" வாழ்த்துப் பா.

நேரிசை வெண்பா.

1. இன்பந் ததும்பும், எழில்வீசும், இந்நாட்டின்
துன்பப் பெருக்கெல்லாம் தூர்ந்துவிடும்—அன்புமிகும்
"பாரதி!" நின் சேவையினாற் பாரோங்கிப் பால்பொழியும்
"பாரதி" நீ வாழ்க பரந்து.

2. மக்கள்தமை வஞ்சனையால் மாநிலத்தி லாண்டுவந்த
எக்கொள்கை யேனும் இனிநிற்கா—துக்கமிலை
வாழ்வு நலம்பெருகும், வன்மம்போம் "பாரதி"யால்
தாழ்வு நமக்கில்லை தான்.

3. இந்தியர்தம் வாழ்க்கைக் கிதங்காண வந்திட்ட
பைந்தமிழின் பொக்கிஷமே! "பாரதி"யே!!—சந்ததமும்
மாள்கதுயர் மைந்தர் மனமகிழ வான்புகழ
ஆள்கநீ யெங்கும் அரசு.

—செய்கோன் **ஸ்ரீ அறிவானந்தன்.**

---

## கம்பரும் காதல் மணமும்.

ஆசிரியர் திரு. மா. இராஜமாணிக்கம் அவர்கள்.

**பத்திரிகை யொன்றில் பல்வகைப்** பொருளும் பண்புற்று விளங்க வேண்டுமாதலின், அப் பல்வகையுள் **இலக்கியமும்** ஒன்றாதலின், தமிழ் இலக்கியத்தில் தலை சிறந்து, புலவரேறு கப் புகழ் நிறுவி மறைந்தவர் **கம்பர்** பெருமானாதலின், அன்னாரின் சொல்வளனும் பொருள் வளனும் செறிந்த அருட் பாக்கள் நிறைந்தது இராம காதையே யாதலின், அக் காதையுட் செறிந்துள்ளவை உயிர்க்கு உறுதியைப் பயக்கும் செம்மொழிகளாதலின், இதழ்தோறும் கம்பர் பெருமான் கூறியுள்ள விழுமிய கருத்துக்கள் **"பாரதி"**யில் வெளிப்படும். ஆங்கிலத்தில் **ஷேக்ஸ்பியர்**

கவிச் சக்கரவர்த்தியாகவும், வட மொழியில் காளிதாஸன் கவிச் சக்கரவர்த்தியாகவும் விளங்கியவாறு, தமிழ் மொழியில் கம்பரும் கவிச் சக்கரவர்த்தியாக விளங்குபவர் என்பது மறுக்க முடியாத உண்மை. அத்தகைய சிறந்த புலவர் தம் அறிவாலும் ஆராய்ச்சியாலும் அறிந்த அளவிடற்கரிய பொருள்களை ஆங்காங்கே இராம காதையிற் செறிய வைத்துளர். அவற்றைத் துருவி யாராய்ந்து மகிழ்தல் தமிழராய நம்மனோர் கடனன்றோ? நிற்க.

இராம காதையை முதன் முதல் வட மொழியில் பாடியவர் வான்மீகி. அவரைப் பின்பற்றித் தமிழ் மொழியில் கம்பர் இராம காதையைப் பாடினாரெனினும், இடங்களுக் கேற்பத் தமது விழுமிய கொள்கைகளையும், சிறந்த உண்மைகளையும், வேளாண் சிறப்பையும், தமிழர் தனி மாண்பையுங் கூறிப் போந்தார். தமிழர் மண முறையையும் ஒரு சிறிது இராம காதையுள் கம்பர் நுழைத்துவிட்டார். தமிழர் மணமுறை வாடை வீசும் இடம் மிதிலைக் காட்சிப் படலமே. இராமனது திருமணத்தைக் கூறப் போந்த வான்மீகி, "இராமன் அரக்கியைக் கொன்று மறையவன் வேள்வி காத்து, அகலிகையின் சாபந் தொலைத்து, நேரே மிதிலையுட் சென்று விட்டனன். கோசிகன் இராம இலக்குமணரைச் சனகனுக்குக் காட்டி, அவர்கள் வரலாற்றைக் கூறி, வில்லைக் கொணரச் செய்தனன்" என்று முடிக்கின்றார். எனவே, வான்மீகி இராமாயணத்தில் மணத்திற்கு முன்னர்ச் சீதையை இராமன் காணவில்லை என்பதும், சீதை இராமனைக் காணவில்லை என்பதுவும் பெறப்படுகின்றன.

கம்ப நாடரோ தாம் வளர்த்த சீதையையும், இராமனையும், வான்மீகியைப் போல் அஞ்ஞான இருளில் வைத்திலர். திருமணத்திற்கு முன்னரே-வில் இறுத்தற்கு முன்னரே-காதலர் இருவரையும் சந்திக்கச் செய்தார்; இருவர் கண்களையுஞ் சந்திக்கச் செய்தார்; இருவர் மனத்தையும் ஒன்றுபடச் செய்தார். ஒருவர் மற்றவர் உள்ளத்தில் மாறிப் புகுமாறு செய்தார். திருமணம் வளர, இருவரையும் காதல் நோயால் மெலிவித்தார். பின்னர்க் காதல் மணத்தைக் கவினுற நடத்திக் காட்டி மகிழ்கின்றார். இத்தகைய மண முறை பண்டைக் காலத்தில் பழக்கத்தில் இருந்ததென்பது சங்க நூல்களாலும் பிற நூல்களாலும் அறியக் கிடக்கும் உண்மை. எனவே, கம்பர் தமது தமிழர் மணத்துக்கிணங்க இராமனையும் சீதையையும் சிறக்க வைத்துள்ளார் என்பது அங்கைக் கனி. இராமாயணத்தில் மிகச் சிறப்புற்ற பாகம் மிதிலைக் காட்சிப் படலமே. இனிக் காதலர் சந்திப்பும் திருமண முடிவும் காண்பாம்:

எண்ணிலா அருந் தவத்தினானொடு, கோசலக் குரிசிலும், இலக்குவனும் மிதிலையின் இயற்கை யழகையுஞ் செயற்கை யழகினையுங்



கண்டு களித்துச் சென்றுகொண் டிருந்தனர். அங்ஙனஞ் சென்றவர் கன்னிமாடத்திருந்த எழில் நலம் மிக்க சீதையைக் கண்டனர்; சற்று நின்றனர். அவர்கள் அங்ஙனம் நிற்க நேர்ந்ததைப் பற்றிக் கம்பர், அருகிருந்து கண்டவரே போன்று அழகுறக் கூறியுள்ளதைக் காண்மின்: "கன்னிமாட முற்றத்தில் ஆண் அன்னமும், பெண் அன்னமும் ஆடிக்கொண் டிருந்தன. அவற்றைக் கண்ணுற்றுச் சனகன் மாமகள்-பொன்னின் ஒளியும், மலரினது மணமும் உண்ணுகின்ற தேனினது இனிய சுவையும், பொன்னுக்கும், மலருக்கும், தேனுக்கும் இயற்கையாக அமைந்திருப்பது போல் செவ்விய தென்மொழியாகிய தமிழ்க் கவியில் பொலியும் இன்பமே போன்று அவள் நின்றிருந்தாள். அந் நிலையில் அன்னங்கள் ஆடுதலைக் கண்டு மூவரும் நின்றனர்."

"பொன்னின் சோதி போதினி னாற்றம் பொலிவேபோல்
தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே கழிபேடோ
டன்னம் மாடு முன்றுறை கண்டங் கயல்நின்றார்."

—(க. ரா. மிதிலைக் காட்சிப் படலம்.)

அன்னங்கள் முன்றிலில் ஆடி யிராவிடின், இராமன் அயல் நிற்க வேண்டிய நிமித்தமில்லை. ஆயினும் அவன் ஆடிய அன்னத்தைக் கண்ணுற்று நின்றனனோ? விடை பகர்தல் எளிதே. ஆடும் அன்னத்தைக் காண்பதே போல் மிதிலை யன்னத்தை—தென் சொற் கவியின்ப மன்ன சானகியை இராமன் கண்ணுற்று நின்றானாதல் வேண்டும்.

தென் சொற் கவியின்பமாய சீதை, தன்பால் அன்புடைய தாதியர் முதலாய மங்கையர், "மானே! தேனே! அரிய அமிர்தமே!" என்று தளிர் போன்ற சிவந்த கைகளால் அவள் அடிகளை வணங்கி, அவள் செல்லுமிடத் தெல்லாம் எதிரே மலர்களை அடர்த்தியாகத் தூவி, வரிசை வரிசையாக நெருங்கி வர, பூவிலே தங்கும் இலக்குமியைப் போல நடமாடி விளங்குகின்றாள் எனக் கம்பர், சீதையின் எழில் நலத்தை நாம் என்றும் மறவாதவாறு சித்தரித்துக் காட்டுகின்றார்.

"தன்னே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே!
'அன்னே! தேனே! ஆரமிர் தே!' என் றடிபோற்றி,
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப்
பொன்னே சூழப் பூவி னொதுங்கிப் பொலிகின்றாள்."

—(க. ரா. மிதிலைக் காட்சிப் படலம்.)

இங்ஙனம் நின்ற சீதை, சீராமனைக் கண்ணுற்றாள். சீராமனும் அவளைக் கண்டான். சனகி கோசலக் குரிசலை நோக்கிப் புன்னகை புரிந்தாள் எனத் தெரிகிறது. ஏனெனில், அன்று மாலை இராமன்,

"வாள்நிலா முறுவல் கனிவாய் மதி
காண லாவதொர் காலமுண் டாங்கொலோ?"

என்று சீதையை நினைத்துப் புலம்பியுள்ளான். இராமனும் புன்முறுவல் பூத்தனன் என்றறியக் கிடக்கிறது. ஏனெனில், சீதை இராமனை நினைந்து காதல் நோயால் நலிந்து புலம்புகையில், 'முந்தியென் உயிரையும் முறுவல் கொண்டதே' என இரங்குகின்றாள். எனவே, காதலர் முறுவல் தோன்றி மகிழ்ச்சியுற்றனர் என்பது பெறப்படுகின்றது. கம்பர் நாடகக் காட்சியாய் மிதிலைக் காட்சியைக் காட்டுவது கற்போர் மனத்தைக் களிக்கச் செய்கிறதன்றோ?

இன்னபடி, கண்ணுற் களவு செய்து முறுவல் கொண்ட செவ்வியர் எதிரெதிர் நோக்கிய தன்மை இன்னவா றிருந்தது என்று கம்பர் தமது அகத்தாற் சித்தரித்துக் கூறுகின்றார்: "எண்ணுதற்கரிய நலங்கள் வாய்ந்த சீதை இவ்வாறு நின்றிருந்தகாலை, ஒருவர் கண்களோடு மற்றவர் கண்கள் ஆர்வத்தால் கவ்வி, ஒன்றை யொன்று உண்டு விழுங்கியதால், அவர்களது உணர்வும் தனித்தனி நிலையில் நிற்பதற் காற்றாதனவாய் ஒன்றாய்க் கலந்து விடும்படி அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்.'

"எண்ணரு நலத்தினாள் இனைய ணின்றுழி
கண்ணொடு கண்ணிணைக் கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினான்– அவளும் நோக்கினாள்."

—(க. ரா. மிதிலைக் காட்சிப் படலம்.)

என்று கம்பர் கூறுவதை எண்ண எண்ண, மெய்க் காதலின் தத்துவம் இற்றென இனிது விளங்கும். 'இந் நாடகக் காட்சியைக் கண்ணுறப் பேறு செய்திலமே யாம்' என அறிஞர் மாழ்குவர், எனினும் பொருந்தும். காதலின் மகத்துவத்தைக் கூறும் கம்பர் திறம் போற்றற்குரியது!

அடுத்த பாசுரத்தில் கம்பர், காதலர் பார்வையின் குறியும் வேகமும் இத்தன்மைத் தென்று விரிக்கின்றார். 'சீதையம்மை பார்த்த பார்வை யென்னும் கூரிய இரண்டு வேல்களும், வலியமைந்த இராமனின் இரு தோள்களிலும் தைத்தன. ஒலிக்கின்ற கழல் கட்டிய வீரனின் சிவந்த கண்களும், அணங்கை யொத்த சீதையின் தனங்களில் தைத்தன' என்ற கூற்று, தமிழ் அகப்பொருள் துறையைத் தழுவிய தெனக் கூறத் தமிழறிஞர் தயங்கார். கம்பர் தென்



சொற் கவி யின்பமாகச் சீதையைக் கொண்டு, தமிழ் அகப்பொருட் சுவையை அவளும் இராமனும் அனுபவித்ததாகக் கூறுவது மகிழ்ச்சியை யுண்டாக்குவதன்றோ!

"நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்தன;
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணுந்
தாக்கணக் கனையவள் தனத்தில் தைத்தவே."

—(க. ரா. மிதிலைக் காட்சிப் படலம்.)

இவ்வாறு கண்ணோடு கண்ணிணைக் கவ்வி, உணர்வும் ஒன்றிட எதிரெதிர் கண்ணுற்று 'பருகிய பார்வை யென்னும் கயிற்றால் கட்டி ஒருவருடைய உள்ளத்தை மற்றவர் உள்ளம் இழுத்தலால், கட்டமைந்த வில்லை யேந்திய அண்ணலும், வாள்போன்ற கண்களையுடைய நங்கையும், இருவரும் மாறி மாறி மற்றவர் இதயத்தில் குடிகொண்டனர்.'

"பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் உள்ள மீர்த்தலால்,
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினார்."

என்ற கம்பர் வாக்கில் மெய்க் காதலின் தத்துவத்தைத் தெளிவுறக் காணலாம். உண்மைக் காதலர் மாறி மாறி மற்றவர் இதயத்தே தாம் குடிகொள்வர். அவர்களே மெய்க் காதலர். அவர்களே ஊழ்வினை வசத்தால் ஒருவரை யொருவர் சந்தித்து இரண்டறக் கலப்பவர். இவ் வுண்மையே அகப் பொருள் இலக்கணத்துக் காதலர் மாட்டுக் காணப் பெறுவதுவும்.

முதலில் கம்பர் காட்டும் காதலர் இருவர் கண்ணுங் கண்ணுங் கவ்வின; பின்னர் உணர்வும் உணர்வும் ஒன்றின; பிறகு உள்ளமும் உள்ளமும் இழுக்க—இருவரும் தந் தனி நிலை நீங்கிச் சேர்ந்தனர். ஆகவே எஞ்சி நிற்பது உயிர் மாத்திரமே. அத் திறத்திலும் 'அவர்கள் ஒன்றுபட்ட உடலுக்கு உயிரும் ஒன்றே ஆயினர்' என்று கம்பர் முடித்துவிட்டார்.

"மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினார்."

எனவே, கம்பர் காட்டிய காதலர் நாடகத்தால், மெய்க் காதல் இத் தன்மைத்தென்றும், அதன் ஆதியும் முடிவும் இத் தன்மைத்தெனவும் தெளிவுபடக் கண்டு, தென் சொல் அகப் பொருள் இலக்கணத்தோடு ஒப்பிட்டு மகிழ்வர் அறிவிற் சிறந்த ஆன்றோர்.

கோசலக் குரிசில் சென்ற பின்னர், வைதேகி தன் உயிர் உடலில் தங்கப் பெறாது துடித்தாள். அவளது 'நிறை' என்னும் அங்குசம் நிமிர்ந்து போயது. குரிசிலின் பின்னே போன மனதைத் தன்பால் மீண்டும் இழுக்கச் சக்தியற்றவளாய்க் காதல் நோயால் நலிந்தாள். அவ்வளவில் அந்திநேரம் வந்தது. அஃது அவளுக்குப் பூதம் போன்றிருந்தது. மாலை வானத்தைச் சீதை குளங்களாய நெருப்பிலே காய்ந்து, மலரின் மணமாகிய விஷத்தைப் பூசிக் கொண்டு உலவுகின்ற தென்றற் காற்று என்ற வேல், அனங்கன் எய்த அம்புகளால் உண்டான புண்ணிற் பாய, அதனால் நலிகின்ற உணர்வும் அழகும் உருகிச் சோர்கின்ற சீதையின் உயிருண்ணும்படி விளங்கிய மாலை வானத்தை நோக்கி "யமனது உருவம் இதுதானோ" என்றாள்:

"கயங்க ளென்னும் கனல்தோய்ந்து கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றல் மன்மதவேள் எய்த புண்ணின் இடை நுழைய
உயங்கு முணர்வு நன்னலமும் உருகிச் சோர்வாள் உயிருண்ண
வயங்கு மாலை வானோக்கி இதுவோ கூற்றின் வடிவென்றாள்."

—(க. ரா. மதிலைக் காட்சிப் படலம்.)

இன்னணம் விரக வேதனையால் அந்திக்கு ஆற்றாளாய்ப் புலம்பிய வைதேகி, இருளைக் கண்டதும் மிகச் சோர்வடைந்தாள். '(இராமனின்) கரிய நிறத்தை என்போல எல்லோரும் எண்ணுவதால், அவ் வெண்ணத்தின் தொகுதிதான் இங்ஙனம் இருளாகப் பரந்ததோ' என்று வியர்த்தாள். பின்னர், அன்றில் கூவியதற்காற்றாளாகி, 'மன்மதன் என்னைத் துன்புறுத்த உன்னை யேவினனோ? அல்லது யான் செய்த தீவினையே அன்றில் என்ற உருவோடு வந்தனையோ?' என்று கூறி வருந்தினாள்.

இருள் சென்ற பின்னர், தண் கதிர் இன்புறத் தோன்றினன். அங்ஙனம் தோன்றிய மதியைத் தனக்குத் துன்புறுத்தத் தோன்றியதாகச் சீதை நினைத்தனள். அதற்கவள் ஆற்றாளாகி, 'அதிகப்படும் இருளாக வந்து உலகை விழுங்கி, மேன்மேலும் பருக்கின்ற பெரியதோர் நெருப்பிடையே முளைத்த வெண்ணெருப்பே! நீ, நீங்காத அழகுடைய அவருக்கு (இராமனுக்கு) நிறத்திலே தோற்று ஒரு புறம் ஒதுங்கி ஏங்கிக் கிடக்கும் அலைகளை வீசும் கடலுக்கும் கொடியன் ஆனாயே—என் இது?' என்று பலவாறு புலம்பிய சானகி, அன்னப் பறவை நெருப்பில் பட்டதுபோல் மலர்கள் அடர்ந்த சயனத்தில் புரண்டாள். இங்ஙனம் பலவாறு காதல் நோயால் நைந்து கூறிய வைதேகியின் நிலையை அருகே யிருந்து கண்டவர்போல் கம்பர் இரக்கங்கொண்டு இயம்பும் இனிய கருத்து இனிமையை யூட்டுகின்றது.



வாசனை பொருந்திய மெல்லிய சந்தனக் குழம்பைத் தோழியர் அள்ளி அவள்மேற் பூசப் பூச மேனி வெதும்பினாள். விசிறியால் வீச வீச அவள் மெல்லிய தனங்கள் வெதும்பின. ஆசையால் விளையும் நோய்க்கு மருந்தும் உளதோ? எனக் கம்பர் கழிவிரக்கங் கொள்கிறார்:

"வாச மென்கல வைக்களி வாரிமேற்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்;
வீச வீச வெதும்பினள்; மென்முலை
ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ."

—(க. ரா. மிதிலைக் காட்சிப் படலம்.)

எனக் காதல் நோய்க்குக் காதலரே மருந்தன்றி மலர்கள் முதலானவை மருந்தாகா வெனக் கூறி, சீதைக்கு உபசாரம் செய்த தோழியரை நோக்கி மெல்ல நகுகின்றார்.

சனகன் மாமகள் செய்தி இவ்வாறாக, இராமன் கன்னியைக் கண்ட அன்றிரவு கண் துயின்றிலன். அந்நிலையைக் கம்பர்,

"கனியும் போல்பவன் கங்குலுந் திங்களும்
தனியுந் தானுமத் தையலு மாயினான்"

என்று குறுநகை தோன்றக் கூறுகின்றார். இரவுண்டு, மதியுண்டு, தனிமையுண்டு, தானுண்டு என்றிருந்தான் இராமன். அப்போதவன் அகத்தே குடிகொண்ட சனகியினது தோற்றம் தோன்றக் கண்டான். கண்டு, 'வானத்தினின்று பிரிந்த மின்னலின் உருவானது இங்ஙனம் பெண்ணினது நல்ல அழகைப் பெறுவதும் கூடுமோ? அவ் வுருவத்தைக் கண்ணுள்ளும், கருத்துள்ளும் காண்கின்றேனியான். ஆயின், இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினை உணர்கிலேன்' எனக் கூறி அயிர்த்தான். பின்னரும் அவன், 'அவள் என்பால் அருள் இலாதாளாயினும், என் மனத்தாசையால் வெருட்டுகின்ற காம நோய் தீரத் தக்க மருந்தாக, அவளை நான் என் விழிகளால் விழுங்கியிருப்பதால், தெளிவுற்ற இவ் வுலகில் உள்ள சராசரப் பொருள்கள் அனைத்தும் அவளுருவாகவே தோன்றலாயின' என்று மெய்க் காதலின் தத்துவத்தைக் கம்பர் இராமன் கூற்றாக வைத்து, நமக்கு உண்மையை விளக்குகின்றார்.

"அருளி லாளெளி னும்மனத் தாசையால்
வெருளி நோய்விடக் கண்ணின் விழுங்கலால்,
தெருளி லாவுல கிற்சென்று நின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்னுரு வானவே."

—(க. ரா. மிதிலைக் காட்சிப் படலம்.)

இச் செய்யுளில் இராமன் 'அருள் இலாள்' என்று சீதையைக் கடிந்துளான். இஃது அர்த்தமற்ற தொடரே யாகும். காதல்

நோயால் மொலியும் ஆண்—பெண் புலம்பும் கூற்றைக் கவனித்தால், சனகி எவ்வித அருளை இவன்மாட்டு அந் நிலையில் காட்டக்கூடும்? மணமாகா முன்னர் அவள் இவனிடம் யாது செய்யக்கூடும்?—இவ்வாறே மறுநாள் சீதையும் பிதற்றுகின்றாள். 'மதனன் தனது நீண்ட வெற்றி வில்லால் என் நெஞ்சு அழியும்படி, பஞ்சை யழிக்குந் தீயைப்போல என் ஆவியைப் பற்றக் கொடிய, பாணங்களை எய்ய, அவற்றால் துன்புறும் என்னை உய்ய வந்து "அஞ்சல்—அஞ்சல்" என்று அபயம் அளிக்காத ஆண்மை என்ன ஆண்மையோ?' என்று தன்னை ஆட்கொள்ளாதிருந்த இராமனைக் கடிந்தாள்.

"பஞ்சரங்கு தீயினூவி பற்றநீடு கொற்றவில்
வெஞ்சரங்கள் நெஞ்சரங்க வெய்யகாம னெய்யவே
சஞ்சலங் கலந்தபோது தையலாரை யுய்யவந்
தஞ்சலஞ்ச லென்கிலாத ஆண்மையென்ன ஆண்மையோ."

—(க. ரா. கார்முகப் படலம்.)

தாமரைப் பொய்கையிடை யிருந்த மண்டபத்தில் வீற்றிருந்த வைதேகி, அங்கு இராமன் எதிர்வந்து தோன்றவில்லை யெனப் பழி கூறுகின்றனள். இது காதலர்பால் தவழும் வெற்றுரைகளே யன்றோ? இந் நிலையில் வைதேகி, வளர்ந்து உயர்ச்சியுற்ற தனங்களை நோக்கி, 'இளைத்தலன்றி மிகப் பருத்த தனங்களே! நீவிர் பருத்து விம்மி என்ன பயனைப் பெற்றீர்! சந்திரன்போன்ற முகத்தை யுடையவரும் யாவராலும் வளைப்பதற்கு அரிய வில்லொன்றினைக் கையில் தாங்கிய சிங்கம் போன்றவருமாகிய அப் பெருமானது மார்பினுள் பொருந்தி அனுபவிக்கின்ற நலம் உங்கட்கு வேண்டுமாயின், இங்ஙனம் பருப்பதை விட்டு அதற்கு வேண்டிய தவத்தைச் செய்யுங்கள்' என்று கூறியது காதல் இன்பத்தைப் பெருகச் செய்கிறதன்றோ?

"இளைக்கலாத கொங்கைகாள்! எழுந்துவிம்மி யென்செய்தீர்?
முளைக்கலா மதிக்கொழுந்து போலும்வாண் முகத்தினான்
வளைக்கலாத விற்கையாளி வள்ளல்மார்பி னுள்ளுறத்
திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள் செய்ம்மினே."

—(க. ரா. கார்முகப் படலம்.)

திருமணத்தன்று முன்னாள் இரவிலும் காதலர் இருவரும் தனித்தனி யிருந்து நோயால் நைந்தனர். இராமனும் துயின்றிலன்; கன்னியும் துயின்றிலள். மறுநாள் திருமணம் திருவுடன் தீர்ந்தேறியது.

வால்மீகி கூறாத இக் காதல் மணத்தைக் கம்பர் அகப் பொருள் துறையமையப் பாடி நடித்தமை கம்பர்மாட்டுக் காணப்பெறு மாற்றலே காரணமன்றோ?

---

# ஆராய்ச்சி மேடை.

## பெண்கள் உடற்பயிற்சி (முதற் பாடம்):

ஆசிரியர் ஸ்ரீ லெ. சோமசுந்தரன் அவர்களால் ஆக்கப்பெற்ற இப் புத்தகம் ஸ்திரீ ஜாதியாருக்கோர் புத்தமுதமும் ஜீவ விருந்துமாகும். இதை ஒவ்வொரு தமிழ் தாயும், ஒவ்வொரு தமிழ் சகோதரியும் படித்தறிவதும், அப்பியஸித் துணர்வதும் அத்யந்த அவஸ்யம். ஆண் தமிழர்கள் தங்களது பெண் தமிழர்களுக்கு ஆடை வாங்கிக் கொடுப்பதைவிட, ஆபரணஞ் செய்து தருவதைவிட இந் நூலை வாங்கி யளிப்பது பேருபகாரமும், மஹா முக்கியமுமாகும் என்பதே எமது திடமான தீர்மானம்.

பெண்களைச் சக்திகளென் றழைக்கின்றோம். ஆனால் அந்த சக்திகளாகிற பெண்களின் தேக சக்தி குறைந்துவிட்டால் பிரகிருதியிலே எந்த சக்திதான் தலைதூக்கி நிற்கமுடியும்? பெண் சக்தி விஷயத்திலே இந்தியர்களாகிய நாம் பெரிய அநீதி செய்துவிட்டோம். நாலாவழிகளிலும் அவர்களை ஆண்களின் அடிமைகளாக்கி பாகசாலையிலும், போகசாலையிலும், பூட்டி வைத்துவிட்டோம். அதனால் மனுஷ்யத் தராசின் ஒரு தட்டுத் தாழ்ந்தும் மற்றொரு தட்டு உயர்ந்தும் கேவலமான நிறையைக் காட்டிக்கொண் டிருக்கின்றது. இந்தியாவின் மரண விகிதம் மற்றைய நாட்டைவிட மோசமா யிருப்பதற்கும் ஸ்திரீ ஜாதியைத் தாழ்த்தியதுதான் காரணம்.

விஜயகாண்டீபன் அர்ஜுனனுக்கும், சுபத்திரைக்குமாகக் கருத்தரித்தவன் வீர அபிமன்யு. அவன் கர்ப்ப குண்டத்தி லிருந்தபோது சுபத்திரைக்கு அர்ஜுனன் வில் வித்தையைக் கற்பித்தான். சுபத்திரை தினந்தோறும் அஸ்திர சாஸ்திரத்தைத் தேகத்தால் அப்பியஸித்தாள். அசகாய சூரனாக அபிமன்யு பிறந்தான்.

"பலத்த உடலில் பலத்த மனம்" (Strong mind in the strong body) என்பதுபோல சரீர சக்தி யில்லாவிட்டால் மனோ பலமோ ஆத்ம பலமோ இல்லை. ஆகையினால் ஆண்களுஞ் சரி பெண்களுஞ் சரி உடல் வலியை உறுதியோடுங் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

சோமசுந்தரனாரின் உடற்பயிற்சியில் பெண்களுக்கு அவர் கொடுத்திருக்கும் உடை நிச்சயமாய் அவர்களின் கற்பைக் காக்கவே செய்யும்.

# ஆசிரியர் குறிப்புகள்.

### கைலாச பதம்:

கைலாச பதம் என்பது எல்லோருக்கும் இலகுவில் கிடைத்து விடுகிறதில்லை. எவ்வளவோ ஏற்றம்! எவ்வளவோ கஷ்டம்! அத்யாத்ம தியாகம் செய்தாக வேண்டும்; உயிரையும் உடலையும் ஆபத் பீடத்திலே கட்டிவைத்து விட்டுத்தான் பயணப்பட வேண்டும். ஆனால் இந்த அரும் பெரும் பிரயாசைக்குப் பலன் என்ன கிடைக்கும் என்பது இப்பொழுது விளங்கவில்லை. என்றாலும் மேனாட்டார் ஆதாய மில்லாமலா இத்தகைய ஆபத்திலே அடிவைப்பார்கள்?

---

தென்னாட்டுப் பெண்களுக்கும் வடநாட்டுப் பெண்களுக்கும் அல்லது இதர உலகத்துப் பெண்களுக்கும் ஆடை விஷயத்தில் அதிக வித்தியாசமிருக்கிறது. நமது நாட்டு நாரீரத்தினங்கள் பதினாறு முழச் சேலையைச் சுற்றிச் சுற்றிக் கட்டுகின்றனர். இதர மாதர்கள் இவ்வளவு நீளமாய்க் கட்டாமல் உள்ளாடை யொன்று தரிக்கின்றனர். அவ்வாடையே அவர்களின் கற்பு பீடத்தைத், தூர்த்தகளின் பலாத்காரக் கரத்திலிருந்து சிறிது நேரமேனும் காக்கும் என்பது எமது கருத்து. அந்த எண்ணத்தை எப்படியோ தெரிந்து நமது பெண் மணிகளும் மேலுக்குமாத்திரம் உள்ளாடை (பனியன் அல்லது பாடி) தரித்து, அதன்மேல் சட்டையோ, ரவிக்கையோ, ஜாக்கெட்டோ அணிய ஆரம்பித்திருக்கின்றனர். அது நிச்சயமாய் ஆண்களின் விஷக் கண்ணுக்குக் கண்டிப்பான இரட்டை மூடிதான். அதேபோல் அரையாடையாகவும் முழங்காலளவு கால் சட்டை தைத்துப் போட்டுக்கொள்வது நலம்.

உடற்பயிற்சி ஆசிரியர் தமது முதற்பாடத்தில் 15 விதமான அப்பியாசங்களை 24 படங்களால் கற்பிக்கின்றார். ஆசிரியக் கருத்தும் அழகாயிருக்கிறது. நித்திய விதிகள் 24-ம் மனுஷ்யத் தலைவிதியை நிர்ணயிக்கும் வாழ்க்கை விதிகள் என்றே சொல்லிவிடலாம்போல நன்கு சமைந்திருக்கிறது. முக்கியக் குறிப்பும் முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டியது. உடற்பயிற்சிக் கீதங்களும் உருக்கமாயிருக்கிறது. விலையுயர்ந்த காகிதம். சுத்தமான பதிப்பு. கிரையங் குறிப்பிடப்பட வில்லை. கீழச்சிவற்பட்டி உடற்பயிற்சி ஆசிரியர் ஸ்ரீ லெ. சோமசுந்தரன் அவர்களிடமே கிடைக்கும்.



பிரபஞ்ச உலகத்திலேயே பிரமாண்டமான உயரத்தை யுடையது நமது இந்தியாவின் வட கோட்டையாகவுள்ள இமய மலை. அதன் சிகரங்களில் ஒன்றாகிய எவரேஸ்த்தானது வான முகட்டைக் கிழித்துக்கொண்டு சமுத்திர மட்டத்துக்கு மேல் 29,000 அடி—ஐந்தரை மைல் உயரத்தில் கெம்பீரத்துடன் நின்றுகொண் டிருக்கிறது. அதன் உச்சிக்குப் போய் காம்பீர்யமான அந்த ஆஸ்மான ஸ்தானத்திலே தானே யிருந்து கொண்டு இவ்வுலக முழுவதையும் கண்காணிக்க வேண்டு மென்கிற ஆசை ஒரு ஏழெட்டு வருஷங்களாக வெள்ளைக்காரர்களைப் பிடித்து விட்டிருக்கிறது. ஒரு ஜதை புறப்பட்டது. அது போனது போனதுதான். அப்புறம் ஒரு ஜதை. அதுவும் இமய மலையின் எந்தக் கெபியிலோ, கேணியிலோ சமாதியாகிவிட்டது. பின்னர் இன்னொரு ஜதை. அதுவையும் பார்வதகாளி விழுங்கி விட்டாள். இவ்வாறு இன்று நாள் இது வரை எத்தனை எத்தனையோ ஜதாக்கள் போவதும் மாளுவதும், ஏதோ சில தெய்வாதீனமாய் மீளுவதுமாக மலையேறு முயற்சி நடந்து கொண்டே வருகிறது. முன்னாலே சென்றவர்களின் வீழ்ச்சிகளையே யேறு படிகளாகக் கொண்டு பின்னவர்கள் முன்னேறிச் செல்லுகின்றனர். முயற்சி திருவினையாக்காமல் போகிறதா? கர்ம தேவதை யென்ன கல் நெஞ்சுக்காரியா?

முன்னே, இந்தியாவுக்கு வழிதேடி இப்படித்தான் எத்தனையோ பேர் கூட்டங் கூட்டமாகப் புறப்பட்டார்கள். கடல் நோய்க்கு இரையானவர்கள் எவ்வளவு பேர்! அலைகளிலே அடக்கம் பண்ணப் பட்ட பேர் எத்தனை! புயற் காற்றுக்கும், நீர்ச் சுழலுக்கும் பலியானார் கொஞ்சமா! இப்படி யெல்லாம் ஆபத்து தேவியை அணைத்துக்கொண்டு தொடங்கிய முயற்சி வீண் போகாமல் முடிவில் இந்தியாவுக்கு வழியைக் கண்டு பிடித்தே விட்டார்கள். அதன் பலனை இன்று இங்கிலீஷ்காரர்கள் ஏக போகமாக அனுபவிக்கின்றனர். பிடிவாதத்தின் பிரபாவத்தையும், முயற்சியின் முக்தி நிலையையும் இப்பொழுதைய சமீப நூற்றாண்டுகளில் மேனாட்டினரைப் போல் கீழ் நாட்டார் அத்துணையாய் அனுபவிக்கவில்லை.

ஹிந்துக்களாகிற நமது புராண—புண்ய க்ஷேத்திரங்களாகிய மானஸ ஸரோவரம், வெள்ளியங்கிரி முதலியதுக ளெல்லாம் ஹிமாசலத்தின் மீதிலேதா னிருக்கின்றன. அங்கு செல்லுவதுதான் கைலாச பதம். அந்த மஹா உத்கிருஷ்டமான பதவியை யடைய நமக்கு அத்யந்த ஆசை யிருக்கிறது; முயற்சி யில்லை. 'கூட்டோடு கைலாசஞ் சேருகிறது' என்கிற சொல் வெறுஞ் சொல்லில்லை. ஔவை என்கிற நமது மூதாட்டி கைலாசம் போய் வந்த கதையுங் கட்டுக் கதைதானா? இல்லை முழுதும் யதார்த்தம். ஆனால் ஒரு பழம் பாட்டி போய் வந்த இடத்துக்கு நம்மால் போக முடியவில்லை யென்று நம்மை நாமே குறை கூறிக்கொள்ளலாமா?

கங்கா தேவி, பிர்ம புத்திரன், பஞ்ச நதி சிந்து இப்பேர்ப்பட்ட தேவயாறுகளுக்குப் பிதுர் ஸ்தானமாகிற தெய்வ சைலம் நம்முடைய உலகத்தைப் போன்றதல்ல. பனியும், மழையும் சொட்டுச் சொட்டெனச் சதா சொட்டிக் கொண்டே யிருக்கும். மேகங்கள் பிறப்பதும், கண் வளருவதும் அங்குதான். ஆகாயத்திற்குக் கூட இங்கிருப்பதளவு பளுவில்லை. நாம் உச்சுவாஸிக்கின்ற காற்றில் பாதிக் கனங் கூட இராதாம். துருவ தேசத்துக் குளிரை அங்கு அனுபவிக்கலாம். செங்குத்தான மலைச் சிகரங்களையும், அடர்த்தியான காடுகளையும், சதா உறைந்துபோயிருக்கும் பனிக் கட்டிகளையும், கோர விலங்கினங்களையும் கடந்து கைலாச யாத்திரை செய்ய நமக்குத் துணிவு பிறக்கவில்லை. ஆறு ஏழாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஐரோப்பியர்கள் துணிந்திருக்கின்றனர். எவரெஸ்ட் கமிட்டி யொன்றை நியமித்து அதன் ஆதரவில் பலப் பல முயற்சிகள் செய்கிறார்கள். வெற்றியின் சின்னங்கள் ஒருநாளைக் கொருநாள் ஸ்பஷ்டமாகத் தோன்றிக் கொண்டே யிருக்கின்றன. சீக்கிரத்தில் ஜெயங் காணினும் காணலாம். கர்ம தேவதையும், ஜெயலட்சுமியும் அவர்கள் பக்கம் இருக்க வேண்டும்.

## ஸ்கொத்துலாந்து ஸ்வதந்திரம்:

பிரிட்டிஷ் தீவுகள் பிளவு படுகின்றன. அதன் மத்தியிலே உலக சமாதானத்திற் கறிகுறியான ஒரு வெள்ளிக் கோடும் தோனுகிறது. சுதந்திர யுகத்தை ஸ்ருஷ்டிப்பதில் ஒரு பெரிய முட்டுக் கட்டையா யிருக்கும் பிரிட்டன், பிரபஞ்சத்துள் ளொரு சூக்கும பிரபஞ்சமா யிருப்பதால் உலக விடுதலையானது பிரிட்டிஷ் தீவுகளைப் பொறுத்தே யிருக்கிறது. தப்பிருந்தால் திருத்தலாம். தனக்குத் தானே யாவது அல்லது பிறராலாவது பிரிட்டிஷ் பலம் குறைக்கப் படாதவரை சமாதானத் தராசு ஓர் நிறையிலே நில்லாது.

பிரித்தானியாவை நான்கு பிரிவாகப் பிரிக்கலாம். ஆதியிலும் அவ்வாறுதான் இருந்தது. இங்கிலாந்து, ஸ்கொத்துலாந்து, அயர்லாந்து, வேல்ஸ் இவை நான்கும் சேர்ந்திருந்த போது அவளுக்கிருந்த பலம் கொஞ்சமல்ல கடல் படையில் இரண்டு மூன்று வல்லரசுகளின் பலமும் அவள் ஒருத்திக்கு இணையாக முடியாது. தரைப் படையிலும் மஹா பலக்கிரசாலி. 1914-ல் பிறந்த ஐரோப்பிய பாரதத்திற்குப் பின்—காலச் சக்கரம் சுதந்திர கட்டத்தில் சுழல ஆரம்பித்ததிலிருந்து அதன் எதிரொலி பிரிட்டிஷ் தீவுகளிலும் பிரதிபலித்திருக்கின்றது. அயர்லாந்து 1921-ல் சுயேச்சை நாடாகப் பிரிக்கப்பட்டதும், உவேல்ஸ் தனது ஸ்வதந்திரக் கொடியை ஒருதரம் பறக்கவிட்டதும் சுதந்திர தேவியின் பிரதி பிம்மங்கள். ஸ்கொத்துலாந்து ஒன்று பாக்கி யிருந்தது. அதுவும் இன்று பிரிந்த பாதையில்



தனது சுதந்திர யாத்திரையை ஆரம்பித்திருப்பது கண்டு சந்தோஷிக்கின்றோம்.

பிரித்தானியாவின் சிரசு ஸ்கொத்துலாந்து; ஜீவ நாடியும் அவள் தான். பூகோள அமைப்பின்படி ஸ்கொத்துலாந்து வடக்கேயும், இங்கிலாந்து தெற்கேயுமுள்ள ஒரு தீவு. தனித் தனியாகப் பார்த்தால் இவை இரண்டும் தீபகற்பங்களாக வேணும். நாட்டமைப்பின்படி ஸ்வபாவத்திலேயே இவைகள் மாறுபட்டவை. இங்கிலாந்து சம பூமி; ஸ்கொத்துலாந்து மலைப் பிரதேசம். இங்கிலீஸ்காரர்களும், ஸ்கொத்துலாந்தியரும் நடை, யுடை, பாவனை, பாஷைகளில் வேறுபட்டவர்கள். இந்த வித்தியாசங்களால்; பிரிட்டிஷ் சரித்திரத்தில் ஸ்டூவர்ட்ப் பகுதிவரை ஸ்கொத்துலாந்தை, ஸ்கொத்துலாந்தியர்களின் அரசர்கள் தான் ஆண்டுவந்தனர். எத்தனையோ முறை இவ் விரு நாடுகளும் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் செய்திருக்கின்றன. இங்கிலாந்தரசர்களுக்கு ஸ்கொத்துலாந்தைத் தங்களது ஆதீனத்தின் கீழ் கொண்டுவந்துவிட வேண்டுமென்கிற ஆசை சரித்திராரம்ப காலத்திலிருந்து இருந்ததுண்டு. ஸ்கொத்துலாந்து அரசன் ராபர்ட்டு புரூஸின் மீது மாத்திரம் ஏழு முறை யுத்தந் தொடுத்திருக்கின்றனர். இவ்வாறு நாட்டு வேட்டை நடந்துகொண்டிருக்கையில் எலிஸபெத்தரசிக்குப் பின் இங்கிலாந்தரசர்களின் நேர் வாரீசான வம்சக் கொடி அற்றுப் போய்விட்டது. பெண் வழி வாரிசில் இரத்தக் கலப்பு எங்காவது இருக்கின்றதா வென்று இரத்தப் பரீட்சை செய்து பார்த்ததில் ஸ்காத்ஸரசி மேரியின் வழித் தோன்றலும், ஆறாவது ஜேம்ஸ்மாகிற ஸ்கொத்துலாந்து மன்னனிடத்திலே இங்கிலீஷ் இரத்தம் இருக்கக் கண்டார்கள். அவனை இங்கிலாந்தின் முதலாவது ஜேம்ஸாக்கினர். அதுமுதல் இங்கிலாந்தும், ஸ்கொத்துலாந்தும் ஒரே அரசனுடைய ஆளுகைக்குள்ளாயின. அப்புறம் சுதந்திர வீரன் ஒலிவர் கிராம்வேல் பிறந்து, ஜேம்ஸ் அரசனைச் சிம்ஹாசனத்திலிருந்து தள்ளி, சார்லஸைச் சிரச்சேதம்பண்ணி, இரண்டாவது சார்லஸையும் இரண்டாவது ஜேம்ஸையும் சிம்ஹாசனத்தில் ஏற்றுவதும் இறக்குவதுமாக அரசர்களின் ஏதேச்சாதிகாரத்தைப் போக்கி, ஜனசபையாகிற பார்லிமெண்டுக்கு அதிகாரத்தைத் தந்தான். அதுமுதல் லண்டனிலே பிரிட்டிஷ் பார்லிமெண்டு கூடுவதும், இங்கிலாந்து, ஸ்கொத்துலாந்து, அயர்லாந்து, வேல்ஸ் தேசங்கள் தங்கள் தங்கள் ஜனப் பிரதிநிதிகளை அங்கு அனுப்புவதுமா யிருந்துவருகின்றன. இவ்வாறோடிக்கொண்டிருந்த அரசியல் வண்டி இப்பொழுது குடை கவிழ ஆரம்பித்திருக்கிறது.

இந்தக் கூட்டுப் பார்லிமெண்டிலிருந்து பிரிந்து தனக்குத் தானே தனிப் பார்லிமெண்டை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டுமென்கிற

ஆசை ஸ்கொத்துலாந்துக்கு வெகுநாளா யுண்டு. இருந்தாலும் இன்று தோன்றியிருப்பதுபோல அவ்வளவு ஸ்பஷ்டமாகவும், தீவிரமாகவும் இருந்ததில்லை. ஸ்வதந்திர மாதா யாரைத்தான் விட்டாள்! எல்லோரையுங் கிள்ளிவிட்டுக்கொண்டே யிருக்கிறாள்.

விளக்கிலே திரி நன்கு சமைந்திருந்தாலும் தூண்டுகோல் வேண்டும். ஸ்கொத்துலாந்து சுதந்திரத்தின் தூண்டுகோலாக சர் ஹெர்பர்ட் சாமுவேல் தோன்றியிருக்கிறார். அவருக்குத் தாராளக் கட்சி (Liberals)-யில் மிகுந்த செல்வாக்குண்டு. சமீபத்தில் கிளாஸ்கோ நகரத்திலிருந்து திரும்பியபொழுது "ஸ்கொத்துலாந்திற்குக் குடியாட்சி கிடைக்க முயற்சி செய்ய வேண்டுமென்பதை எனது கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏக மனதாக அங்கீகரித்திருக்கிறார்கள். எங்களா லியன்றவரை முயன்று, இத் திட்டத்தை நிராகரிக்காமலும் ஒத்திவைக்காமலும் பிரயாசைப்படுவோம்"—என்று கூறியுள்ளார். சர் ஹெர்பர்ட் பிடிவாதக்காரர். முயற்சி குன்றாதவர். ஊக்கசாலி. வெகு சமீபத்திலேதான் தேசீய சர்க்காரின் பார்லிமெண்டு மந்திராலோசனை சபையிலிருந்து தமது உள்நாட்டு மந்திரி பதத்தை ராஜிநாமாச் செய்தவர். அவரது முயற்சி அவருக்கும் ஸ்கொத்துலாந்துக்கும் வெற்றியையே யளிக்குமென்று திடமாக நம்புகிறோம். மேலும் ஸ்கொத்துலாந்தியர்களும் திடகாத்திரசாலிகள். மலை நாட்டாருக் கியல்பிலுள்ள வீரம் அவர்களுக்குப் பிறப்புரிமை. இப்பொழுதைய பிரிட்டிஷ் இராணுவத்திலும் ஸ்கொத்துலாந்துப் படைக்குத்தான் பெரும் புகழ். துவந்துவ யுத்தத்தில் (Guerilla Warfare) இந்தியருக்கு அடுத்தபடியாக ஸ்கொத்துலாந்தியருக்குத்தான் பிரக்யாதி. இதனால் வீர ஸ்கொத்துலாந்தியர் இங்கிலாந்திலிருந்து விடுபடுவது அத்துணை கஷ்ட சாத்தியமல்ல.

## "அயர்லாந்தரசன் திவாலரா:"

பிரிட்டனையும் அயர்லாந்தையும் பிணைத்திருக்கிற அரசியல் கயிறு நாளுக்கு நாள் அதிகம் முறுக்கேறிச் சிக்கலும் ஜாஸ்தியாகி அறுந்து விடும்போலிருக்கிறது. அயர்லாந்தின் குடியாட்சித் தலைவன் எமன்—தி-வாலரா இங்கிலாந்துக்கு ஒரு எமனாகவே பிறந்திருக்கிறான். 1923, 1925, 1926-ம் ஆண்டுகளிற் கையொப்ப மிடப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்களை யெல்லாம் கிழிந்த கடுதாசிகளைப்போல் தி-வாலரா தூக்கி யெறிகிறான். வெல்வெட்டுறைக்குள் இருப்புக் கரம் இருப்பதை இங்கிலீஷ்காரர்கள் இப்பொழுதுதான் உணருகின்றனர். தூக்கு மேடைக்குத் தப்பித் திரிந்தவனும், பிரிட்டிஷ் சிறைச்சாலைகளில் அடைபட்டிருந்தவனுமாகிற ஒரு கைதி கொடுக்கிற தொந்தரவு பிரிட்-



டிஷ் மந்திரிகளுக்குப் போதும் போது மென்றாகிவிட்டிருக்கிறது. குடியேற்ற நாட்டு மந்திரி தாமஸும் நரியாய்ப் பசப்பினான்; காடியாய்க் கத்தினான். ஒன்றும் பலிக்கவில்லை. நிலப் பரிவர்த்தனைப் பணமும் விசுவாசப் பிரமாணமும் அயர்லாந்தாரிடமிருந்து வாங்கவே முடியவில்லை. நாலு பேர் நடுமனிதரை வைத்து மத்தியஸ்தஞ் செய்துகொள்ளலாமென்றால் பிரிட்டிஷ் கௌரவம் (?) சிவன் மாட்டைப்போலக் குறுக்கே படுத்திருக்கிறது. என்றாலும் இனிமேல் முடியாது என்கிற நிலைமையில் அந்தக் கௌரவத்தைக் கொஞ்சம் தளர்த்திக்கொள்ளாமலிருக்க இங்கிலீஷ்காரர்கள் அவ்வளவு முட்டாள்களா? சர் ஹென்றி ஸ்டிராகோஷை மத்தியஸ்தராக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவரது தீர்ப்பு எப்படி யிருக்கலா மென்பதை நம்மால் அனுமானிக்கவே முடியவில்லை. ஏனெனில் இங்கிலீஷ்காரர்கள் அயர்லாந்தாரிடமிருந்து நிலக் கப்பங் கேட்கிறார்கள். ஐரிஷ்காரர்கள் இங்கிலீஷ்காரர்களிடமிருந்து அவர்கள் அதிகமாக வசூலித்துள்ள ஐரிஷ் வரிப் பணத்தில் 40 கோடி ரூபாய்கள்வரை கேட்கிறார்கள். இந்தப் பணத் தகராறை என்னமாய்த் தீர்த்துவைக்க முடியும் என்பது விளங்கவில்லை. ஆனால் இரு கட்சியாருக்கும் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் சுபாவம் இருக்குமானால் சர் ஸ்டிராகோஷ் வெற்றியே பெறுவர்.

பிரிட்டிஷ் குடியேற்ற மந்திரி தாமஸ் போய்க்கொண்டிருக்கும் போக்கு நமக்கே பிடிக்காவிட்டால் திவாலராவுக்குப் பிடிக்குமென்றெதிர்பார்க்கலாமா? "நீதி வழங்க இங்கிலீஷ்காரர்கள் இசைகிறார்களில்லை. பிச்சா பாத்திர மேந்திக்கொண்டு நான் பிரிட்டிஷ்காரர்களிடம் ஏதோ சிலவற்றைப் பிச்சையாகக் கேட்டிருந்தால் சிறிது தயாள சிந்தையோடு கொஞ்சங் கொடுத்திருப்பார்கள். ஆனால் திவாலரா கெஞ்சிப் பிச்சை கேட்கமாட்டான்; நீதியையே வேண்டுகிறான்" என்பது ஐரிஷ் ஆட்சித் தலைவனின் வீர வாக்கு. ஆனால் தாமஸோ, திவாலராவை "அசாத்தியமானவைகளை வேண்டும் பைத்தியக்காரன்" என்கிறான். இவ் விருவருக்கு மிடையே யிருக்கும் இக் கிடுகிடு பாதாளத்தை மூட சர் ஸ்டிராகோஸுக்கு தெய்வந்தான் துணையிருக்க வேணும்.

திவாலராவுக்கு அயர்லாந்தில் செல்வாக்கும் ஆதரவும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஐரிஷ் தொழிற் கட்சிக்காரர்களுங்கூட திவாலராவின் பக்கம் சேர்ந்துகொண்டார்கள். அயர்லாந்துப் பொது ஜனங்களும் அவரை அயர்லாந்து மன்னன் என்றழைக்கத் தலைப்பட்டுவிட்டனர். இனிமேலென்ன? நிரந்தரமான சமாதானம்! அல்லது நீடித்த போராட்டம்! இரண்டி லொன்றேதான் அயர்லாந்தில். இடை வழியில்லை.

N32-h.

## கவந்த வயிறு:

இவ்வளவு பணத்தையும் வாரி வாரி விழுங்க எங்கிருந்துதான் வந்ததோ வயிறு? "பிரீ பிரஸ் ஜர்னல்" ஜாமீனைக் கட்டியிருந்த ரூபாய் 10,000-த்தையும் பம்பாய் சர்க்கார் விழுங்கிவிட்டது. முந்தி ஒரு 6,000-த்தையும் ஏப்பம் விட்டுவிட்டது. ஆக ரூபாய் பதினாறு ஆயிரம் சர்க்காருக்கு ஜீரணம்: இனி இன்னொரு இருபதினாயிரமும் (20,000) வேண்டுமாம். என்ன செய்வது? ஆளப்படுவோர் எல்லாவற்றையும் சகிக்கத்தான் வேண்டும். முணு முணுக்கலாமா? மூச்சு விடலாமா?

"நொண்டிக் கழுதை சருக்கிய சாக்கிலே விழும்" என்றொரு பழமொழியை எல்லோருஞ் சொல்லிக் கொள்ளுகிறார்கள். 1930 ஏப்ரலில் இந்து சமூகத்திலிருக்கிற தீண்டாமையாகிற சாபக் கேட்டைக் கண்டித்து "இந்தச் சாப மிருக்கையில் இந்தியாவுக்கு சுயராஜ்ய மில்லை" என்கிற தலைப்பின் கீழ் மகாத்மா காந்தி யெழுதிய கட்டுரைதான் இப் பதினாயிரம் ரூபாய்ப் பறிமுதலுக்குக் காரணம். மகாத்மா அஹிம்ஸையின் அவதாரம்! அறப்பிளம்பு! சொல்லாலுங் கூடச் சர்க்காரையோ, வெள்ளை ஜாதியாரையோ அல்லது வேறெந்த எதிரியையோ மகாத்மா சுடமாட்டார். அப்பேர்ப்பட்ட பரமாத்மாவின் வாக்கில் கடும் பிரயோகமும் இராஜ துவேஷமும் இருப்பதாகக் கூறுவது ஆச்சர்யத்தைத் தவிர வேறில்லை.

## பூகம்ப மத்தியில் 'தேசோபகாரி':

இரங்கோன் 'தேசோபகாரி'ப் பத்திரிகை பூகம்பத்திலே பிறந்து, புயல் காற்றிலே வளர்ந்து, பிரளயகால மேகத்திலே கண் வளருகிறது. அடியடி தோறும் ஆபத்து நிறைந்த ஒற்றையடிப் பாதையிலன்றி நன்றாய்ச் செப்பனிடப்பட்ட ராஜபாட்டையில் ஒரு நாளேனும் அப் பத்திரிகை நடந்ததில்லை. தமிழ் பத்திரிகைகளில் இப்பொழு திருப்பவைகளிலாயினும் சரி, இதற்குமுன் தோன்றித் தோன்றி மறைந்தவைகளிலாயினுஞ் சரி 'தேசோபகாரியை'ப் போல் எது இவ்வளவு தியாகத்தையுஞ் செய்திருக்கிறது? ஆறேழு முறை அதன் ஆசிரியர்கள் சிறை சென்றிருக்கிறார்கள். ஒரு தரம் அதன் அச்சுக்கூடம் முழுதுமே பறிபோயிருக்கிறது. சமீபத்திலேதான் ஆசிரியர் செல்லம் பிள்ளை சிறை சென்றிருக்கிறார். அத்தோடும் போகாமல் ரூ. 3,000 ஜாமீனும் கேட்கப்பட்டிருக்கிறது.

197883
-600 008

# சோவியத் ருஷியா

ராஷ்டிரபதி ஜவஹர் லால் எழுதிய
ஆங்கில நூலின் பாஷாந்தரம்

விஷயத்தை விளக்கும் படங்கள்! கருத்தைக் கவரும் கருத்துக்கள்!!
அற்புதமான கொள்கை! அழகான நடை!!

தமிழ் சகோதர சகோதரிகளுக்கு ருஷியாவை அறிய ஆவலுண்டா? சோவியத் கொள்கைகளைத் தமிழர்கள் படித்துப் பார்க்க வேண்டுமா? பொதுவுடமைத் தத்துவத்தைத் தெரிந்துகொள்ள இஷ்டமிருக்கிறதா? சகோதரத்வம், சமத்வம், சுதந்திரம் இம் மூன்றும் வேண்டுமா? சோவியத் என்றாலென்ன? நிக்கோலே லெனின் என்பவன் யார்? அவனது அருமை பெருமையென்ன? அவன் வகுத்த வேதம் யாது? அவனையேன் சுதந்திர தெய்வமாக ருஷியர்கள் வணங்குகிறார்கள்? ருஷியாவில் எழுதப் படிக்கத் தெரியாதவன் எவனுமே யில்லையாமே? ஆணும் பெண்ணும் அங்கு சரி சமானயாக வாழ்கிறார்களாமே?

இவைகளை எல்லாம் நன்கு-ஐயந்திரிபறத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் பண்டித ஜவஹர் லால் ருஷியாவுக்குச் சென்று பிரத்தியக்ஷமாகக் கண்டு, கேட்டு, அறிந்து, ஆராய்ந்து எழுதியுள்ள இந் நூலைப் படியுங்கள்! அறியுங்கள்!! அனுபவியுங்கள்!!!

உலக மெல்லாம், உலக மக்களனைவரும் சோவியத் ருஷியாவையும், அதன் அமர நிலையையும் கண் கொட்டாமல் கவனித்து வரும் போது தமிழர்கள் மாத்திர மென்ன குருடர்களா? கண்டிப்பாய் சோவியத் ருஷியாவைக் காணவே செய்வார்கள்! படிக்கவே செய்வார்கள்! சந்தர்ப்பமுங் கைமேலிருக்கிறது.

நல்ல காகிதம்! சுத்தமான பதிப்பு!!

விரிவான நூல்! விலை ரூபாய் ஒன்றே!

மானேஜர், "பாரதி" புத்தகாலயம்.

பொறுப்பாசிரியர் திரு. ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில், அச்சிட்டு பிரசுரிக்கப்படுகிறது.

# T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900,000 பங்குகளின்பேரில்
2,700,000, ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்செயின்மெண்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக்கனுப்பினைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி, டில்லி, கான்பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்துவருவதோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆதரிஸ் சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்துவரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்க புகழையுமடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்),
கோம்பை, மதுரை ஜில்லா.

ஸ்திரீ ரத்தினங்களின் சிரோரத்தினம்

# ஸ்ரீமதி சரோஜ் நளினி தேவியின்



தந்தையார்.



தாயார்.



நளினியும் குமாரனும்.

விரிவான சரித்திரம்! விரைவில் வெளிவ

சித்திரப் படங்கள் பல்வற்றுடன் அச்சிலிருக்கிறது

"பாரதி" புத்தகாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.